# மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்



முனைவர் தேவதத்தா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்

முனைவர் தேவதத்தா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை-600 113

பெரியார் ஈ.வெ.ரா. மணியம்மை அறக்கட்டளைச்
சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: பெரியார் ஈ.வெ.ரா. மகளிர் அணி )

வரிசை எண் : 1 நாள் : 1.9.2005

BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Mounathin Athirvugalum Mozhiyum - penn |
| Author | : | Dr. Devadatta<br>Prof. & Head of the Dept. of Tamil (Retd.)<br>Mother Teresa Women's University<br>Kodaikanal. |
| General Editor | : | Dr. S. Nirmaladevi<br>Research Assistant<br>International Institute of Tamil Studies |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113.<br>Ph: 22542992 |
| Publication No. | : | 546 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xvi + 110 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 40/- (Rupees Forty Only) |
| Printed by | : | BHAGYA GRAPHIQ (P) LTD<br>1/528.Sabari Nagar 4th EXTN.,Mugalivakkam.<br>Chennai-600 116. |
| Subject | : | Feminism |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

## அணிந்துரை

ஆண்களும் பெண்களும் சரிசமமானவர்கள் என்பதன் அடையாளக் குறியீடு உமையொரு பாகன் வடிவம் என்பர் புராணவியலார். ஆயின் ஆணாதிக்கச் சமுதாயம் உருப்பெற்ற காலக் கட்டத்தில் ஆணை விடவும் பெண் ஒரு படி தாழ்ந்தவளாகவும், ஆணைச் சார்ந்து நிற்பவளாகவும் ஆக்கப்பட்டாள். தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் சனநாயக ஆட்சி பல நாடுகளில் உருவானது. அதன் பின்னும் சனநாயக உரிமைகள் எனக் கருதப்படும் கல்வி, வேலைவாய்ப்பு, சொத்துரிமை, வாக்களிக்கும் உரிமை ஆகியன மறுக்கப்பட்டு மூலையில் முடக்கப்பட்டாள் பெண். இந்நிலைகளை எதிர்த்து மேலைநாட்டுப் பெண்கள் உரிமைக்குரல் எழுப்பினர். அவ்வுரிமைக்குரல் இந்தியாவிலும் எதிரொலித்தது.

பெண்கள் விழிப்புணர்வு பெறவும், எழுச்சிபெறவும் களத்தில் இறங்கிப் போராடியவர் ஈ.வெ.ரா. ஆவார். அவருடன் தோளோடு தோள் நின்று பணி புரிந்தவர் மணியம்மை. அவர்கள் பெயரில் நிறுவனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பெரியார் - மணியம்மை அறக்கட்டளையின் சார்பில் நிகழும் 'மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்' என்ற அறக்கட்டளைச் சொற்பொழிவு நூலாக வெளியிடப்பெறுகின்றது.

மௌனத்தின் உரத்தகுரல், தணிக்கையும் மீறலும், பெண் கவிஞர்கள் - பெண் மொழி என்ற மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ள இந்நூலில் மேலை நாட்டில் பெண்ணியம் தோன்றி வளர்ந்த வரலாறு, இந்தியாவில் பெண் விடுதலை இயக்கங்களின் செயல்பாடுகள், பெண்மொழி உருவாக்கம் மற்றும் பயன்பாடு, பெண் கவிஞர்களின் கவிதைகளில் காணப்படும் பெண்மொழி ஆகியன குறித்த கருத்துகள் ஆய்வு நோக்கில் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

சிறப்பான முறையில் சொற்பொழிவாற்றி நூல் உருவாக்கத்துக்கும் பல்லாற்றானும் துணைபுரிந்த இந்நூலாசிரியர் முனைவர் தேவதத்தா அவர்கள் பாராட்டுக்குரியவராகிறார்.

இவ் அறக்கட்டளையின் பொறுப்பாளராக இருந்து இந்நூல் வெளிவரப் பெரிதும் துணை நின்ற முனைவர் சூ. நிர்மலாதேவி அவர்களுக்கு நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்பு செய்த நிறுவனக் கணிப்பொறியாளர் திருமதி பி.கௌசல்யாவுக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த பாக்யா கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

*31-08-2005* **இயக்குநர்**

# ஆசிரியரைப் பற்றி . . .



சென்னை இராணிமேரி கல்லூரியிலும் மாநிலக் கல்லூரியிலும் பயின்று பட்டங்களைப் பெற்றபின் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் மு. வரதராசனாரின் கீழ் ஆய்வு மாணாக்கியாக இருந்து முனைவர் பட்டத்தைப் பெற்றவர்.

இவரது ஆய்வு - சூளாமணி ஓர் ஆய்வு என்பது. பள்ளத்தூர் சீதாலட்சுமி ஆச்சிமகளிர் கல்லூரியிலும் குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியிலும் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். பின்னர் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பேராசிரியராகவும் தலைவியாகவும் ஏறக்குறைய 15 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

மகளிர் பல்கலைக்கழகத்தில் பதிவாளராகவும், தேர்வாணையாளராகவும் பணியாற்றும் வாய்ப்பையும் பெற்றவர். சென்னை தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தில் முதுநிலை ஆலோசகராக ஓராண்டு பணிபுரிந்தவர். ஒரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் இருக்கும் கல்வியாளர் ஒருவர்க்குக்கிடைக்கும் அனைத்து வாய்ப்புகளையும் பெற்றவர்.

நெறியாளராக அமைந்து 14 முனைவர் பட்ட ஆய்வாளர்களையும், 12க்கும் மேற்பட்ட இளநிலை ஆய்வாளர்களையும் உருவாக்கியவர். பெண்ணியம் பற்றிய இரு நூல்களைத் தந்தவர். பல்வேறு கருத்தரங்குகளை தேசிய அளவில் நடத்தியவர்.

தாய்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பெண்ணியம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியவர். சாகித்திய அக்காடமியின் தமிழுக்கான இறுதித் தேர்வுக்குழுவின் மூன்று உறுப்பினர்களில் ஒருவராக இருமுறை பணியாற்றியவர். பெண்ணுரிமை இயக்க உறுப்பினராக இருந்தவர். ஓய்வுபெற்றபின் சென்னை காந்தி கல்வி நிலையத்தோடு தன்னை இணைத்துக் கொண்டவர்.

# சில பகிர்வுகள் . . .

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைக்கு முன்னரே 1977ல் சென்னையில் துவக்கப்பட்ட பெண்ணுரிமை இயக்கத்தில் நான் ஒரு சாதாரண உறுப்பினராக இருந்து வந்தேன். எப்போதாவது நேரம் கிடைக்கிறபோது அவர்களின் செயல்பாடுகளில், போராட்டங்களில் பங்கு பெறுவதுண்டு. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக - துறைத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட அது ஒரு தகுதியாக இருந்தது என்பதை நான் குறிப்பிட வேண்டும். எனக்குப் பெண்கள் மீதான ஏதோ ஒருவிதமான அக்கறைகளைக் காட்ட அது ஒரு சிறிய சாதகமான அளவுகோலாக அமைந்தது என நினைக்கிறேன்.

பெண்களின் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட உயராய்வுக் கல்வி நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு பெண்களின் பிரச்சனைகளை மேலும் அறிந்து கொள்ளவும் தெளிவாக்கிக் கொள்ளவும், அவற்றைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும் பெரிதும் தூண்டுகோலாய் ஆயிற்று. அது மனதில் ஓரளவு சுயநலத்தை மறக்கவும் சமூகத்தில் பெண்களுக்கான இருப்பை அறியவும் வழி வகுத்தது.

பின்னர் ஏறக்குறைய 15 ஆண்டுகள் பேசிய பேச்செல்லாம், எழுதிய எழுத்தெல்லாம் (எழுதியவை. . . கொஞ்சம்தான்!) மகளிரியல் பற்றியும் பெண்ணியம் பற்றியுமாகவே ஆனது.

இதுவே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலிருந்து வந்த கடிதத்திற்கும் இசைவு தர முதற்காரணமானது.

பெண்ணடிமை நீங்கத் தொடர்ந்து போராடியவரும் எத்தனையோ கருத்தாக்கங்களையும் சமூகக் கட்டுப்பாடுகளையும் மிகத் தீவிரமாக எதிர்த்துப் போராடியவரும் பெரியார் அவர்கள் என்பதை அறியாதார் இல்லை. பெண் விடுதலைக்கு அவரைப் போல் தீவிரத்தோடு போராடியவர்கள் இல்லையென்றே கூறலாம். ஆனால் அந்தத் தீவிரப் போராட்ட உணர்வும் பெண் விடுதலைக்கான செயல்பாடுகளும் அவர் கோட்பாடுகளைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்பவர்களால் பெரும்பாலும், ஏன் முழுமையாகக் கூட மறக்கப்பட்டது எனலாம்.

1928ல் பெரியார் தலைமையில் செங்கல்பட்டில் நடந்த மாநாட்டில் பெண்களுக்கு 50 விழுக்காடுகள் இடம் ஒதுக்க

வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த மாநாட்டின் சிறப்பே அது எனலாம். ஆனால் அது அவரைப் பின்பற்றியவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. வசதியாக மறந்தும் போயினர் என்பதுதான் அவலம். பெரியாரின் சீர்திருத்தப் போராட்டங்களுக் கெல்லாம் உறுதுணையாக இருந்தவரும் இணையாக நின்று அவர் வாழ்க்கையைப் பகிர்ந்து கொண்ட பெருமைக்குரியவரும் ஆவார் மணியம்மையார். அவர்களுடைய பெயரால் அமைக்கப்பட்ட 'பெரியார் மணியம்மை' அறக்கட்டளைச் சொற்பொழிவு என்பது என் இசைவிற்கு மற்றொரு முக்கியக் காரணம்.

பொதுத்தலைப்பு 'பெண்ணியம்' என்றிருந்தது மனதிற்கு பிடித்தமாக இருந்ததும் நான் ஒத்துக்கொள்ள ஒரு காரணம். பெண்ணியம் என்பது ஆண்களை வெறுப்பதும் எதிர்ப்பதும் என்று ஒரு சாரார் நினைக்கின்றனர். குடும்பத்தை உடைத்து, குழந்தைகளைத் துறந்து, வீட்டைவிட்டு வெளியேறுவதுதான் பெண்ணியம் என்று கொச்சைப்படுத்திப் பேசிவருவது பல ஆண்டுகளாய் வாடிக்கையாய்ப் போனது. அதனால்தான் பெண் உரிமையை விரும்புபவர்களும் போராடுபவர்களும் பெண்விடுதலைக்காக எழுதுபவர்களும் கூடத் தங்களைப் பெண்ணியவாதி என்று சொல்லத் தயங்குகின்றனர்; சிலர் தீவிரமாக மறுத்தும் பேசுகின்றனர்.

இந்தக் கருத்தாக்கங்கள் அனைத்தும் பெண்ணியத்தைத் தவறாகப் புரிந்து கொண்டதின் விளைவாகும். பெண்ணியத்தின் உண்மையான கோட்பாடுகளைப் புரிந்து கொள்வோர் அது பெண்விடுதலைக்கு மட்டுமன்றி ஆண்களுக்குமான விடுதலையை நோக்கிச் செல்வது; அந்தப் பயணத்தின் முடிவில் சமூகத்தின் ஒட்டு மொத்தமான விடுதலைக்கு வழிவகுப்பது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அப்போது தங்களைப் பெண்ணியவாதி என்று சொல்லிக் கொள்வதில் தயக்கம் காட்டாமல் பெருமிதமே அடைவர். இல்லையென்றாலும் இழப்பொன்றுமில்லை.

என் இசைவைத் தந்தபின் மனதில் சிறு குழப்பம். எந்தத் தலைப்பில் பேசுவது? எது பொருத்தமாக இருக்கும்? புதிய செய்தியாக ஏதேனும் சொல்ல எது உதவும்? இப்படியான வினாக்கள் மீண்டும் மீண்டும்.

பெண்ணியம், தோற்றம், வளர்ச்சி, வகைகள், செயல்பாடுகள் இப்படிப்பலப்பல செய்திகளைப் பலரும் நூல்களாகக் கட்டுரைகளாக ஏற்கனவே எழுதியுள்ளார்கள். அதனால் அதைப்பற்றி எழுதுவது

என்பது அலுப்பைத் தரும் விஷயம் என்பதோடு அவசியமற்றதுமாகும் என்ற எண்ணம் மேலோங்கியது. மாற்றுத் தலைப்புக்கான சிந்தனையில் நாள் சில கழிந்து போயின.

உலகத்தின் சரிபாதியாக உள்ள பெண்களுக்கான வரலாறு ஏதுமில்லை. ஆனால் அவர்கள்தாம் வரலாற்றைப் படைத்தவர்கள். இது பல நூற்றாண்டு காலமாய் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும்போன விஷயம். பெண்களின் குரல் வரலாற்றில் ஒடுக்கப்பட்டதாக அடக்கப்பட்டதாக ஆகிப்போனது.

மனித நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் பெண்கள் வழங்கிய பங்களிப்பு அங்கீகரிக்கப்படாமலேயே காலம் கரைந்து போனது. வரலாற்றில் அவர்களுடைய மௌனக்குரல் மட்டுமே இடம்பெற்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த இலக்கியங்களைத் தமது சொத்தாக்கிக் கொண்ட தமிழக வரலாற்றிலும் ஔவையார், காக்கைப்பாடினியார் போன்ற சிலரைப் பெற்றிருந்த சங்ககாலத்திற்குப்பின் குறிப்பிடும்படியாக யாருமில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின் காரைக்கால் அம்மையாரும் ஆண்டாளும் முக்கியத்துவம் பெற்றவர்கள் எனலாம். பெண் சார்ந்த ஆணாதிக்கப் பார்வைக்கு எதிராகக் குரல் எழுப்பிய பாரதிக்குப்பின்னும் சொல்லும்படியான பெண்கவிஞர்கள் யாரும் இல்லை.

ஏனென்றால் ஆண்களின் ஆதிக்கமும் அதிகாரமுமே வரலாற்றை ஆக்ரமித்திருந்தன. அவர்களின் அனுபவங்கள் அவர்களின் பார்வை, அவர்கள் அமைத்த பெண்ணுக்கான புனைவுகள், சட்டதிட்டங்கள் அனைத்தும் அவர்களுடையதாகவே இருந்தன. அதிகாரம் ஆண்கள் கையில் இருந்ததால் மொழியையும் அவர்கள் எளிதாகக் கையகப்படுத்திக் கொண்டனர். இலக்கியம், இலக்கணம் அனைத்தையும் அவர்கள் பார்வையிலேயே உருவாக்கினர். அதனால் பெண்ணுக்கான மொழியும் இல்லாமல் போனதால் ஆண்கள் பார்வையில் - அவர்கள் சொல்லாடல்களைப் பயன்படுத்தியே பெண்களும் எழுதலாயினர்.

ஆணின் கட்டுப்பாட்டில் நீண்டகாலமாக இருந்து வந்த மொழியோடு பெண் எழுத்தாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு, பெரு முயற்சி செய்த பெண்களுக்கான சொல்லாடலை உருவாக்குவது அடிப்படைத் தேவையாயிற்று. அதன் விளைவாக, நவீனப் பெண் கவிஞர்கள் பலரும் இந்த முயற்சியில் சில ஆண்டுகளாகத் தங்கள் முத்திரையை ஆழமாகவே பதித்து வருகின்றனர்.

எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் இவர்களது எண்ணிக்கை அதிகமாயிற்று. சுகந்தி சுப்ரமணியன், கி. விஜய லட்சுமி, இரா. ஆனந்தி, கனிமொழி, இளம்பிறை, சல்மா, குட்டி ரேவதி, சுகிர்தராணி, மாலதி மைத்ரி, வெண்ணிலா, உமா மகேஸ்வரி, வத்ஸலா, க்ருஷாங்கினி, வைகைச் செல்வி, ரிஷி இன்னும் சிலர். ஈழத்திலும் அ. சங்கரி, சி. சிவரமணி, சன்மார்க்கா, செல்வி, அவ்வை, ஊர்வசி, ஆழியாள் போன்றோர் குறிப்பிடத்தக்க பெண்கவிஞர்கள்.

ஆண் ஆதிக்க அதிகார அமைப்பு, புனைந்து தந்த கற்பிதங்கள் வழி, தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள் அதனின்றும் விடுவித்துக்கொண்டு விடுதலை அடைவது என்பது நாம் நினைப்பது போல அவ்வளவு எளிதான காரியமன்று; இமாலய முயற்சிதான்.

எப்படியாயினும் தொடர்ந்து போராட வேண்டிய நிலைமைதான். போராடுவது நம் கடமையாகிறது. இங்கு நாம் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். அதாவது நமது எதிரிகள் ஆண்கள் அல்லர். ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்புதான்; ஆண் ஆதிக்கத்திற்கு எதிராகவே நமது போராட்டம் தொடரும்; அதைத்தான் கட்டுடைத்து வெல்லவேண்டும். ஏற்கனவே பலகாலமாய் ஆணிவேராய்ப் படர்ந்திருக்கும் கருத்தாக்கங்களைத் தலைகீழாய்ப் புரட்டிப் போடும் செயலை, அமைப்பைச் சிதைப்பதின் மூலம் செய்கிறோம்; அது தவிர்க்க முடியாதது.

நவீனப் பெண்கவிஞர்கள் பெண்களின் உடல் பற்றியும் உடல் ரீதியான உணர்வுகள் பற்றியும் உடலின் பட்டுணர்வு பற்றியும் வெளிப்படையாக எழுதியது, ஆண் ஆதிக்க அதிகாரத்தின் வேர்களை அசைத்து விட்டது. அதனால் பெண் கவிஞர்கள் மீதான விமர்சனம் அவர்களின் கவிதைகளின் தரம் பற்றியதாகவோ அதன் கவித்துவம் பற்றியதாகவோ இல்லாமல், அவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கும் விமர்சனங்களாக வருவதையும் நாம் கேள்விப்பட்டு வருகிறோம்.

இடையில் வாசிக்கும் என் ரசனை மாறியதால் கவிதை வாசிப்பு பெருமளவிற்குக் குறைந்து போனது. இச்சூழலில் மீண்டும் பெண்கவிஞர்களின் கவிதைகளை வாசிக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டேன்.

முதலில் எதுவும் புரிபடவில்லை. ஏதோ ஒரு கவிதை, முன்பு எப்போதோ, புரியவில்லை என்று கூறியபோது கவிஞர் கலாப்ரியா, 'புரியாததற்கு ஒன்றுமில்லை; படியுங்கள்' என்று கூறியதும் பெண்மொழி

பற்றிக் கேட்டபோதும் 'அதில் ஒன்றும் சிக்கலில்லை. அன்றாட வாழ்க்கையில் கிராமத்துப் பெண்கள் பேசுவதுதான்' என்று சொன்னதும் எனக்குத் தெம்பூட்டின.

பெண்மொழி என்பதைப் பற்றியே எனது உரை அமைய வேண்டுமென்ற எண்ணம் அப்போதே உறுதிப்பட்டு விட்டது.

கவிதைகளைப் படித்தபோது விலக்கப்பட்டனவும் மறுக்கப்பட்டனவும் வெளிப்படையாகத் தங்கள் கவிதைகளில் பெண்கள் தீவிரமாகப் பேசியதே கண்டனத்திற்கும் கூச்சலுக்கும் காரணமானதைக் கவனத்தில் கொள்ள முடிகிறது.

மேலும், பெண் மொழியைப் பற்றிய பலகட்டுரைகளைத் தவிர நூல்கள் ஏதும் முழுமையாக வெளிவராததும் என் கவனத்தை ஈர்த்தது.

இதுவரை பெண்மொழி பற்றி வந்தவை

| | | |
|---|---|---|
| முனைவர் பஞ்சாங்கம் | - | பெண் - மொழி - புனைவு |
| பிரேம் ரமேஷ் | - | பின் நவீனத்துவம் |
| | - | பெண்மை என்னும் அழிவு சக்தி. |
| முனைவர் அரங்க மல்லிகா | - | பெண்ணிய குரல் அதிர்வும் த லி த் பெ ண் ணி ய உடல்மொழியும் |
| செல்வி திருச்சந்திரன் | - | மொழியும் ஆண் வழிச் சமூக அமைப்பும் |
| முனைவர் அரங்க. நலங்கிள்ளி | - | தமிழ்மொழி ஒரு பெண்ணிய நோக்கு |

அதனால் பெண்மொழியில் ஏதேனும் சொல்ல வாய்ப்பிருக்குமென்ற நம்பிக்கை துளிர்த்தது.

பெண்களின் படைப்பைப் பெண்ணியப் பார்வையில் ஆராய்வது பெண்ணியத் திறனாய்வு என்பர். இதைப் பெண் நிலைத் திறனாய்வு என்றும் வழங்குவர். இதை ஆங்கிலத்தில் 'Gymo Criticism.' என்று கூறுவர். எலைன் ஷோவால்டரை (Elaine Showalter) இத்திறனாய்வின் தாய் எனக் கூறலாம். இச்சொற்றொடரை ஆக்கியவரும் அவரே. பெண்ணியத்திறனாய்வின் கூறுகளை அவர் வரையறுக்க முயல்கிறார். அவற்றுள் சில

* பெண்களின் அனுபவங்களை ஆராய்வதின் மூலம் பெண்களுக்கு உரிய புதிய மாதிரிகளை வடிவமைப்பது.

* பெண் எழுத்துகளைப்பற்றிப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்ய வேண்டுமென்ற கருத்து.

* பெண்ணியத்திறனாய்வு என்பது பெண் எழுத்துகளின் வரலாறு, நடை, கரு, வகை, அமைப்பு உளவியல் சார்ந்த அனைத்தையும் உள்ளடக்கியது.

* பெண்களுக்குரிய ஒரு மொழியைப் பற்றிய கருத்தாக்கத்தை வடிவமைப்பதில் முக்கியக் கவனம் செலுத்துவது.

* ஆண்களின் திறனாய்வுக் கொள்கைகள் மூலம் மதிப்பிழக்குமாறு செய்ய பெண் எழுத்துகளைக் கண்டெடுத்து மீட்டெடுப்பதில் பெரிதும் கவனம் கொள்வது.

பஞ்சு, பெண்-மொழி-புனைவு, ப76.

எனவே பெண்கவிஞர்தம் கவிதை மொழியைப் பெண்ணியத் திறனாய்வின் மூலம் பார்க்க முடிவு செய்து கொண்டேன்.

பல கவிதைத் தொகுப்புகளை வாசித்துப் பார்த்தேன். முதல் வாசிப்பில் எதுவும் புரிபடாததால் திருப்தியில்லை. மீண்டும் ஒரு முறை வாசித்தபோது, கவிதையின் பொருண்மை மொழி, நடை, கரு ஆகியன ஓரளவு வசப்பட்டன. மொழியின் வீரியமும் படிமங்களும் வியப்பை அளித்தன.

பெண்விடுதலையை விரும்புவோர் பெண்களுக்கான பொதுவான பிரச்சனைகளை மட்டும் எழுதினால் போதாது. இதுவரை இருந்துவரும் ஆண்மொழியைப் புறக்கணித்துப் பெண் மொழியைக் கையகப்படுத்த வேண்டியுள்ளது. அப்பொழுது பெண்பால் உறுப்பைக் குறிக்கும் வார்த்தைகளைப் பயன்படுத்தினால் மட்டும் அது பெண்மொழி ஆகிவிடாது. பெண்மொழி, ஆண் ஆதிக்க அரசியலைப் பெண்ணொடுக்கு முறைக்கு எதிரான குரலை எழுப்பும் நிலையிலேயே உருவாக முடியும். மேலும் பெண் ஆணுக்கான மொழியைத் தனது மொழிக்குள் வசப்படுத்தும்போது விடுதலை சாத்தியமாகலாம்.

இப்படிப்பட்ட குரல்களில் ஒலிக்கும் பெண்கவிஞர்களின் கவிதைகளே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் உடல்மொழியே வெகுவாகப் பேசப்படுகிறது.

பத்துக்கும் மேற்பட்ட பெண்கவிஞர்களின் தொகுப்புகளும் 50க்கும் மேற்பட்ட கவிஞர்களின் தேர்ந்தெடுத்த கவிதைத் தொகுப்பாகிய 'பறத்தல் அதன் சுதந்திரம்' என்பதும் ஈழத்துக் கவிஞர் சிலரின் கவிதைகளும் இந்நூலுக்கு உரியனவாக வரையறை செய்து கெண்டேன்.

மேற்கூறிய தொகுப்புகளில் பெண்மொழி இடம்பெற்றுள்ள சில கவிதைகளையே எடுத்துக்கொண்டுள்ளேன். தேர்ந்தெடுப்பதில் என் சுதந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

சிறப்பாகப் பெண்மொழியைப் புலப்படுத்தும் கவிதைகள் சில விடுபட்டிருக்கலாம். அதற்கான சாத்தியக் கூறுகளே அதிகம். ஏனென்றால் நான் எல்லோருடைய கவிதைகளையோ ஒருவருடைய அனைத்துக் கவிதைகளையோ எடுத்துக் கொள்ளாததே அதற்கான காரணமாகலாம்.

நான் எடுத்துக் கொண்ட கவிதைகள் என் நோக்கத்திற்குப் பொருத்தமானவை என்ற உணர்வும் உறுதியும் எனக்குண்டு.

தமிழகத்துப் பெண்கவிஞர்களின் கவிதைகள் ஆண்மொழியை முற்றுமாக அழித்து, பெண்மொழியை உருவாக்கும் போக்கை உணரமுடிந்தது. ஈழத்தில் ஏற்பட்ட போரின் நெருக்கடியும் தீவிரமான அரசியல் நெருக்கடியும், தமிழ்த் தேசிய இயக்கத்தின் எழுச்சியும் ஈழத்துப் பெண்கவிஞர்களைப் பெரிதும் பாதித்து விழிப்படையச் செய்தது. அதன் விளைவாக அவர்களின் சுய இழப்புகள் குறித்து எழுதும் போதும் அவை தம் தரத்தை விரிவாக்கிக் கொண்டதையும் கண்டறிய முடிந்தது.

'காலச்சுவடு' சார்பில் 21-11-2004 அன்று நடத்திய 'ஒடுக்குமுறைக்கு எதிரான அரங்கும்', 27-3-2004 அன்று 'புதுவை அணங்கு' நடத்திய 'இலக்கிய மரபும் பெண்ணும்' என்ற கருத்தரங்கும் பெண்மொழியைப் பற்றிய தெரிவிற்குப் பெரிதும் உதவின. மேலும் பெண்மொழியைப் பற்றிய தேடலும் அறிதலும் எத்துணை முக்கியத்துவம் வாய்ந்தன என்பதை உணரவும் வழிகோலின.

எடுத்துக்கொண்ட பொருண்மை கருதிச் சான்றாகத்தரும் மேற்கோள் கவிதைகள் நீண்டதாக உள்ளன. அப்போதுதான் கவிதையில் ஆற்றலோடு இடம்பெற்றுள்ள பெண்மொழியை அறிய இயலும். ஆண் ஆதிக்க அதிகார அரசியலை அழித்துப் பெண் தனக்கான அரசியலை உருவாக்குவதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் என்பதும் முக்கியக் காரணம்.

சில இடங்களில் கவிஞர்களின் கவிதைப் பொருளை உரைநடையில் தந்தபோதும் கவிதையின் சொற்களை வேண்டுமென்றே பயன்படுத்தியுள்ளேன். முன்னும் பின்னும் என் புரிதல்கள்; விமர்சனங்கள்.

இனி நூலைப்பற்றி . . .

முதல் இயலான மௌனத்தின் உரத்த குரல் மேலைநாட்டில் பெண்ணியம் தோன்றி வளர்ந்த சூழலையும் அதன் முக்கிய வகைகளையும் விளக்குகிறது. அதனைத் தொடர்ந்து இந்தியாவில் பெண்விடுதலைக்கான இயக்கங்களின் செயல்பாடுகளைப் பற்றியும் வேறு சில அமைப்புகளின் செயல்பாடுகளையும் எடுத்துரைக்கிறது. இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இந்நூலில் சில ஆண்டுகளுக்கு முன்னால் 'மேலும்' இதழுக்கு நான் எழுதிய 'பெண்ணியம் ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற கட்டுரை பெரிய மாற்றங்கள் ஏதுமின்றி இடம் பெற்றுள்ளது.

'தணிக்கையும் மீறலும்' என்பதில் பெண்மொழியை மையப்படுத்திப் பேசுவதால் மொழியைப் பற்றிய மொழியியலார் சிந்தனைகளும் அவற்றைப் பெண்ணியலார் பயன்படுத்திக் கொண்ட தன்மையும் சுருக்கமாகப் பேசப்படுகின்றன. அத்துடன் பெண்ணெழுத்து எல்லாக் காலத்திலும் எப்படி நெருக்கடிக்கு ஆளாகியது என்பதைக்காட்ட அஸ்மிதா குழு பதிவு செய்த பெண் எழுத்தாளர்களின் அனுபவங்களை அவர்கள் வார்த்தைகளிலேயே சுருக்கமாகத் தந்துள்ளேன்.

பெண்கவிஞர்கள் - பெண்மொழி என்ற மூன்றாவது இயல் பெண் கவிஞர்களின் கவிதைகளில் பெண்மொழி பற்றி ஆராய்கிறது. நிறைவுரையில் என் கருத்துகள் சில உள்ளன.

பயன்படுத்திய நூல்களின் பட்டியலும் இறுதியில் பின் இணைப்பாகப் பெண் கவிஞர்கள் பற்றிய சிறு குறிப்புகளும் உள்ளன.

பெண் கவிஞர்களின் கவிதைகளை விரிவாகவும் ஆழமாகவும் படிக்க எனக்கு அரிய வாய்ப்பினை அளித்த உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பெரியார் மணியம்மை அறக்கட்டளைச் சொற்பொழிவை நடத்தும் பொறுப்பை ஏற்றுள்ள முனைவர் கு. நிர்மலாதேவியைச்

சந்தித்தபோதெல்லாம் என் சுதந்திர உணர்வை அநுபவிக்க முடிந்தது. அவர்களுக்கும் என் நன்றி.

நூலகத்துணையின்றி ஆய்வில்லை. தேவைப்பட்ட நூல்களை அவ்வப்போது அன்புடன் தந்து உதவிய நூலகர் திருமதி பார்வதி அவர்களுக்கும் அவர்களுடன் பணிபுரியும் சகோதரர்களுக்கும் நன்றி கூறுவதில் மனநிறைவு கொள்கிறேன்.

நூலின் பக்கவடிவை அமைக்கவும் அச்சுப் பிழைகளைத் திருத்தவும் உதவிய முனைவர் ஜெயகுமார், கணினியில் வடிவமைத்துத் தந்த திருமதி பி. கௌசல்யா ஆகியயோர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

பெண் கவிஞர்கள் தம் கவிதைத் தொகுப்புகளையும் வேறுபல புதிய விமர்சன நூல்களையும் எனக்கு வேண்டும் போதெல்லாம் தந்து உதவியதோடு பெண்மொழி பற்றிய விவாதங்களைப் பல நேரங்களில் என்னுடன் செய்தவருமான முனைவர் அரங்க மல்லிகா, பெண்மொழி பற்றிய சில ஆங்கிலக் கட்டுரைகளைக் கொடுத்து உதவிய முனைவர் காதம்பரி ஆகிய இருவர்க்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் கையெழுத்துப் பிரதியைத் தெளிவாக, அழகான எழுத்தில் பிரதி எடுத்து உதவிய செல்வி கோமதி, எம்.ஏ., அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றி.

பெண் கவிஞர்கள் பற்றிய குறிப்புகளை திருமதி க்ருஷாங்கினி அவர்கள் தொகுத்த பறத்தல் அதன் சுதந்திரம் என்ற நூலிலிருந்து பயன்படுத்திக்கொள்ள அன்புடன் இசைவு தந்த கவிஞர் க்ருஷாங்கினி அவர்களுக்கு என் நன்றி பல.

ஏறக்குறைய 40 ஆண்டுகளாய் என் செயல்பாடுகள் அனைத்திலும் ஈடுபாடு காட்டி என் பணியைச் செம்மையாய்ச் செய்ய எப்போதும் எல்லா விதத்திலும் எனக்குத் துணையாய் அமைந்து ஊக்கமளித்து வரும் திருமதி இராஜலட்சுமி கிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தேவதத்தா

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| I | மௌனத்தின் உரத்த குரல் . . . . . . | 1 |
| II | தணிக்கையும் மீறலும் . . . . . . | 36 |
| III | பெண் கவிஞர்கள் - பெண்மொழி . . . | 58 |
| IV | நிறைவுரை . . . . . . . . . | 94 |
| V | பின் இணைப்பு . . . . . . . . . | 103 |
| VI | நூல் பட்டியல் . . . . . . . . . | 108 |

# 1

# மௌனத்தின் உரத்த குரல்

## மேலைநாட்டில் பெண்ணியம்

மனிதகுலத்தின் சரிபாதியான பெண்கள் ஆணுக்கு நிகரான சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவில்லை; சுவாசிக்கவிடவுமில்லை சமூகம். வானத்துச் சூரியனும் நிலவும் அனைவருக்கும் சமமாகத்தானே ஒளியைத் தருகின்றன? பின் ஏன் மானுடச் சமூகத்தில் ஆணுக்கு இணையாக இருக்கும் பெண்ணுக்கு மட்டும் இந்தநிலை? மனித குலத்தின் சரிபாதியாக இருக்கும் பெண்கள் அடிமைகளாக இருக்கலாமா? பெண்கள் விடுதலை பெற்றுச் சுதந்திரமாக இயங்கமுடியாத சூழலில் ஆண்கள் மட்டும் எப்படிச் சுதந்திரம் உடையவர்களாக உலாவ முடியும்? இந்த அடிப்படை உணர்வைக் கூட அறிந்து, தெளியாதவர்கள்தாம் உலகமெங்கும் பெண்ணைத் தாழ்வாக மதித்து ஒடுக்கிய குரூரச் செயலுக்கு ஆளாக்கி, பெண்ணை அடிமையாக்கி ஆளத் தொடங்கினர்; ஆதிக்கம் செலுத்தினர்; பெண்ணை உடைமையாகக் கருதி, போகப்பொருளாக்கினர். ஆனால் ஆண்களின் இணையாக இருக்கும் பெண்கள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்கள் அடிமைத்தளையில் என்றும் கட்டுண்டு இருக்கமாட்டார்கள் என்பதே வரலாறு காட்டும் உண்மையாகும். பெண்களின் இந்த வரலாறே பெண்ணியத்தின் வரலாறு எனலாம்.

பெண்ணியம் அல்லது பெண்நிலை வாதம் என்றால் என்ன? பெமினிசம் (Feminism) என்று கூறும் சொல்லே தமிழில் பெண்ணியம் என்று வழங்கப்படுகிறது. இந்தச் சொல் பெண்ணைக் குறிக்கும் femine என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோன்றியது. பெண் என்னும் சொல் 'பெண்களுக்குரிய இயல்புகளை உடையவள்' என்று பொருள்படும். பெண்ணியம் என்ற சொல் 1890இல் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும் பெண்ணுரிமைகளைப் பெறச் செயற்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகின்றது. எனினும் பெண்ணியம் என்ற சொல் 19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலுந் தான் பெருவழக்கில் வந்தது. அப்போது

பெண்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தையும் அது குறித்தது.

- கல்வி
- வேலைவாய்ப்பு
- சொத்துரிமை
- வாக்களிக்கும் உரிமை
- நாடாளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை
- பிறப்புக்கட்டுப்பாடு செய்யும் உரிமை
- விவாகரத்து செய்யும் உரிமை

போன்றவற்றை ஜனநாயக உரிமைகள் எனலாம்.

Feminism என்னும் சொல்லுக்கு இணையாகத் தமிழில் பெண்ணிலைவாதம் என்றும் பெண்ணியம் என்றும் இரு சொற்கள் வழங்கப்படுகின்றன. இந்த நூலில் பெண்ணியம் என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

பெண்ணியம் என்பது பல்வேறு கோட்பாடுகளைப் போல பெண்ணியவாதத்தின் தத்துவார்த்த அல்லது கருத்தியல் ரீதியான தளத்தை ஒரு தனிக்கோட்பாட்டின் தொகுப்பிலிருந்து பெற்றுக் கொள்ளவில்லை. எனவே அனைத்துப் பெண்களுக்கும் எல்லாக் காலங்களிலும் பொருந்தக்கூடிய ஒரு பொதுவான வரையறையை இதற்குச் சொல்ல இயலாது. எனவே பெண்ணியம் ஸ்தூலமாக வரலாற்றுக் கலாச்சார நடைமுறைகளிலும், பார்வைகள், உணர்வுகள் செயல்பாடுகளின் நிலைகளிலும் தளம் கொண்டிருப்பதால் இதன் வரையறையானது மாற்றமடையக் கூடும்; மாற்றமடையவும் செய்யும்.

17 ஆம் நூற்றாண்டில் பெண்ணியம் என்ற சொல் முதன்முதலில் உபயோகப்படுத்தப்பட்டபோது அது என்ன அர்த்தத்தைத் தந்ததோ அதனின்றும் இப்போது அது முற்றும் மாறுபட்டதாகவே உள்ளது. இது, பல்வேறு நிலையிலுள்ள பெண்களால் அவர்களின் வர்க்கப் பின்னணி, கல்விநிலை, உணர்வுநிலை இவை போன்றவற்றைப் பொறுத்து உலகின் பல்வேறு பகுதிகளிலும், ஒரு தேசத்திற்குள்ளேயும் பல்வேறு வகையாகப் பேசப்படுகிறது.

"சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலையை மாற்றுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுபூர்வமான நடவடிக்கைகளும்" பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாகக் கொள்ளலாம். இப்போதைய நிலையில்

மேலும் பெண் என்ற நோக்கிலிருந்து பெண்களுக்கான பிரச்சனைகளை அணுகுவது, தீர்வுகளை முன்வைத்து ஆய்வுகளை மேற்கொள்ளல் ஆகிய பரந்துபட்ட ஆழமான அர்த்தத்தையும் அது தருகிறது. பாலின ரீதியிலான ஒடுக்குமுறை வடிவங்களையும் ஆண் மேலாதிக்கத்தையும் தந்தைவழி சமூக அமைப்பையும் இனங்காணும் ஒருவரைப் பெண்ணியவாதி என்றழைக்கலாம். ஆனால் இனம் காண்பதோடு மட்டும் அமையாமல் ஆண் மேலாதிக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளிலும் இறங்க வேண்டுமென்று வரையறை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றது. ஆகவே செயற்பாடுகள் முக்கியமாகின்றன.

பெண் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடி வரும் மேலைநாட்டுப் பெண்ணியவாதிகள் இப்படிப்பட்ட இயக்கங்களைத் தோற்றுவிக்கக் காரணமாய் அமைந்த மேலைநாட்டுச் சூழலை இங்கு சற்று விரிவாகக் காணுவது முதற்தேவையாகிறது.

பதினெட்டாம் நூற்றாண்டு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஐரோப்பிய மக்களுக்கு அது விடியலின் காலம். அதைப் பகுத்தறிவுக் காலம் என வழங்கினர். அறிவியல் யுகமென்று அழைத்த காலம் என்றும் கூறலாம். ஐயங்கள், கேள்விகள், புதியன கண்டறியும் தேடலுணர்வு, புரிந்துகொள்ள வேண்டுமென்ற முனைப்பின் தாகம், எதனையும் ஆழமாக அறிய வேண்டுமென்ற ஆவல் ஆகிய அனைத்தும் அந்தப் பகுத்தறிவு யுகத்தின் முக்கிய அம்சங்களாயின.

உலகில் வழங்கும் எவற்றையும் காரணகாரியங்களோடு பகுத்தறிந்து, உண்மை எனத் தெரிந்தவற்றையே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் பரவலாகியது. உலகவாழ்க்கையின் எல்லாவிதக் கூறுகளும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றுள் சமூக மதிப்புகளும் முக்கிய இடம்பெற்றன. காலம்காலமாக வழக்கத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், ஆதிக்கம் முதலியவற்றை வலியுறுத்தும் மதிப்புகள் யாவும் விவாதத்திற்குட்படுத்தப்பட்டன. இவற்றை முற்றுமாகப் போக்கி சமத்துவம், தனிமனித சுதந்திரம், குடியாட்சி, எல்லோருக்கும் ஒரே நியதி என்ற புதிய சமூக மதிப்புகள் உருவாகத் தொடங்கின.

இவற்றின் விளைவாக இருபெரும் புரட்சிகள் தோன்றின. அவை

- *பிரெஞ்சுப் புரட்சி 1776*
- *அமெரிக்கப் புரட்சி 1789*

பிரெஞ்சு நாட்டில் 16ஆம் லூயி மன்னனின் கொடுங்கோல் ஆட்சியின்கீழ் அல்லல்பட்டுக் கிடந்த மக்கள் திரண்டு எழுந்து மன்னர்

ஆட்சியை ஒழித்து மக்கள் ஆட்சியை நிறுவினர். விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற புதிய மதிப்பீடுகள் இப்புரட்சியின் அடித்தளமாயின.

அமெரிக்கா ஆங்கிலேயர் ஆதிக்கத்தின்கீழ் நூற்றாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்தது. அமெரிக்க மக்கள் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டுக் குடியாட்சியை நிறுவினர். இவ்விரு நாடுகளிலும் சுதந்திர உணர்வு வீறிட்டெழுந்து இப்புதுக்கருத்துக்கள் உலகின் பல நாடுகளிலும் பரவ ஆரம்பித்தன. அதற்கு தாமஸ்பைன் எழுதிய "மனிதனின் உரிமைகள்" என்னும் நூலும் வால்டேர், ரூஸோ எழுதிய நூல்களும் பெரும் தூண்டுதலாயின.

சமத்துவத்தைப் பற்றிப் பெருமளவு பேசினாலும் இந்தப் புரட்சிகளால் பெண்களின் நிலையில் எந்தவிதமான பெரிய மாற்றமும் நிகழ்ந்துவிடவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனென்றால் சமூகத்தில் மற்ற பகுதிகளில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் திறனாய்வு செய்யப்பட்டன. என்றாலும் ஆண், பெண் இனங்களுக்கிடையே நிலவிய ஏற்றத்தாழ்வுகள் பற்றிப் பெரிதாக யாரும் கவலைப்படவில்லை; அது யாருடைய கவனத்தையும் ஈர்க்கவுமில்லை; அதைப் பற்றிய பெரிதான ஆய்வுகள் ஏதுமில்லை. ஏனென்றால் ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே மாறுபட்ட தன்மைகள் கொண்டவர்கள் என்ற நிலையில் ஏற்றத்தாழ்வுகள் நியாயமானவை என்றே கருதப்பட்டன.

சகல பரிமாணங்களிலும் ஆணைவிடத் தாழ்ந்தவளாகவே பெண் கருதப்பட்டாள். அவள், ஆணால் பாதுகாக்கப்பட வேண்டியவளாக, ஆணுக்குத் துணையாக இருப்பவளாகக் கருதப்பட்டாள். ஆண் செயல்திறம் படைத்தவன்; பெண் அவனை விடத் தாழ்ந்தவள் என்ற கருத்து சமூகநீதியாக ஆகிப்போனதும் இக்காலகட்டத்தில் கேள்விக்குட்படுத்தப்பட்டது.

பகுத்தறிவு மானுடத்தின் பண்பு என்றால் - மாந்தர் அனைவரும் சமமென்றால் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு எப்படி இருக்கமுடியும்? ஆணைப் போலப் பெண்ணும் பகுத்தறியும் திறன் பெற்றவள்தான். அறியாமை அவள் குற்றமன்று; அத்தகைய சூழலுக்கு அவர்களை ஆளாக்கிய ஆண்களின் குற்றமாகும். மேலும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கற்பிதங்களின் குற்றமுமாகும். பெண்களின் திறமைகளை வெளிக்கொணர வேண்டுமென்றால் அதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு முக்கியமாகவும் முதன்மையாகவும் கல்வி அளிக்கப்படல் வேண்டும். அது பெண்களைத்

தற்சார்பு உடையவர்களாக ஆக்கவும் செயல்படவும்தானே தவிர ஆண்களை அதிகாரம் செய்வதற்கன்று. கல்வி ஒரு பெண்ணை சிறந்த தாயாக, நல்ல மனைவியாகச் செயற்பட வைக்கும் என்று மேரி உல்ஸ்டன் கிராப்ட் கருதினார். அதன் விளைவு, ஆண்கள் உரிமைகளை நியாயப்படுத்துதல் (Vindication of the Rights of Man), பெண்கள் உரிமைகளை நியாயப்படுத்துதல் (Vindication of the Rights of Women) என்ற இரு நூல்களை எழுதவைத்தது. "மேரி உல்ஸ்டன் கிராப்டை" பெண்ணிய இயக்கப் பாதையில் சுவடுகளைப் பதித்த முன்னோடி எனலாம்.

மக்கள் என்றால் ஆண், பெண் இருபாலரையுந்தானே குறிக்கும்? ஆண்களுக்கு உரிய உரிமைகளும் வாய்ப்புகளும் நியாயங்களும் பெண்களுக்கும் உண்டுதானே? ஆணும் பெண்ணும் இயற்கையிலேயே மாறுபட்ட தன்மைகளை உடையவர்கள் அல்லர். அவர்கள் வளர்க்கப்பட்ட சூழ்நிலையே அதற்கான அடிப்படைக் காரணம். பெண்களுக்கான குணங்களையும் அவர்கள் எப்படி வாழவேண்டுமென்பதையும் ஆண்களே தீர்மானம் செய்தார்கள். அவையே அவர்கள் குணங்களாயின. ஆண்களின் பாதுகாப்பிலேயே அவர்கள் வாழவேண்டியவர்களானார்கள் என்றெல்லாம் சமூகத்தில் உள்ள பெண்களின் நிலையைத் தன் நூலில் எடுத்துரைத்தார்.

அந்நூலே ஒரு பெண்ணால், பெண்களின் நிலைபற்றி முதன்முதலில் எழுதப்பட்டது. அவர் காலத்தில் அது பெருமளவு பரவவில்லையென்றாலும் அதன்பின்னர் பெண்ணியவாதிகளின் செயல்பாட்டிற்குப் பெரிதும் தூண்டுகோலாய் அமைந்தது.

சமத்துவம், சுதந்திரம் ஆகிய கருத்துகள் பிரெஞ்சுப் புரட்சியின் ஆதாரங்களாக இருந்தன. அவை பெண்ணியத்திற்கு அடிப்படையாய் அமைந்தன. முதலில் அவை பிரான்ஸில் வித்திடப்பட்டாலும் இயக்கமாக வளர்ந்தது அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும்தான் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

'கடவுளுக்கு முன் எல்லா மனிதர்களும் சமம்' என்ற துறவி (பாலின்) கருத்தை முன்னிறுத்திச் சமய இயக்கங்களும் சீர்திருத்த இயக்கங்களும் பெண்ணின் தாழ்ந்த நிலையைக் கேள்விக்குட்படுத்தின. பெண்களும் ஆண்களைப் போலவே சகல உரிமைகளையும் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று பேச ஆரம்பித்ததும் இந்தக் காலக்கட்டத்தில்தான்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் ஏற்பட்ட சமூகப் பொருளாதார மாற்றங்களும் அரசியல், மதம் ஆகியவற்றில் ஏற்பட்ட

மாறுதல்களும் பெண்களின் வாழ்க்கையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தின. பெண்களின் வாழ்க்கை அவர்களின் வீட்டு எல்லையைத் தாண்டி வெளியுலகில் அடியெடுத்து வைக்கவும் பல்வேறு தொழில்களில் ஈடுபடவும் காரணமாகியது.

அதற்கான காரணங்கள்:

- பெண்கள் கல்வியறிவைப் பெற்றமை
- தொழிற்புரட்சி தோன்றியமை

ஆகியன.

பெண்களின் உலகம் வீடுதான் என்பது மாறியது. மேலும் மத அடிப்படையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

> அவற்றுள் முக்கியமானது ஏவாஞ்சலிகத்தாரின் ஏவாஞ்சலிகக் கோட்பாடு. மனிதனுக்கு மனிதன் என்ற தகுதியையும் மதிப்பையும் அளிக்க வேண்டும் என்பது அந்தக் கோட்பாட்டில் முக்கியமானது. ஏவாஞ்சலிகர் மதமாற்றத்தில் நம்பிக்கை உடையவர்கள். பெண்களின் பெண்மைக் குணங்களாகக் கருதப்பட்ட அன்பும், பரிவும் வீட்டிற்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கும் பயன்பட வேண்டுமென்று கருதலாயினர். அதனால் பெரும்பான்மையான பெண்கள் பங்கு பெற்ற இயக்கமாயிற்று.
>
> சமயம் மதிக்கப்பட வேண்டுமானால் சமயத்தால் விபசாரம், குடிப்பழக்கம் இவை முற்றுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்து பரவலாகிய காலமும் இதுதான்.

- நியூயார்க் நகரில் அமெரிக்கப் பெண்கள் விலைமாதரை நல்வழிப்படுத்தல் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டனர். அதற்காக ஒரு பத்திரிகையும் (Advocate of Moral Reform - ஒழுக்கச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு) வெளியிட்டனர். பெண்களாலேயே நிர்வகிக்கப்பட்ட பத்திரிகை அது. விலைமாதர் இல்லங்களைச் சோதனை செய்த போது பெண்கள் கைது செய்யப்பட்டு தண்டனைக் குரியவராயினர். ஆனால் அவர்களோடு உறவு கொண்ட ஆண்கள் தண்டனைக்கு உள்ளாகவில்லை. பெண்கள் இந்த நியாயமற்ற தன்மையை எதிர்த்துப் போராடினர்.
- மற்றொன்று குடிப்பழக்கத்தைத் தவிர்ப்பதாகும். குடிப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை விளக்கியதோடு

அதனால் பாதிக்கப்படுவோர் பெண்களாதலால் அவர்கள் அந்த இயக்கத்தில் பெரும்பங்கு வகித்தனர். இச்செயல்பாடு வீட்டிலேயே முடங்கிக் கிடந்த பெண்கள் வெளியுலகில் அடியெடுத்து வைத்துச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க உதவியது. 'குடிக்கு எதிரான இயக்கம்' (Temberance Movement) பல பெண்களை ஒன்றிணைத்தது.

- மற்றொரு அடிப்படையான இயக்கம் 'அடிமை ஒழிப்பாகும்'. தென்அமெரிக்காவில் வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த ஆண்கள் கறுப்புநிற அடிமைப் பெண்களோடு உறவுகொண்டு வாழ்வது வழக்கமாயிருந்தது. அப்பழக்கத்தால் பிறக்கும் குழந்தைகளை அடிமைகளாகக் கருதி சந்தையில் வெள்ளையர் விற்பதும் இயல்பாக இருந்தது. இவ்வுறவால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். தவிர, அடிமைகளாய் வெள்ளையருக்கு விற்கப்பட்ட ஆப்பிரிக்க மக்கள் மிகக்கடுமையாக உழைக்க வேண்டியிருந்ததோடு பெரிதும் குரூரமாகவும் நடத்தப்பட்டனர். மனிதர்கள் அனைவரும் சமம் என்றால் மனிதனை மனிதனே அடிமையாக்கும் கொடுமை நியாயமற்றது, மனிதாபிமானமற்ற செயல் என்று அப்பழக்கத்தைக் கேள்விக்குட்படுத்தினர். அடிமை ஒழிப்பில், "சாரா" என்ற பெண்மணி பெரிதும் உழைத்தார்; சமத்துவமுறையில் அவர்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் வெள்ளையர் கறுப்பின மக்களைப் பாலுறவில் ஈடுபடுத்தி நோய்களுக்கு ஆளாக்கக் கூடாதென்றும் போராடினார்.

இவ்வியக்கத்திலும் பெண்கள் பெருமளவிற்கு ஈடுபட்டனர். இதன் விளைவாகப் பெண்ணியத்தின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்ச்சி நடந்தேறியது. 1840ஆம் ஆண்டு லண்டனில் அகில உலக அடிமை ஒழிப்பு மாநாடு (World Anti-slavery Movement) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கலந்துகொள்ள அமெரிக்காவிலிருந்து வந்த நான்கு பெண்களுக்கு அவர்கள் பெண்கள் என்பதாலேயே அனுமதி மறுக்கப்பட்டது. அதன் விளைவாகப் பெரிதும் அதிர்ச்சியும் கோபமும் கொண்ட பெண்கள் தங்களுக்கான ஓர் இயக்கத்தின் தேவையை உணர்ந்ததோடு செயல்படவும் ஆரம்பித்தனர். அதன் விளைவாக 1844இல் நியூயார்க்கில் 'செனிகா பால்ஸ்' என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பெண்கள் தங்கள் உரிமைகளைப் பற்றிப் பேசினர். அது பெண்கள் இயக்கத்திற்கான முக்கியச் செயல்பாடாக அமைந்தது.

எலிசபெத் காடி ஷான்டரால் பெண்களின் உரிமை அறிவிப்பு (Declaration of the Rights of Women) தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இது பெண்ணிய இயக்கத்தின் வித்தாக அமைந்து ஆழமாக வேரூன்றத் தொடங்கியது.

- ஆண்களும் பெண்களும் இயற்கையில் சமமானவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர்.
- இல்லையென்றால் தங்களுக்குச் சமவுரிமை வேண்டுமென்று அவர்கள் போராட வேண்டியது அவசியமாகிறது.
- அரசாங்கம் இதைக் கவனிக்க வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் அதை மறுத்துத் தங்கள் பாதுகாப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உரிய ஓர் அரசாங்கத்தை நிறுவ வற்புறுத்த வேண்டும்.
- மீண்டும் மீண்டும் ஆண்கள் பெண்களை ஏமாற்றி, வஞ்சித்து தங்களுக்கு அடங்கியவர்களாக ஆக்கியதையே மனித சமுதாய வரலாறு காட்டுகிறது.
- ஆணுக்கு ஓட்டுரிமை வழங்கிய சமூகம் பெண்ணுக்கு அதை மறுத்து அவள் சுதந்திரத்தைப் பறித்துக் கொடுமை செய்திருக்கிறது. இதற்கு ஆணே பொறுப்பாகிறான்.
- அவள் பங்கு பெறாத, அவள் சம்மதமின்றி இயற்றப்பட்ட சட்டங்களுக்கு அவள் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியுள்ளான்.
- அவளுக்குச் சொத்துரிமை கிடையாது. அவளுக்கு மட்டும் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை விதித்து, ஆண் தான் உயர்ந்தவன் என்று தன்னை உயர்த்திக் கொண்டுள்ளான்.
- சட்டதிட்டங்கள் அனைத்தையும் அவனுக்குச் சாதகமாகவே அமைத்துக் கொண்டுள்ளான்.
- குறைந்த ஊதியம் வரும் வேலைகளையே பெண்ணுக்கு உரியதாக்கி உள்ளான்.
- மொத்தத்தில் பெண்ணை ஒரு மனுஷியாகவே கருதாமல் சகலவிதத்திலும் அவளைத் தாழ்மைக்கு ஆளாக்கி ஆணைச் சார்ந்தே வாழும் அவலநிலையை உருவாக்கி வைத்துள்ளான்.

அதனால் அவள் ஆணுக்கு நிகரான எல்லா உரிமைகளையும் வாய்ப்புகளையும் பெற வேண்டியவள் என்று அவர்கள் முடிவு செய்த தீர்மானங்களில் சில:

- பெண்களின் மகிழ்ச்சிக்கு எதிரான சட்டங்கள் இயற்கைக்கு மாறானவை.

- பெண்ணும் சமூகத்தின் மேன்மைக்காகப் படைக்கப்பட்டவள் தான். அதனால் அவள் ஆணுக்கு நிகராக மதிக்கப்பட வேண்டும்.

- ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரேவிதமான ஒழுக்கக் கட்டுப்பாடுகள் அமைய வேண்டும். மீறுபவர்களுக்குத் தண்டனைகளும் ஒரே மாதிரி அமையவேண்டும்.

- அவள் வாழ்வின் எல்லைகள் விரிவுபடுத்தப்பட்டு மனிதவுரிமை இருபால் இனத்தார்க்கும் பொது என்பதை உணர்த்த வேண்டும்.

- இவற்றுக்கு எதிரானவை அனைத்தும் மானிடத்திற்கு எதிரானவையாக எல்லா நிலைகளிலும் ஆணும் பெண்ணும் சமமாக உழைத்து முன்னேற வேண்டும். இவற்றை அடைய வேண்டும் என்ற நோக்கிலேயே பெண்கள் இயக்கம் போராடியது.

மேலைநாட்டு, குறிப்பாக அமெரிக்க நாட்டுப் பெண்ணிய வரலாற்றில் 'செனிகாபால்ஸ் மாநாடு' முக்கிய முத்திரை பதிக்கிறது.

பெண்ணிய வரலாற்றில் 'RED LETTER DAY' என இது பொறிக்கப்பட வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு பகுதிகளில் பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு பற்றிய விவாதங்கள் பெண்களால் நடத்தப்பெற்றன. 1917இல் அமெரிக்காவிலும் பிரிட்டனில் 1920லும், பிரான்சில் 1946லும் ஓட்டுரிமைக்கான போராட்டங்களில் வெற்றி பெற்றுப் பெண்கள் ஓட்டுரிமை பெற்றனர். பெண்களின் சொத்துரிமையை வேண்டியும் போராட்டம் தன் கவனத்தைத் திருப்பியது. தொடர்ந்து கிளர்ச்சிகளை மேற்கொண்டதின் மூலம் பல வெற்றிகளைப் பெற்றனர் பெண்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்கன சில:

- கல்வி பெறும் உரிமை
- பெண்களுக்குச் சொத்துரிமை
- விவாகரத்து பெறும் உரிமை

கல்வி பெற உரிமை பெற்ற போதும் எப்படி நல்ல மனைவியாக, தாயாக இருப்பது என்பதற்காகவே கல்வி தேவை என முன்பே கூறப்பட்டது. பின்னர் வேலைவாய்ப்பு, சமகூலி, பலதுறைகளிலும் நுழையும் உரிமை ஆகிய அனைத்தையும் போராடிப் பெற்றனர்.

ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) தன், பெண்ணடிமை (Subjection of Women) என்ற நூலின் வழி திருமணம் என்ற நிறுவனம்

பெண்ணுக்கு மிகப் பாதகமானது; பெண்ணடிமைத்தனத்திற்கு இத்திருமணமே காரணமாக உள்ளது என்றும் இவற்றைப் போக்கினாலொழிய பெண் விடுதலைக்கு வழியில்லையென்றும் குரல் எழுப்பினார். ஹாரியட் டைலர் (Harriat Tyler) என்பவரது பெண்ணுரிமை பற்றிய கருத்துகளை அவர் கணவர் ஜான்ஸ்டூவர்ட் மில் மேற்கூறிய கட்டுரையின் மூலம் தெரிவித்தார்.

அன்னையாகவும், மனைவியாகவும் பேசப்பட்ட பெண்ணின் பங்கு நிலையில் பெரும்மாற்றம் ஏற்பட்டது. கருத்துப் படிமமும் மாறியது.

பெண்ணியத்தின் தாய் எனப் பேசப்படும் பெட்டி ஃபிரைடன் (Betty Friedon), 'பெமினைன் மிஸ்டிக்ஸ்' (Feminine Mystiques) என்ற நூலின் வழி பெண்ணியத்தை மேலும் முன்னெடுத்துச் சென்றார். பெண் அழகாகவும் நல்ல மனைவியாகவும் இருக்க வேண்டுமென்பதும் வீடுதான் அவளுக்கு எல்லாம் என்பதும் அதிருப்தியை அளித்ததால் அவை கேள்விக்குட்படுத்தப்பட்டன. 1960களில் பெண்விடுதலை இயக்கம் வேறுபல பரிமாணங்களோடு வளர்ந்தது. குடியுரிமை இயக்கம் (Civil Rights Movement) மேலும் அதற்கு உரமூட்டியது.

இரண்டாவது அலை, அழுத்தமான, ஆழமான விடுதலை பெற வேண்டுமென்று போராடியது. அரசியல் ஆதிக்கத்தைப் போலவே ஆணின் ஆதிக்கத்தை / அதிகாரத்தைப் / பெண்ணின் மேல் செலுத்துவதைக் கேள்விக்குட்படுத்தி அதை மாற்றப் போராடினர். இந்தப் போராட்டக் குழு தீவிரப் பெண்ணியக் குழுவாகத் தோற்றம் கொண்டது.

பெண் விடுதலைக்கான போராட்டங்களை மேற்கொள்வார் அதற்கான விதிமுறைகளை அணுகும் போக்கில் பெண்ணிய இயக்கங்கள் தம்முள் வேறுபட்ட கருத்தினை உடையனவாய் அமைந்தன. பல்வேறு பிரிவுகள் இருந்த போதிலும் அவற்றுள் பரவலானதும் முக்கியத்துவம் பெற்றதுமான,

- மிதவாதப் பெண்ணியம்
- சோசலிசப் பெண்ணியம்
- தீவிரவாதப் பெண்ணியம்

என்ற மூன்றைப் பற்றி இங்கு சற்று விரிவாகக் காண்பது மேலைநாட்டுப் பெண்ணியம் பல பரிமாணங்களோடு வளர்ந்ததை நமக்குத் தெளிவாக்கும்.

## மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminism)

மிதவாதப் பெண்ணியத்தின் வரலாறு 18ஆம் நூற்றாண்டிலேயே துவங்கிவிடுகிறது. மேலை நாடுகளில் பகுத்தறிவுக் காலம் (Age of Reason) ஆரம்பித்த போதே இதுவும் பிறந்துவிடுகிறது.

பல நூற்றாண்டுகளாக வழக்கத்தில் இருந்தவையாயினும் விமர்சனத்துக்குட்படுத்தும் போது எதிர்நிற்க முடியாதவை மாற்றப்பட வேண்டுமென்ற வேகம் பரவிய அந்தக் காலக் கட்டத்தின் முக்கியத்துவம் பெற்றவைகளில் சமூகத்தில் பெண்களின் நிலை பற்றிய மறுபரிசீலனையும் ஒன்று.

மனித இனம் பகுத்தறிவு உடையதென்றால் மானிட இனத்தின் மறுபாதியாக உள்ள பெண்ணினமும் பகுத்தறிவு உடையதுதான். தனிமனித சுதந்திரம் வலியுறுத்தப்பட்டதென்றால் அது ஒரு பெண்ணுக்கும் உரியதுதான். மனித இனத்துக்கான சகல உரிமைகளையும் அனுபவிக்கும் தகுதி ஆணுக்கிருப்பது போலவே பெண்ணுக்கும் உண்டு. பெண் என்று பாலினவழி நோக்காமல் மனித இனப் பிரிவாகவே காண வேண்டும். இயல்பான அவள் உரிமைகள் மறுக்கப்பட வேண்டுமென்றால் அவள் பகுத்தறியும் திறனற்றவள் என்பது நிரூபிக்கப்பட வேண்டும் என்று மேரி வுல்ஸ்டன் கிராப்ட் எதிர்ப்புக் குரல் எழுப்பினார்.

பகுத்தறிதல், மேலாண்மை செய்தல் ஆணின் குணமென்றும் கீழ்ப்படிதல், மென்மை, எதிர்ப்புணர்ச்சியின்மை, கற்பு இவை பெண்ணின் குணமென்றும் கற்பிக்கப்பட்டதால் அவள் பின்தங்கிப் போனாள். மனித அறம் இருவர்க்கும் பொதுவானது. தவிரவும் சமுதாயத்தில் அவள் பாலினரீதியாகக் கவனிக்கப்பட்டு மனிதனைச் சார்ந்திருக்கும்படியான கல்வி தரப்பட்டதும் முக்கிய காரணமாயிற்று. ஆணை எப்படிக் கவர்வது? எப்படி ஆள்வது? எப்படி மகிழ்விப்பது? தன் அழகாலும், கவர்ச்சியாலும் எப்படி வசீகரிப்பது? என்பதையும் மென்மை, அடக்கம், அன்பு, உணர்ச்சிப் பூர்வம் இவையே பெண்களின் குணங்களாகக் கருதும்படி ஆடவர் செயற்கையாக உருவாக்கி விட்டனர். மேலும் ஆண்களுக்கு வாய்ப்பளித்தது போல் பல்வேறு பணிகளை மேற்கொள்ள பெண்களுக்கு வாய்ப்பு நேராததாலும், குடும்பக் கூட்டிற்குள்ளே அடைந்து கிடந்ததாலும் மனம் விரிவடைய சந்தர்ப்பமில்லாமற் போனது.

கணவனையே முழுதும் சார்ந்திராமல் அவனுக்குச் சமமான உரிமைகள், பொறுப்புகள் ஆகியவற்றைப் பெற வேண்டுமென வாதாடியவர் மேரிவுல்ஸ்டன் கிராப்ட். சொத்துரிமை அவளுக்கு வேண்டும். வாழ்வில் திருமணம் மட்டுமே பெண்ணுக்குக் கிடைக்கக்

கூடிய ஒன்று என்று நினைத்துக்கொள்ளும் நிலை இருத்தல் கூடாது என்றெல்லாம் அவர் சுதந்திர சிந்தனையாளராய் பெண்ணுரிமைக்கான கோரிக்கைகளை 'A Vindication of the Rights of Women' என்ற நூலின் வழி முன் வைத்தார். 1872இல் வெளியான போது அந்நூல் பெண்களின் உரிமைக்கான ஒரு வாதமாகவும் விமர்சனமாகவும் கருதப்பட்டது.

ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill 1806-1873) என்பார் தன் வாழ்க்கையைத் தான் தீர்மானம் செய்து கொள்வதும் வாழ்வின் மதிப்புகளைத் தனக்குரியதாக்கிக் கொள்வதும் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் விஷயமாகும். அதனால் நீதி, அரசியல் ஆகிய அனைத்திலும் சமத்துவம் நிலவ வேண்டுமென்று பெண்களின் உரிமைக்காகப் போராடினார்.

இவர் எழுதிய (Subjection of Women) 'பெண்ணின் அடிமைத்தனம்' அல்லது 'பெண்ணடிமை நிலை' என்னும் நூல் பெண் இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டியது. இருபாலர்களுக்கிடையேயான சட்ட ரீதியான அடக்குமுறை தவறானதும் மானுடவளர்ச்சிக்குத் தடையானதுமாகும். பூரண சமத்துவத்தால் அது மாற்றப்பட வேண்டுமென்பதும், ஒரு புறம் அதிகாரமும், தனியுரிமையும் மறுபுறம் இயலாமையும் இருத்தல் கூடாது என்றும் வாதித்தார் மில். நீண்ட நாட்களாகப் பழக்கத்தில் இருந்து வந்தது என்பதால் எதுவும் சரியாகி விடாது. மனித வரலாற்றில் உருவாவது பொதுவாக நடைமுறையில் நடந்து வருவதுதான். அதனால் பெண்ணடிமைத்தனம் பெண்களின் தாழ்வுநிலை இவை பலசாலிகளின் விதியைப் பொறுத்தமைந்தது.

பெண் தாழ்ந்து இருத்தல் என்பது அடிமைத்தனத்தின் கூறுதான். பெண்ணினத்தின் இயற்கைத் தன்மைகளாகக் கூறப்படுவன யாவும் செயற்கையானதே; கட்டாயப்படுத்தப் பட்டவையே. செயற்கையாக ஊக்குவிக்கப்பட்டு, கற்பிக்கப்பட்டு இந்த நிலையில் பெண்களைப் புரிந்துகொண்டு விட்டோமென்று யாரும் சொல்ல முடியாது. தாழ்ந்த நிலையில் பிறருக்காக வாழ்பவர்கள் தங்களின் உண்மையான தன்மையை, அதுவும் தன்னை ஆள்பவனிடம், எஜமானனிடம் எப்படி வெளியிட முடியும்? அதனால் பெண்கள் தங்களைப் பற்றித் தாங்களே எழுதிக் கொள்ளத் துணிச்சலூட்டப்படவேண்டும்; தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக் கொள்ளத் துணிச்சலோடு பேசவேண்டும்.

பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக் கொள்ளத் தாம் விரும்பியபடி பற்பல பணிகளை ஏற்பதும், சொத்தில் பங்கு பெறுவதும், ஓட்டுரிமை பெறும் தகுதியை உடையவராவதும் மிக முக்கியமென எடுத்துரைத்தார் மில். திருமண ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டுமென்றும்

சட்டத்தின் முன் சமத்துவம் நிலவ வேண்டுமென்றும் மேலும் வாதாடினார்.

சமூகத்தில் பெண்ணின் நிலையைப் பற்றிய அதிருப்தியை ஊட்டி, விழிப்புணர்ச்சியை மீண்டும் ஊட்டுவதில் முக்கியத்துவம் பெற்றவர் பெட்டி ஃப்ரைடன் (Betty Friedon). இவர் பெண்ணியத்தின் தாய் எனப் பாராட்டப்படுபவர்.

மானுடத் தன்மை என்பது தனிச்சிறப்பு வாய்ந்தது. அதனையே மதித்து, ஒரு பெண்ணுக்குத் தன்னைப் புரிந்து கொள்வதிலும் ஒரு பணியை மேற்கொண்டு எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்வதிலும் சுதந்திரம் இருக்க வேண்டுமென்பார். இவர் ஆணுக்குள்ள சுதந்திரமும், உரிமையும் பெண்ணுக்கும் உண்டு என்று கூறியதோடு சுதந்திரமாய்த் தான் விரும்பியதை மேற்கொள்ளும் உரிமை ஆண்மையுமன்று; பெண்மையுமன்று; அது மனிதமாகும் என்ற கருத்தை முன் வைத்தார்.

மேலும், பெண்ணைப் பற்றிய கருத்துப்படிமம் மனிதமாக இல்லாமல் பெண்ணாக இருப்பதைச் சாடுகிறார். இது கற்பிக்கப்பட்டதென்றும் வீட்டுக்குள்ளேயே பாலியல் உறவுக்காக வாழ்வதும், குழந்தைகளைப் பெறுவதும் அவளின் மானிடத்திறன்களை முழுமையாக வளர்த்துக்கொள்ள இயலாததால் குடும்பவாழ்வில் பெண்ணினம் திருப்திப்பட முடியாதென்றும் ஃப்ரைடன் விளக்கிச் சென்றார். கல்வியறிவு அவர்களின் பங்குநிலையை மாற்றும். இல்லத்தாள் என்ற பெண்களின் படிமத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்றும் புறக்கணிப்பு என்றால் கணவனையும் வீட்டையும் குழந்தைகளையும் புறக்கணிக்க வேண்டுமென்ற பொருளன்று என்றும் மேலும் விளக்குகிறார். திருமணம் அல்லது வேலை என்றில்லாமல் வேலையைப் பார்த்துக்கொண்டே குடும்பத்திலும் இருக்கலாம் என்று கூறிப் போவார்.

இவர்களும் இவர்கள் கருத்தையொட்டிய உணர்வுடையாரும் மிதவாதப் பெண்ணியவாதிகள் எனலாம். 1960இல் மிக வளர்ந்த இந்தப் பெண்ணியம் பெண்ணின் தாழ்ந்த நிலைக்குக் காரணமான வேரினைக் கண்டறிய ஆர்வங்காட்டவில்லை. ஆனால் சமத்துவம் என்ற கோட்பாட்டை, கல்வி, வேலைவாய்ப்பின்மை, சொத்துரிமை, வாக்குரிமை, பாராளுமன்றத்துக்குச் செல்லும் உரிமை போன்ற சட்டரீதியான சமத்துவத்தைத் தாண்டியும் முன்னெடுத்துச் சென்றனர். அதன் விளைவாகக் குழந்தைக் காப்பகங்கள், கருத்தடை உரிமை போன்றவையும் நடைமுறைச் சாத்தியமாயின.

மிதவாதப் பெண்ணியலார் சமூக அமைப்பு முறையை - குடும்ப அமைப்பை அப்படியே ஏற்றுக் கொண்டு, சமூகப்

பழக்கவழக்கங்களால் மாறுதல்களைக் கொண்டுவர விரும்பினர். சமூக நிறுவனங்கள் சட்டம், மனப்போக்கு, சமூக அமைப்பு ஆகியவற்றைக் குறிப்பாகக் குடும்ப அமைப்பு பற்றி எதுவும் சிந்திக்கவில்லை. சட்டங்களின் தொகுதி சமூகத்தை மாற்றிவிடும் என நம்பினர். அதனால் அடிப்படையான மாற்றம் தேவையென்றும் உணரவில்லை.

## சோசலிசப் பெண்ணியம் (Socialist Feminism)

நீண்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது சோசலிசப் பெண்ணியம். பொதுவாக மார்க்சிஸ்டுகள் இந்த வகைப் பெண்ணியத்தை வரவேற்றனர் எனலாம்.

பெண்கள் எப்போதும் தாழ்ந்த நிலையில் இருந்ததில்லை. ஆரம்பக் காலக்கட்டத்தில் தாய்வழிச் சமுதாயமாக இருந்தபோது, அதாவது பெண்கள் சமூகப் பண்பாட்டுத் தலைவிகளாக இருந்தபோது அங்கு சமத்துவம் நிலவியது. வேட்டையாடும் தொழில் மட்டுமின்றிக் காய்கறிகளைக் கண்டுபிடித்ததும், அவற்றை உணவிற்காகத் தயார் செய்ததும் பெண்களே. உழவினை மேற்கொண்டு, விலங்கினை அடக்கி, காட்டு விலங்கை வீட்டு விலங்காக்கித் தங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டதும் அவர்களின் திறனைக் காட்டும் சாட்சியங்களாகும். இவற்றைத் தவிர, பானைகள் வனையவும் கைவினை ஆராயவும் இருந்தனர் என்பதும் அறியவருகின்றன. முதன்மையிடத்தில் தலைமை தாங்கியவர்கள், தந்தைவழிச் சமூக அமைப்பு, தனிச்சொத்துரிமை, சமுதாயம் வந்தபோது, இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டனர். பெண்கள் வரலாற்றில் மிக துரதிருஷ்டமான இந்தக் காலக்கட்டத்தில் பெண்ணின் நிலை தாழ இது பெருங்காரணமாகியது.

குடும்பம், நட்புறவு துணைக்காகத் தேவைப்படவில்லை. உணர்வுகளுக்கு ஆதரவாகத் தந்தை வழியில் செல்வத்தைப் பாதுகாத்தல் பண்பிற்கே தளமாகியது. பெண் தன்னியல்பை இழந்து கணவனின் சொத்தானதும் இக்காலக் கட்டத்தில்தான். பெண் எல்லா இடங்களிலும் அனைத்துச் சமூகத்திலும் ஒடுக்கப்பட்டாள். பெண்கள் குறைந்த கூலி பெறும் தொழிலாளர்களாய் நியமனம் செய்யப்பட்டு, சுரண்டப்பட்டார்கள். பலர் வீட்டு வேலை செய்பவர்களாக மாறினர். பணம் சமூக மதிப்புகளை முடிவு செய்கிற போது பெண் வெளியே வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நேர்ந்தது. நாள் முழுவதும் செய்யப்படுகிற வீட்டு வேலைகளுக்குச் சம்பளமில்லாததால் அவள் உழைப்பிற்கு மதிப்பில்லாமல் போனது. முதலாளித்துவச் சமுதாயம் தேவை நேர்ந்தபோதெல்லாம் அவர்களைப் பயன்படுத்திக்கொண்டது. இன வேறுபாடு போன்றே பாலின வேறுபாடும் முதலாளித்துவச் சமூகத்திற்கு முக்கியமாய் அமைந்தது; பெண்கள் குறைந்த கூலிக்கு

வரும் உழைப்பாளிகளாக்கப்பட்டனர்; அவர்களைப் பயன்படுத்தி லாபம் பெறுவதும் முதலாளித்துவப் போக்காகிவிட்டது.

## தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism)

தீவிரவாதப் பெண்ணியம் 69, 70களில் இரண்டாவது பெண்ணிய அலை அடித்தபோது ஆரம்பமானது எனலாம். இவர்களுக்கு மிதவாதப் பெண்ணியவாதிகளோடு தொடர்பு இருந்தது. ஆனால் பாலியல் ரீதியான அடக்குமுறை புறக்கணிக்கப்பட்டு, பாலியல் ரீதியான உழைப்பும் பங்கீடும் பொருளியல் வர்க்க அமைப்பும் முக்கியப் படுத்துப்பட்ட போது அது சீர்திருத்தமாக அமைந்து போனதால் அதில் நிறைவு பெறாத தீவிரப் பெண்ணியவாதிகள் தந்தைவழிச் சமுதாயத்தை உடைத்தலே முதன்மை நோக்கமாகக் கொண்டனர். இதன் வேர் உயிரியல் ரீதியான குடும்பமென்பதால் அதனையும் முற்றுமாக உடைக்க விரும்பினர்.

உயிரியல் கூறு வேறுபாடுகள் பெண்கள் மீதான ஆண்களின் மேலாண்மையைத் தந்தன. பலதார வழக்கம், பாலியல் உறவுகள் அடிப்படையான அடக்குமுறைகளின் வடிவங்கள் என்று கண்டனர். தீவிரப் பெண்ணியவாதிகள், பெண்ணின் மறுவுற்பத்தி மீதான ஆண்களின் மேலாண்மை, ஆண்களுக்கான ஏற்றத்தாழ்வுடைய சமூக அமைப்பு, தந்தைவழிச் சமூக அமைப்பு முறை, திருமணத்தின் மூலம் நிரந்தரமாக்கப்பட்டு, காப்பாற்றப்பட்டது. பாலின ரீதியிலான உழைப்பும் பங்கீடும் குடும்பத்தின் வழி காப்பாற்றப்பட்டது. ஆதிக்கத்திற்கான பற்பல தளங்களும் ஆணின் கையில் இருந்ததால் பாலிய அரசியல் என்பது தந்தைவழிச் சமுதாயத்தின் அரசியல், குடும்ப, சட்ட நீதிக் கோட்பாடு திருமண அமைப்புக்கு எதிராயின. எனவே தீவிரப் பெண்ணியவாதிகள் குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு ஆணின் மேலாண்மை அனைத்தையும் புறக்கணித்தனர்.

தீவிரப் பெண்ணியவாதிகள் தந்தைவழிச் சமூக அமைப்பின் எதிரியாகி அந்த அமைப்பை மாற்ற வேண்டுமென்று போராடினர். பெண்ணடிமைத்தனமானது பொருளாதார வேறுபாட்டில் வேர்கொண்டது என்பதை விட, ஆண் பெண் பாலிய உறவில் உண்டானது என்றே அவர்கள் நினைத்தனர். பெண்ணடிமைத் தனத்திற்கு ஆணே காரணமென்பதால் அவனைப் பகைவனாக எண்ணி, ஆண் மேலாண்மையை வெறுத்து பாலிய வேறுபாட்டை முற்றுமாகப் போக்கத் தீவிரமாக எண்ணியதால், அவர்கள் வாழ்வில் ஆணுக்கு இடமில்லாமல் போனது. பாலியல் உரிமை, உடம்பின் மீதான கட்டுப்பாடு, விடுதலைக் காதல், தன்னின அனுபவம், குழந்தைகளின் கூட்டுப்பாதுகாப்பு ஆகியன அவர்களின் செயல்பாடுகளாயின. ஆண் மேலாண்மையை முழுவதுமாய்ப் போக்கப் பாலியல் ரீதியான புரட்சி

தேவை என்றனர். விழிப்புணர்வை ஊட்டுவதின் மூலம் மரபுகள், பாலியல் கோட்பாடுகள் ஆகியவற்றைத் தகர்க்க வேண்டுமென்றனர்.

ஆண் மேலாண்மை என்பது மிகப்பழைய மிக அடிப்படையான ஆதிக்கத்தின் வடிவம். மற்ற அடக்குமுறைகள், சுரண்டலுக்கான வடிவங்கள் யாவும் இன, முதலாளித்துவ எதேச்சதிகார ஆண் மேலாண்மையின் விரிவுகளே என்று கருதினர். ஆண்கள் பெண்களின்மேல் ஆதிக்கம் செலுத்த, சில ஆண்கள் இவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். இதுவே சமூக நிலையாயிருந்தது. பெண்ணின் மறுஉற்பத்தி மீதான ஆண் மேலாண்மையை வெறுத்த இவர்கள் ஆணின் வெறுப்பு, பெண்ணின் மீதான பலாத்காரம், பெண்ணின் நிர்வாணப்படங்களைக் கண்டு மகிழ்தல் ஆகியன பாலினரீதியிலான வன்முறைகளின் வெளிப்பாடுகளாகும் என்றனர். பெண்களின் ஒருங்கிணைப்பும் அவர்களிடையே வரும் தற்சார்பு நிலையுமே இவற்றைத் தூக்கியெறிய முடியும் என்ற எண்ணத்தை உடையதென்பதால் எதற்கும் ஆணைச் சார்ந்திராத தன்மை உருவாக வேண்டுமென்று செயல்பட்டனர்.

## இந்தியாவில் பெண்ணிய இயக்கம்

மேலைநாட்டின் பெண்விடுலைக்கான போராட்டங்களும் கருத்தாக்கங்களும் பல கீழைநாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதில் மறுகருத்து இருக்க இயலாதென்றே கருதுகிறேன். இந்தியாவும் அதற்கு விதி விலக்கன்று.

பெண்ணியக்கங்களும் பெண்ணியமும் மேலைநாட்டில் பெண்ணியம் உருவானதைப் போல் இந்தியாவில் உருவாகவில்லை என்பதை முதலில் நாம் நினைவுபடுத்திக் கொள்வது முக்கியம். 1930களில் 'பெண்விடுதலை' என்று பொருள்படும் (Women's emancipation) என்ற சொற்பிரயோகம் வந்துவிட்டது; என்றாலும் பெண்ணியம் என்ற சொல் நமக்கு அந்நியம்தான். ஆயினும் அதன் கோட்பாடு ஓர் உருமாற்றத்திற்கான நடவடிக்கை என்பதில் சந்தேகமில்லை. சொல் அந்நியம் என்பதாலேயே அது நமக்குச் சொந்தமில்லை என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் ஒரு கருத்தமைவைத் தேசியப் பூகோள எல்லைக்குள் அடக்கிவிடவோ, பிற மனிதர்களுக்கு அது அவசியமற்றது என்று ஒதுக்கிவைக்கவோ இயலாது. எனவே பெண்ணியம் என்பதும், அதன் கோட்பாடுகளும் ஒரு சமூக மாற்றத்திற்கான நடவடிக்கையாகும்.

மேலைநாட்டைப் போல 19ஆம் நூற்றாண்டில் நமது நாட்டில் பெண்கள் மீது ஏவிவிடப்பட்டிருந்த அடக்குமுறைக்கு எதிரான ஓர்

இயக்கம் தீர்க்கமான நிலைப்பாட்டோடு அமைப்பு ரீதியாக அமைக்கப்பட்டது என்று கூற முடியாது. ஆனால் சீர்திருத்தம் என்ற நோக்கில் இயக்கங்கள் வளர்ந்ததை நாம் புறக்கணிக்க இயலாது.

ஜனநாயக உரிமைகள் பற்றியும், சரிபாதிமக்கள் தொகையினர்க்கு அடிப்படை உரிமைகளற்ற - நியாயமற்ற நிலைபற்றியும், ஒரு விழிப்புணர்ச்சி தோன்றி வளர்ந்தபோதே பெண்ணியமும் பெண்ணியப் போராட்டங்களும் எழுச்சியடைந்தன. ஆனால் இப்போதுள்ள வடிவில் அவை அன்றில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தேசிய விடுதலைப் போராட்டம் உச்சகட்டத்தை அடைந்த வரலாற்றுக் காலக்கட்டத்தில் அந்நிய ஆதிக்கத்துக்கு எதிராகவும் உள்நாட்டுச் சர்வாதிகார நிலப் பிரபுத்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராகவும், போராட்டங்கள் வெடித்தபோது பெண்ணிய விழிப்புணர்வும் ஏற்பட்டுவிட்டது எனலாம். இக்காலக் கட்டங்களில் பெண் அடக்கு முறைக்கு எதிரான குரல்கள் நாடெங்கும் ஒலிக்கலாயின. விதவைகளின் மறுமணத்திற்கான சாத்தியங்கள், பலதாரமணத்தைத் தடை செய்தல், சதி மற்றும் முகத்திரை ஒழிப்பு, பெண்களுக்குக் கல்வி, மற்றும் சட்டரீதியான சமத்துவம் போன்ற விஷயங்களை அவை வலியுறுத்தின. பெண்கள் பௌத்த சங்கத்தில் சேர்ந்து துறவியாக முடியுமாவென்று புத்தரும் அவருடைய சீடர்களும் விவாதித்திருக்கிறார்கள். ஆசியாவில் பல நிலைகளிலும் பெண் கல்வியுரிமை பற்றிய தொடர்ச்சியான கருத்து மோதல்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவை பெண்கள் மீதான விவாதம் நமக்குப் பழமையானதுதான் என்பதைக் காட்டுகின்றன.

பெண்ணியக்கங்கள் இப்போது முன்வைக்கும் கோரிக்கைகளினின்றும் அவை வேறுபட்டாலும் அன்றும் இன்றும் பெண்ணடிமைத்தனம் பெருமளவிற்கு மாற்றத்தைப் பெறவில்லையென்பதுதான் யதார்த்த நிலை. ஏற்பட்டுள்ள மாற்றங்கள் ஒட்டுமொத்தமான மனிதகுல விடுதலைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியேயாகும். இன்றைய நிலையில் பெண்ணியவாதிகள் தனித்துவம் பெற்ற மிகவும் ஸ்தூலமாக அந்தந்தப் பிரதேசத்திற்குரிய பிரச்சனைகளை எழுப்பப் போராடுகின்றனர் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இது நீண்டகாலப் பெண்கள் இயக்கப் போராட்டங்களின் பயனாகும்.

இன்றையப் பெண்ணிய இயக்கங்களைப் பற்றி அறிவதற்கு முன் வரலாற்று அடிப்படையில் இந்தியாவில் பெண்ணியக்கங்கள் எப்படியிருந்தன என்பதையும் அறிவது அவசியமாகிறது.

18ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டில் ஏற்பட்ட புதிய சிந்தனையும் கோட்பாடும் இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. 19, 20ஆம் நூற்றாண்டுகளில் சிந்தனையிலும் கோட்பாட்டிலும் புதியபோக்கு உண்டாயிற்று. மேலைநாட்டு நாகரிகமயமாதல், நவீனமயமாதல், புத்தாக்கம், மீட்டெழுச்சி இயக்கம், சீர்திருத்தத் தேசியம் ஆகியன பெண்ணின் நிலையைக் கேள்விக்குட்படுத்தின.

இந்தியப் பெண்கள் நிலையையும் சமூகத்தில் அப்போது பரவியிருந்த சில சமூகத் தீமைகளையும் கண்டறிந்த ஐரோப்பிய அறிஞர்களும், கிறித்துவ நிறுவனங்களும் கண்டனம் செய்து கேள்விக்குட்படுத்தினர். அவர்களின் கவனத்தைப் பெருமளவிற்கு ஈர்த்தவை குழந்தை மணம், விதவையர் நிலை, விதவையர் திருமண மறுப்பு, பெண்கல்வி மறுப்பு, பலதாரமணம் ஆகியன. அவர்கள், இந்தியப் பெண்கள் மனிதப் பண்பற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் இந்தியர்கள் காட்டுமிராண்டித்தனமாக வாழ்வதாகவும் கேலி செய்தனர்.

இது மிகைப்படுத்திக் கூறப்பட்டக் கூற்று என்றாலும் அதில் உண்மை ஓரளவு இருப்பதை ஆங்கிலக்கல்வி கற்ற அக்கால அறிஞர்கள் உணர்ந்தனர். அதனால் பெண்கள் பிரச்சனைகளை மையப்படுத்திப் பல போராட்டங்களை மேற்கொண்டனர். இந்தியப் பெண்களின் உண்மை நிலையை உணர்ந்த சீர்திருத்தவாதிகள் அதை மாற்றவும் மேம்படுத்தவும் முனைந்து நின்றனர்.

பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், பிரார்த்தனா சமாஜம் ராமகிருஷ்ணமிஷன் ஆகியன சமூகச் சீர்திருத்தம் வேண்டிப் பெருமளவிற்குப் போராடின.

சீர்திருத்தவாதிகளுள் முன்னோடியான ராஜாராம் மோகன்ராய் (1772–1883) 1828இல் பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்து சதிக்கு எதிராகப் போராடினார். பலதாரமண எதிர்ப்பு, பெண்கல்வி, பெண்ணுக்குச் சொத்துரிமை ஆகியவையும் அவர் போராட்டத்தில் முக்கிய இடம்பெற்றன.

1850இல் மேலும் சீர்திருத்தச் செயல்பாடுகள் பெருகின. விதவை மறுமணத்திற்குப் பரிந்துரை செய்து தீவிரப் பிரசாரம் செய்தவர்களுள் முதன்மையானவர் ஈஸ்வர சந்திர வித்யா சாகர் (1820–1891). தேவேந்திர நாத தாகூரும் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்துப் பெண்கல்விக்காகப் பெரிதும் உழைத்த தயானந்த சரசுவதியும் அவரோடு இணைந்து போராடினர்.

குழந்தைத் திருமணத்திற்கு எதிராகப் போராடியவர்களுள் முதன்மையானவர் கேசவ சந்திரசென் (1838–84). பிரம்ம சமாஜத்

தலைவரும் சீர்திருத்தவாதியுமான இவர் வேதங்களுக்கு முரணானது குழந்தை மணம் என்று கூறி, நமது பண்பாட்டிற்கு அது எதிரானது என்றார். இவர்களின் முயற்சியால் குழந்தைமணத் தடைச் சட்டமும் சதித் தடைச்சட்டமும் இயற்றப்பட்டன. இடைமறாத போராட்டத்தின் சாதனைகள் என்று இவற்றைக் கூறலாம்.

இந்திய நாட்டுச் சீர்திருத்தவாதிகள் பெண்களுக்கு எதிரான சமூகத் தீமைகளை எதிர்த்துப் போராடிய போது தேசிய விடுதலை இயக்கம் காந்தியடிகளின் தலைமையில் புதியதொரு திசையில் செல்ல ஆரம்பித்தது. 1920க்குப் பின் பொது வாழ்வில் பெண்கள் பங்குபெற ஆரம்பித்தனர். அரசியல் நிறுவன அமைப்பும், அதை எதிர்க்கும் நோக்கத்தில் கதர் அணிதல், இந்தியப் பொருட்களையே வாங்குதல், அயல்நாட்டுப் பொருள்களைப் புறக்கணித்தல், கள்ளுக்கடை மறியல், ஒத்துழையாமை இயக்கம் ஆகியவற்றில் தீவிரமாகப் பங்கேற்றனர். இந்தக் காலக்கட்டத்தில்தான் ஆயிரக்கணக்கில் பெண்கள் குடும்பப் பணிகளைத் தவிர வேறு பல பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளத் துணிந்து வெளியில் வந்தனர். குடும்ப எல்லையைத் தாண்டி வெளியுலகில் அடியெடுத்து வைத்த இக்காலக் கட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது எனலாம்.

1928இல் பல்வேறு சத்யாக்கிரகப் போராட்டங்களில் ஆயிரக்கணக்கில் பங்கு கொண்டனர். 1930இல் 'ஒத்துழையாமை' இயக்கத்திலும் 1942இல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திலும் பெண்களின் பங்கு குறிப்பிடத்தகுந்ததாய் அமைந்தது. மெத்தப் படித்த மேதைகளும் கல்வியறிவற்ற பேதைகளும் பெருமளவிற்குக் கைது செய்யப்பட்டது முன் எப்போதும் நடக்காதது. பெண்கள் வாழ்வில் புதிய திருப்பமும் புதிய பங்கு நிலையில் வியப்புறும் வகையில் பணியாற்ற ஆரம்பித்த காலமும் இதுவே.

"சுதந்திரப் போராட்டத்தில் பல வியப்பான நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. தேசியப் போராட்டத்தில் பெண்கள் குறிப்பிடும்படியாக பங்கு கொண்டது, சந்தேகமில்லாமல் மிக முக்கியமானது" என்று இந்த மாற்றத்தை ஜவஹர்லால் நேரு குறிப்பிடுவார்.

பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல பத்தாண்டுகள் சீர்திருத்த இயக்கங்கள் முயன்று செய்ததை காந்திஜி சில ஆண்டுகளில் செய்துவிட்டார் என்பார் மகிரிஷி கார்வே.

சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பெண்கள் முன்னேற்றம் தேவையென்பதை உணர வைத்தன. தேசிய இயக்கம் குடும்பத்திற்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளில் ஈடுபாடு கொள்ள புதியதொரு

ஆற்றலையும் தங்களைப் பற்றிய நம்பிக்கையையும் பெண்களுக்குத் தந்தன.

இங்கு இன்னொரு கருத்தையும் கூற வேண்டும். சாதிகள் அமைப்புடைய சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் தீவிரமாக இருந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். உயர்சாதியினராகக் கருதப்பட்ட பிராமணருக்கு எதிரான இயக்கம் ஆங்காங்கே வலிமை பெற்று, வேகமடைந்தபோது அதன் விளைவாகப் பெண்களின் பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகியது.

சமூகத்தின் ஏற்றத்தாழ்வு அமைப்பு பெண்ணடிமைத் தனத்திற்குத் துணை போனதால் சாதியரீதியான அடக்குமுறையையும் பெண்ணடிமைத்தனத்தையும் முதன்முதலாக ஒன்றாக இணைத்தவர் தீவிரவாதியான ஜோதிரோபூலே (1827-1890). மகராஷ்டிரத்தில் தோன்றிய இவரால் பிராமண எதிர்ப்பு இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. அவ்வியக்கம் குழந்தைமணம், சாதி ஏற்றத்தாழ்வு, தீண்டாமை ஆகியவற்றை எதிர்த்ததோடு பெண்கல்விக்கும் விதவைத் திருமணத்திற்கும் பிரசாரம் செய்தது. மராட்டி, குஜராத்தி சீர்திருத்தக்காரர்கள் மிக முன்னணியில் நின்று மேற்கிந்தியாவின் பெண்ணடிமைத்தனத்திற்கு எதிராகப் போராடினர்.

1820இல் பூனாவில் பிராமணர் அல்லாதார் பிராமண சீர்திருத்தக்காரரோடு கட்டாயப் பெண் கல்வியைக் கோரிநின்றனர். அதனை எதிர்த்து நின்ற தீவிரத் தேசியத் தலைவரான லோகமான்ய பாலகங்காதர திலகரைப் புறக்கணிக்கவும் அவர்கள் தயங்கவில்லை.

பிராமணரின் மேலாண்மை குறித்துத் தென்னிந்தியாவிலும் எதிர்ப்புக்குரல் வேகத்தோடு உரக்க ஒலித்தது. 1920இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் ஈ.வெ.ரா. சாதிய முறைகளைக் கண்டனம் செய்தும், சமயச் சடங்குகளையும், விக்ரக ஆராதனையைச் சாடியும் தமிழகமெங்கும் பிரசாரம் செய்தார். பெண்களுக்கான சமவுரிமைகளுக்காகப் போராடிய அவர் சுயமரியாதைத் திருமணத்தை அறிமுகப்படுத்தினார். சமய ஆசாரியர்க்கு இடமில்லாமற் போவதற்கும் பெண்ணும் ஆணும் விருப்பப்பட்டுத் திருமணம் செய்து கொள்வதற்கும் இது அடிகோலியது. பெண் விடுதலைக்கு மிகத் தீவிரமாகப் போராடியவர்களுள் பெரியாரின் பங்கு தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். பெரியார் தலைமையில் 1928இல் செங்கல்பட்டில் நடந்த மாநாட்டில் பெண்களுக்கு 50 விழுக்காடுகள் பங்களிப்பும் பிரதிதித்துவமும்

வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்று வரை அது நிறைவேறவில்லை.

தேசியப் போராட்டத்தில் தீவிரப் பங்கேற்ற பாரதியார் பெண் விடுதலைக்குப் போராடியதும் உரத்துக் குரல் கொடுத்ததும் இந்தியப் பெண் விடுதலை வரலாற்றில் ஒரு சகாப்தம் என்பதில் மறுகருத்து இருக்கவியலாது. எனவே பாரதியை விலக்கி இங்கு பெண்விடுதலை என்ற பேச்சுக்கே இடமில்லையென்பதை நினைவுப்படுத்திக் கொள்வது மிக முக்கியமானது.

## இந்திய விடுதலைக்குப் பின்

இந்தியா சுதந்திரம் பெற்றதும் மக்களிடையே புதிய நம்பிக்கையும் புத்தெழுச்சியும் பிறந்தன. நாட்டு முன்னேற்றத்திற்குப் பல திட்டங்களை அரசு வகுத்தது. அரசியல் நிர்ணய சட்டத்தின் மூலம் சமத்துவம் நிலைநாட்டப்பட்டது. மத்திய சமூக நலத்துறை 1953இல் ஏற்படுத்தப்பட்டு, பல நூறு 'மகிளா மண்டல்கள்' தோன்ற வழி வகுத்தது. ஆயினும் அவை மக்களைச் சென்றடையவில்லை என்பதோடு பல காரணங்களால் ஊக்கமிழந்து மந்த நிலையை அடைந்தன.

1960வரை வெறும் தாட்களில் மட்டுமே இவை இடம் பெற்றிருப்பதைப் பல ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. இந்தச் சூழலில் இந்தியாவில் பொருளாதார நெருக்கடியும் ஒருவித தேக்கநிலையும் விலைவாசி ஏற்றமும் பணவீக்கமும் நிலமற்றோர் எண்ணிக்கையும் அதிகமானதால் ஆங்காங்கே கிளர்ச்சிகள் வெடிக்கலாயின. நகரம், கிராமம் ஆகிய எல்லா இடங்களிலும் அதிருப்தி நிலவியது. இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி மூன்றாய்ப் பிரிந்தது இந்தக் காலக்கட்டத்தில் மிக முக்கிய நிகழ்ச்சி என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பெண்களின் பிரச்சனைகளை அவை பெருமளவு எடுத்துக் கொள்ளவில்லையென்றாலும் பொதுக்கிளர்ச்சியில் அவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1960களின் நெருக்கடிச் சூழல் பாட்டாளி மக்களைத் தீவிரப் போராளிகளாக்கியதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தியா, பெரும் அரசியல் குழப்பத்தில் சிக்கியிருந்த இந்தக் காலக் கட்டத்தில் மேற்குவங்கக் கிராமப்புற மக்களின் நிலப்பசியும், வேலைப்பசியும் நக்ஸல்பாரி இயக்கத்திற்கு வழிவகுத்தது. இது ஆந்திரப்பிரதேசம், பீகார், கேரளா ஆகிய மாநிலங்களில் வேகமாகப் பரவியது. பர்த்வான் மாவட்டத்தில் இராணுவ அடக்குமுறை நேர்ந்தபோது இரண்டாயிரம் பெண்கள் எதிர்த்துப் போராடியது வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகும்.

பீகாரிலும் மத்தியப் பிரதேசத்திலும் பெண்கள் நிலச்சுவான்தாரை எதிர்த்துப் போரிட்டனர். ஆதிவாசிகள் மகாராஷ்டிர துளியா மாவட்டத்தில் 1972இல் நிலச்சுவாந்தார்களையும் ஊழல் அதிகாரிகளையும் எதிர்த்துப் போராடியபோது பெண்களின் பிரச்சனைகளும் போராளிகளின் கவனத்தை ஈர்த்தது. நகரவாசிகள் ஆதிவாசிகளைப் பலாத்காரத்திற்கு உட்படுத்தியதும் குடிபோதையில் மனைவியை அடித்தலுமான பிரச்சனைகள் நூற்றுக்கணக்கான பெண்களை ஈர்த்தன; மாறுதலுக்கான தளத்தை அமைத்துத் தந்தன.

1970இல் அரிசி விலையேற்றத்திற்கு எதிரான ஓர் இயக்கம் தோன்றியபோது ஏறக்குறைய பல்வேறு கட்சிகளும் இணைந்து பெண்களை ஒருங்கிணைத்துப் போராடின. இடதுசாரிக் கட்சிகளும் போராட்டத்தில் பெண்களை ஒருங்கிணைக்க வேண்டியதின் அவசியத்தை அப்போது உணர்ந்தன.

1974இல் குஜராத்தில் மாணவர்களாலும், இளைஞர்களாலும் தலைமை ஏற்று நடத்தப்பட்ட நடுத்தரவர்க்க மக்களின் கொந்தளிப்பு வெகுஜன ஆதரவைப் பெற்றது. லஞ்சமற்ற அரசாங்கம், புதிய சமுதாயம் போன்ற கோரிக்கைகளுக்காகப் போராடியது. ஜெயபிரகாஷ் நாராயணன் தலைமையேற்று நடத்திய 'முழுப் புரட்சித் தேவை' என்ற பீகார் இயக்கப் போராட்டத்திற்கு எல்லா எதிர்க்கட்சிகளும் ஆதரவளித்தன. போனஸ், பஞ்சப்படி மற்றும் பிற பொருளாதார கோரிக்கைகளுக்காகத் தொழிலாளிகள் நடத்தி வந்த போராட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1974இல் நடைபெற்ற நாடு தழுவிய இரயில்வே போராட்ட வேலை நிறுத்தத்தில் தொழிலாளர் போராட்டம் தன் உச்சக்கட்டத்தை அடைந்தது. இரயில்வே தொழிலாளர்களின் மனைவியர் சித்திரவதை செய்யப்பட்டு பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டனர். மேற்சொன்ன எல்லாப் போராட்டங்களிலும் இந்தியப் பெண்கள் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பது மிக முக்கிய அம்சம்.

இவை தவிர கடந்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளில் பல அமைப்புகள் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றை நீராய் தேசாய், விபூதிபட்டேல் இருவரும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தினர். (இந்தியப் பெண்களின் சாதனையும் சவாலும், பக். 84-85).

1. தன்னுரிமை மகளிர் அமைப்புகள்: இவை போராட்டங்களின் வாயிலாகப் பெண்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல், பிரச்சாரங்கள் செய்தல்,

மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்துவருகின்றன.

2. வெகுஜன அமைப்புகள்: அடிமட்ட மக்கள் இயக்கங்கள் தொழிற்சங்கங்கள், விவசாயத் தொழிலாளர் சங்கங்கள், மக்கள் உரிமைக் கழகங்கள், பழங்குடியினரின் அமைப்புகள் போன்றவற்றில் ஏராளமான பெண்கள் அங்கத்தினராக இருந்தனர். இவ்வமைப்புகளில் பெண்கள் பங்கு பெறுவதோடு மட்டுமன்றித் தங்களைப் பாதிக்கும் பல்வேறு பிரச்சனைகளை எதிர்த்துத் தீவிரமாகப் போராடி வருகின்றனர். அவை மனைவியைக் கொடுமைப்படுத்துதல், பலாத்காரம், பண்ணையார் கொடுமை, குடிப்பழக்கம், மந்திரவாதிகளின் ஏமாற்றுவித்தை போன்றன.

3. பெண்களுக்குப் பலவித உதவிகள் செய்வதற்கென அமைந்தவை, ஆதரவற்ற மகளிருக்குப் புகலிடம் தருபவை.

4. தொழில்முறைச் சங்கங்கள்: மருத்துவர், வழக்கறிஞர், விஞ்ஞானிகள், ஆராய்ச்சி அறிஞர், பத்திரிகையாளர்கள் போன்றவர்களை உறுப்பினர்களாகக் கொண்டவை.

5. அரசியல் கட்சிகளில் மகளிர் அணிகள்.

6. பெண்களின் பிரச்சனைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டுள்ள குழுக்கள், இக்குழுக்களில் மகளிர் இயக்கங்களைச் சேர்ந்த அறிஞர்களும் செயல்வாதிகளும் அங்கத்தினராக இருப்பர்.

அறுபதுகளின் பின்பகுதியில் மாவோவின் ஓங்கிய புரட்சியும் அதன் இறங்குநிலையும் ஒற்றுமைக்குலைவும் புரட்சிகரமான சமூகமாறுதல் ஏற்படவேண்டுமென்றால், வேறுபட்ட ஒடுக்கப்பட்ட குழுக்களும் முதலில் அமைப்பு ரீதியாகத்தான் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டு தங்கள் பொது விரோதியை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற முடிவை மேற்கொள்ளச் செய்தன. ஆனால் எப்படி மகளிரை ஒருங்கிணைத்துப் பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதே இக்காலக் கட்டத்தில் பெண் அமைப்புகள் எதிர்கொள்ள வேண்டிய சவாலாக இருந்தது. விழிப்புணர்வை ஏற்படுத்துதலே முதற்கடமையாகக் கொள்ளவேண்டுமென்றும், தொழிலாளர், மலைவாழ் மக்கள் ஆகிய அனைவரிடமும் இதுவே முதலிடம் பெற வேண்டுமென்று பல்வேறு பெண்ணியக்கங்களும் குழுக்களும் முடிவு செய்தன.

தொழிலாளர்கள், ஆதிவாசிகள் சாதிய எதிர்ப்புக்கான அமைப்புகள், குறிப்பாகச் சில பிரச்சனைகளுக்கு எதிரான அமைப்புகள் ஆகியவை கலந்துரையாடிப் பெண்ணடிமைத் தனத்திற்கான கோட்பாடுகளைக் கண்டறிய முயன்றன. துவக்க ஆண்டுகளில் இந்த மாதிரியான பிரச்சாரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே அமைந்தன. 1978இல் பம்பாயில் நடந்த சோசலிசப் பெண்ணியவாதிகள் மாநாட்டில் அவர்கள் பம்பாய்க்குழு, டெல்லிக்குழு என்றே தங்களைப் பிரதேச ரீதியாகவே அடையாளம் காட்டிக்கொண்டனர். 78, 80களில் பெண் அமைப்புகளும் பிரசாரக்குழுக்களும் இந்தியா எங்கும் ஆரம்பிக்கப்பட்டன.

வரதட்சணைக் கொடுமை, காவலர் பலாத்காரம் குறித்த கிளர்ச்சி, தொழிலாளர் சங்கத்தினரை ஒருங்கிணைத்தல், குடும்பப் பெண்களின் பிரச்சனை, குடிசைவாழ் மக்களின் ஒருங்கிணைப்பு ஆகிய பல்வேறு செயல்பாடுகளை முன்னிறுத்தி ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் செயல்பாடுகள் பத்திரிகைகளின் கவனத்தை ஈர்த்ததோடு பொதுவான பிரச்சனைகளின் பரிமாணத்தையும் அடைந்தன.

வரதட்சணைக் கொலை, தற்கொலை என்று கூறப்பட்டு வந்த போக்கிற்கு மாறாக முதல்முறையாக டெல்லியில் 1979இல் அது கொலை என்று கண்டுபிடிக்கப்பட்டது. இளம்பெண்கள் கொலை செய்யப்பட்டதை வரதட்சணை இறப்புகள் காட்டின. மாமியார் மாமனாரால் செய்யப்பட்ட கொடுமைகள் மருமகளை எரித்துக் கொல்ல நிர்பந்தித்தன என்ற செய்தி வெளிச்சத்திற்கு வந்தது. இந்தச் செயல்பாடுகள் முதன்முறையாக குடும்ப அந்தரங்கங்களில் மகளிர் இயக்கங்கள் பிரவேசம் செய்ததைக் காட்டியதோடு பெண்ணடிமைத்தனத்தின் மிகப்பெரிய தளமாகக் குடும்பம் இருப்பதையும் உணர்த்தியது.

வரதட்சணை கொலைக்கு எதிராகக் குடும்ப உறுப்பினர்களை எதிர்த்துச் சில மகளிர் குழுக்கள் வீட்டுக்கு வெளியேயும், அலுவலகத்திற்கு முன்னேயும் நின்று சமூகத்திடமும் அரசிடமும் நியாயம் வழங்கக் கோரிக்கைகளை முன் வைத்தபோது குடும்பங்களின் உட்கட்டுமான எல்லைச் சுவர்கள் சரிந்து போயின.

## தன்னுரிமை மகளிர் அமைப்புகளின் சிறப்புக் கூறுகள்

செயல்வாதியான விபூதிபட்டேல் தன்னுரிமை மகளிர் அமைப்புகளின் சில தனித் தன்மைகளைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

1. இயக்கங்களைப் பெண்களே ஏற்படுத்தித் தலைமை தாங்கி நடத்துவர்.

2. பெண்களுக்கெதிரான அடக்குமுறை, சுரண்டல், அநீதி, ஏற்றத்தாழ்வு பற்றிய போராட்டமே முதன்மையானதாகவும், முக்கியமானதாகவும் கருதப்பட்டது.

3. தங்கள் தேவைகளுக்காகவோ, தீர்மானங்களை முடிவு செய்யவோ இவை எந்த அரசியல் கட்சிக்கும் கட்டுப்பட்டவை அல்ல.

4. பெண்களை உடைமைப்பொருளாகக் கருதுவதையும் போகப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதையும் எதிர்த்து அவர்களைத் தனிப்பட்ட மானிட இனமாகக் கருத வேண்டும் என்று போராடும் தன்மையன.

5. சமத்துவமும் விடுதலையும் பெண்ணிய நோக்கில் பார்க்கப்பட்டுக் கோரிக்கைகளாக வைக்கப்பட்டன.

6. இவை பெண்களால் பெண்களைக் கொண்டு பெண்களுக்காக நடத்தப்படும் அமைப்புகள்.

மேலைப் பெண்ணிய இயக்கங்களின் வழித்தோன்றிய இயக்கங்களின் செயல்பாட்டு முறைகள், பிரச்சனைகளின் தன்மையை முன்னெடுத்துச் செல்லும் பாங்கு ஆகியன இந்திய மகளிர் இயக்கங்களைக் குறிப்பிடுமளவில் பாதித்தன. பல உறுப்பினர்களும் தங்களைச் 'சோசலிஸ்டு பெண்ணியவாதிகள்' எனக் கூறிக் கொண்டனர். இந்தக் குழுக்கள் பெரும்பான்மையான நகரங்கள் அனைத்திலும் இடம்பெற்றன. தேசிய அளவில் இந்திய மகளிர் விடுதலை இயக்க மாநாடுகள் பம்பாயில் 1985 டிசம்பரில் நடந்தபோது இந்த மாநாட்டில் 400க்கும் மேலான பங்கேற்பாளர் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய நூறு குழுக்களிலிருந்து பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பழைய மகளிர் இயக்கங்களைக் காட்டிலும் இது வித்தியாசமானது என்பதனை இங்கு குறிப்பிட வேண்டும். கல்வி கற்ற நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவராக உறுப்பினர்கள் இருந்தமை குறிக்கத்தக்கது. சர்வோதயாவிலிருந்து சோசலிசப் பெண்ணியம் என்று சொல்லப்படுகிற அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் வந்தவர்கள்; பல்வேறு அரசியல் மேம்பாட்டைச் சார்ந்தவர்கள்; இளையவர்கள் அமைப்புகளில் இருக்கும் ஏற்றத்தாழ்வை விரும்பாதவர்கள். அதற்கு மாற்றான ஒரு முறையைப் பின்பற்றத் தயாரானவர்கள். உதாரணமாக சகியா, மைத்திரினி, மனுஷி, மகிளா சங்கர்ஷ சமிதி, ஸ்ரீசக்தி, நாரிசமதா மஞ்ச் விமோசனா, ஸ்ரீலேகா போன்ற அமைப்புகள் / குழுக்கள் சிலவற்றைக் குறிப்பிடலாம். தங்கள் குழுக்களுக்கு அவர்கள் வைத்த பெயர்களே பெண்ணிய ஒருங்கிணைவின் ஒற்றுமையைக் காட்டிநிற்கின்றன.

டில்லியில் உள்ள பெண்ணுரிமை இயக்கங்களின் சங்கங்கள் ஒருங்கிணைந்து தாஹெஜ் விரோதி சேத்னா மஞ்ச் என்ற பெயரில் வரதட்சணைக் கொடுமைகளை எதிர்த்துப் போராடின. இவ்வழியில் டில்லியில் சஹேலி, பம்பாயில் மகளிர் மையம், பூனாவில் ஸ்திரி ஆதார்கேந்த்ரா, கான்பூரில் சகிகேந்த்ரா ஆகியன தோன்றிச் செயல்படுகின்றன.

எண்பதுகளில் பெண்ணியவாதிகளால் சிப்கோ இயக்கம் பெண்கள் இயக்கமாக மாறியபோது, 'பெண்களும் சுற்றுப்புறச் சூழலும்' என்பதைப் பற்றியதாகக் கோட்பாடுகளும் வளர்ந்தன. குழப்பத்திற்கு எதிரான கிளர்ச்சி சிப்கோ இயக்கத்தில் பெண்ணியவாதிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இது 1970களின் துவக்கத்தில் 'ஷகாதா' இயக்க அமைப்பைப் போல் ஆனது. மேற்கிந்தியாவில் ஷகாதா இயக்கம் என்பது நிலமற்ற ஆதிவாசி தொழிலாளர் இயக்கமாகும். உள்ளூர் நிலச்சுவான்தார்களின் மனிதத் தன்மையற்ற முறைக்கு எதிரான இயக்கமது. இதிலும் பெண்களின் விழிப்புணர்ச்சி காரணமாகக் குடிக்கு எதிரான கிளர்ச்சி தோன்றியது. அது மதுப்பழக்கத்திற்கு எதிரான பிரச்சாரமாக அமைந்தது.

இந்த நிலையில் இந்தியப் பெண்ணியச் செயல்பாடுகள் பன்முக அமைப்பாக மாறியபோது எல்லா இயக்கங்களிலும் ஏற்படுவது போன்றே பல பிரிவுகளும் பிளவுகளும் தோன்றின. எல்லா இயக்கங்களுக்கும் இது உரியதுதான் என்றாலும் பெண்ணுரிமை இயக்கங்களை இவை மிகவும் பாதித்தன. பெண்களின் ஒருங்கிணைப்பில்தான் பெண்ணியம் வேரூன்றியுள்ளது என்று நினைத்தவர்க்கு 'சகோதரித்துவம்' பொய்த்துப் பொருளற்றும் போனதாகவே எண்ணத் தூண்டியது. இந்தப் பிரிவுகள் பெண்ணியத்தின் அடிப்படையைக் கேள்விக்குட்படுத்தச் செய்து, பல பெண்ணியவாதிகளைச் சிந்திக்கத் தூண்டின. பெண்களின் பொது அனுபவம் வற்புறுத்தப்பட்டு, இத்தகைய வேறுபாடுகளை அந்தப் பொது அனுபவத்தால் போக்க முடியாதென்று உணர்ந்தபோது ஒருங்கிணைப்பின் தேடல் பயனற்றுப் போனதோடு மாறான வகையிலும் விளைவுகளை ஏற்படுத்திப் பல்வேறு தீமைகள் உள்ளே நுழைய வாய்ப்பளித்து விட்டன. அதன் விளைவாகச் சுயாட்சிக் குழுக்கள் பல உருவாயின எனலாம்.

## அரசியல் கட்சிகளில் பெண்களின் பங்கு

கடந்த 10 ஆண்டுகளாகப் பெண்கள் பிரச்சனைகளில் அரசியல் கட்சிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டியுள்ளன.

- பிஜேபி, ஆர்எஸ்எஸ் போன்ற வலதுசாரிகளுக்குப் பரந்த அளவில் பெண்கள் அணிகள் உள்ளன. இந்திய நாட்டின் பண்டைய கலாச்சாரத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டுமென்ற நோக்கில் அவர்கள் செயல்படுகின்றனர்; செயல்படுவதாகக் கூறுகின்றனர்.

- பிராந்தியக் கட்சிகள் தேர்தல் அறிக்கைகளில் பெண்களின் உரிமைகளை வலியுறுத்திப் பேசிவருகின்றன.

- ராஷ்டிரிய சஞ்சப் மஞ்ச் வரதட்சணை முறையை எதிர்ப்பது தங்கள் கட்சியின் ஒரு முக்கியக் குறிக்கோள் என்கிறது.

- சர்வோதய காந்திய இயக்கங்கள் பெண்களின் உரிமைகள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கென பேரணிகள், கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவற்றை நடத்திவருகின்றன.

இதுவரை பெண் வாக்காளர்களைப் புறக்கணித்து வந்த கட்சிகள் யாவும் பெண்களின் பிரச்சனைகளைப் பேசத் தொடங்கியுள்ளன.

ராஜிவ் காந்தி, தன் ஆட்சியில் பெண்களுக்கெனத் தனி அமைச்சரை நியமித்ததும் முக்கிய நிகழ்ச்சியாக / செயல்பாடாக நினைவில் கொள்ள வேண்டும்.

- இடதுசாரிக் கட்சிகளின் பெண் இயக்கங்கள்

- இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பெண்கள் அணியான இந்தியப் பெண்கள் சங்கம்

- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பெண்கள் அணியான அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்

- அனைத்திந்திய உழைக்கும் பெண்கள் கூட்டுக் குழு

ஆகியனவும் அனைத்திந்திய அளவில் பரந்துபட்ட பெண்கள் அமைப்புகளாகும்.

சோசலிஸ்டு கட்சியின் பெண்கள் அணி மகாராஷ்டிரத்திலும் டில்லியிலும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கட்சிகளுக்கெல்லாம் தொழிற்சங்கப் பின்னணி இருப்பதால் ஏராளமான உழைக்கும் மகளிர் உறுப்பினராக உள்ளனர். பெண்கள் வரலாற்றில் இவை குறிப்பிடத்தகுந்த ஒரு மாற்றமாகும்.

பெண்கள் இயக்கங்கள் வளர்ந்ததின் விளைவாகப் பெண்கள் பிரச்சனைகளைக் குறித்து மேலும் ஆய்வு செய்யப் பல்வேறு குழுக்களும் முன்வந்து செயல்பட்டது முக்கிய அம்சமாகும்.

1984இல் இந்திய மகளிர் குழு நிறுவப்பட்டது. இக்கழகம் பெண் அறிஞர்களையும் செயல்வாதிகளையும் கொண்ட சிறந்த ஆய்வியல் அமைப்பாகும். இம்மையம் இரண்டு தேசிய மாநாடுகளையும் நடத்தியது. அவற்றில் பெண்களின் பல்வேறு பிரச்சனைகள் ஆராயப்பட்டன. இப்போது பெண்களைப் பற்றிய ஆய்வும் சான்றாதார்ரங்கள் தொகுப்பும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

- பல்கலைக்கழக மானியக் குழு
- இந்திய சமூகவியல் ஆய்வுக்குழு
- அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுக் குழு
- பிற தேசிய, சர்வதேசிய நிறுவனங்கள்

ஆகியவை பெண்களைப்பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளன.

- பம்பாயில் உள்ள SNDT பல்கலைக்கழகத்தில் மகளிரியலுக்கான ஆய்வுப் பிரிவு
- டில்லியில் மகளிர் முன்னேற்ற ஆய்வு மையம்
- சமூக ஆய்வில் அறக்கட்டளை நிறுவனம்

ஆகியனவும் மகளிர் பிரச்சனைகளை அலசி ஆராய்வதில் முன்னோடிகளாக விளங்குகின்றன.

1984இல் தமிழ்நாட்டில் அப்போதைய முதலமைச்சராக இருந்த எம்ஜிஆர். அவர்களால் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மகளிர்க்காகவே நிறுவப்பட்டது. இப்போது மதுரை, சென்னை ஆகிய இடங்களில் ஆய்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டு வருகின்ற அளவிற்கு விரிவுபெற்றுள்ளது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சி என்று கூறலாம். வளர்ந்த நாடுகளில் பெண்களுக்கென உயராய்வு மையங்கள் உண்டே தவிர இப்படிப்பட்ட தனிப் பல்கலைக்கழகம் ஏதுமில்லை என்பதும் எண்ணத்தக்கது.

பெண்களுக்கென ஏற்படுத்தப்பட்ட இப்பல்கலைக்கழகத்தில் பெண்களை மையப்படுத்திப் பெண்களின் மேம்பாட்டிற்கான ஆய்வுகள் பெண்களால் மேற்கொள்ளப்படுகின்றன. முதுகலை

வகுப்பில் மகளிரியல் சிறப்புப்பாடமாக வைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## போராட்ட வழிமுறைகள்

சமத்துவம், முன்னேற்றம், சமாதானம் ஆகியவற்றைப் பிரகடனப்படுத்தும் நோக்கத்துடன் இயங்கி வந்த அனைத்திந்திய மகளிர் பத்தாண்டின் இறுதியில் 1985இல் பம்பாயில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. பத்தாண்டுகளில் மகளிர் அடைந்துள்ள முன்னேற்றத்தை அதில் மதிப்பீடு செய்தது மிகப்பெரிய முக்கியத்துவத்தை அடைந்தது.

தன்னுரிமை அமைப்புகள் பிற சமூக, அரசியல் அமைப்புகளின் தீர்மானங்களுக்கோ, தேவைகளுக்கோ அடிபணிந்து செயல்படுவதில்லை.

தாமே தலைமையேற்றுப் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துப் போராட்டங்களை நடத்துகின்றன. இவை கட்சி சார்பற்றவை; சுதந்திரப் போக்குடையவை; இவ்வியக்கத்தைச் சார்ந்தவர்கள் எக்கட்சியைச் சார்ந்தவராகவும் இருப்பர். கட்சியில் பிடிப்புள்ளவராகவும் இருப்பர். ஆனால் ஆண்களையும் பெண்களையும் பிரித்துக் காணும் பிரிவினைவாதிகள் இல்லை. இவ்வமைப்புகள் நடத்தும் போராட்டத்தில் ஏராளமான ஆண்கள் கலந்து கொள்வதுண்டு. ஆனால் இயக்கத்தின் நடவடிக்கைகளைப் பெண்களே முடிவு செய்கின்றனர்.

பெண்களை ஒன்றுதிரட்ட இவை பல வழிமுறைகளைக் கையாளுகின்றன. பெண்ணுரிமைகளை ஆதரித்தும் பெண்களே ஒடுக்கும் சக்திகளை எதிர்த்தும், பொதுமக்களின் ஆதரவினைப் பெறச் சிற்றறிக்கை, துண்டு பிரசுரங்கள் வெளியிடுகின்றன. கோரிக்கைகளை வலியுறுத்திக் கையெழுத்துப் போராட்டம் நடத்துகின்றன. வார, மாத இதழ்களில் கட்டுரைகளை வெளியிடுகின்றன. பேரணி, ஊர்வலங்கள், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

முச்சந்தியில் கூட்டங்கள் நடத்தியும், வீதி நாடகம், சுவரொட்டி, கண்காட்சி, பிரச்சனைகளை விளக்க யாத்திரை ஆகியவற்றின் மூலம் மக்களிடமிருந்து தமக்கு ஆதரவைத் தேடுகின்றன. லாபநோக்கமின்றி இதழ்கள், கடிதங்கள், அறிக்கைகள் வெளியிடுவதைத் தம் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## புதிய மகளிர் இயக்கங்களின் சிறப்புக் கூறுகள்

பழைய மகளிர் இயக்கங்கள் அந்தஸ்து வித்தியாசம், வேற்றுமை காட்டுபவை. அவர்களைப் பொறுத்தவரை தம் நிலையிலிருந்து இறங்காமல் துன்பப்படும் ஏழைப் பெண்களுக்கு மேலிடத்திலிருந்து செய்யும் சமூக சேவையாகத் தங்கள் செயல்பாடுகளை மேற்காண்டனர். சமூக அமைப்பினைக் கடந்து செயல்படுவதில் நம்பிக்கை கொள்ளாதவர்கள்; தமது வாழ்வில் சாதிக் கட்டுப்பாடுகளுக்கு மதிப்புக் கொடுத்து அதற்கு உட்பட்டவராக வாழ்பவர்கள்; தமது உயர்நிலையைக் காத்துக்கொள்வதில் கருத்தாய் இருப்பவர்கள். இவை பொதுவான இயல்புகள், விதிவிலக்காகவும் ஓரிரண்டு பேர் அமைந்திருக்கலாம். இடதுசாரிகளைச் சார்ந்த பெண்கள், சமூகப்புரட்சி ஏற்பட்டபின் பெண்ணின் அனைத்துப் பிரச்சனைகளும் தானாகவே தீர்ந்துவிடுமென்று நம்பினர்.

புதுமுறையான பெண்கள் இயக்கத்தார், பால் ரீதியிலான அனைத்துப் பாகுபாடுகளையும் எதிர்க்கின்றனர். இவர்கள் சாதி, இன பாகுபாடுகளைப் போலவே, பால் ரீதியான பாகுபாட்டையும் பெரும் பிரச்சனையாகக் கருதுகின்றனர். உழைக்கும் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்கும் சக்தி வாய்ந்த கருவிகளாகவே பால் பாகுபாட்டைக் கணிக்கின்றனர். அத்துடன் சாதி, மத, இனப் பாகுபாடுகளை ஒரே அளவில் எதிர்க்க வேண்டுமென்று கருதுகின்றனர். சொந்த வாழ்க்கையிலும் பொருளாதாரச் சுதந்திரத்தை, பெண் விடுதலைக்கான குறைந்தபட்ச தேவையாகக் கருதுகின்றனர். இவர்கள் தங்களைப் பெண்ணியவாதிகளென்றே அழைத்துக் கொண்டனர். சட்டச் சீர்திருத்தங்கள் வாயிலாகப் பெண்ணுரிமைகளைப் பெறலாமென்று நம்பியவர்கள் மிதவாதப் பெண்ணியவாதிகள் என்றும், சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளால் பெண்ணடிமைத்தனம் நிலவுவதாக நினைப்பவர்கள் சமர்தர்ம பெண்ணியவாதிகள் என்றும், ஆண்களே பெண்களின் அடிமைத்தனத்திற்கும் துயரங்களுக்கும் காரணம் என நம்பியவர்கள், தீவிரவாதப் பெண்ணியவாதிகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

புதிய பண்பாடு, புதிய கோட்பாடு, புதிய அறநெறி (சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது) ஆண், பெண் உறவு முறைகளைப் படைக்க முடியும் என்று நம்பினர். இந்திய நாட்டில் பெண்ணியவாதிகள் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் முற்றிலும் மாறுபட்டவை.

இங்கு முதலாளித்துவப் பொருளாதார முன்னேற்றம் முதலாளித்துவத்திற்கு முற்பட்ட காலகட்டத்திலுள்ள பல உறவு

முறைகளை ஒன்று சேர்த்துள்ளது. அதனால் இந்நாடுகளில் முற்றிலும் முரண்பாடான சமூகப் பண்பாட்டுக் கலப்படங்கள் தோன்றியுள்ளன.

உழைப்பாளிகளின் அணியிலிருந்து பெண்கள் வெளியேற்றப்படுகிறார்கள். இந்தியத் தொழில் துறையில் பெண்களின் பங்கு குறைந்துகொண்டே வருகிறது. பொருளாதாரச் சுதந்திரம் இல்லாததால் குடும்பத்தாரையே முழுதும் சார்ந்து நிற்கின்றனர் பெண்கள். மேலை நாடுகளில் வெளியேறிச் செல்வார்க்கு மாற்று வசதி வாய்ப்புண்டு. கல்வி பெற்று, பணி செய்வதால் தன்னம்பிக்கையும் அவர்களுக்குண்டாகிறது. ஆனால் இந்தியப் பெண்களில் பெரும்பாலோர் படிப்பறிவு அற்றவர்கள். பிற்போக்குத் தன்மை, பண்பாட்டு முறைகள், அன்றாட வாழ்க்கைக்கான கூறுபாடுகள் ஆகியன அவர்களை ஆணாதிக்க மதிப்புகளையும் பாலியல் கொடுமைகளையும் எதிர்த்துப் போராடும் சக்தியற்றவர்களாக்கி விடுகின்றன. ஆகவே இந்தியப் பெண்ணியவாதிகள், தங்களுடைய போராட்டங்களைப் பாலியல் பலாத்காரம் செய்தல், வரதட்சணைக் கொலை, ஆபாசம் போன்றவற்றை மட்டும் மனதில் கொண்டு போராடுகிறார்கள். சிலர் உழைக்கும் மக்களின் பொருளாதாரச் சிக்கல்களுக்காகப் போராடி வருகின்றனர்.

இந்தியப் பெண்ணியவாதிகளை, பொதுவாக ஆசியப் பெண்ணியவாதிகளை மேற்கத்தியப் பெண்ணியவாதிகளிடமிருந்து பிரிக்கும் மற்றொரு முக்கிய அம்சம், ஏகாதிபத்தியமும் இனவெறியுமாகும்.

மேலைநாட்டுப் பெண்ணியத்திற்கும் இந்தியநாட்டுப் பெண்ணியத்திற்கும் நிறைய வேற்றுமையுண்டு. மேலைநாட்டுப் பெண்ணியத்தில் இடம்பெற்ற மூன்று முக்கிய அம்சங்களில் வேறுபாட்டைக் காண முடிகிறது.

- பெண்ணியவாதிகளின் கோபம்.
- தந்தைவழிச் சமுதாய அமைப்பின் மீதான அழுத்தம் மனிதர்களை அடக்குபவர்களாக, ஆள்பவர்களாகக் காண்பது.
- தனிமனித வாதத்தையும் சமத்துவத்தையும் இணைக்க முடியாத நிலை.
- அரசியல் தத்துவக் கோட்பாட்டில் சமத்துவமாக நோக்கும் நிலை ஆகியன இந்தியப் பெண்ணியத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூற இயலாது. ஏனெனில் இந்தியச் சூழல் இதற்கு முற்றும் மாறானது. ஏற்றத் தாழ்வுடைய

குடும்பத்திற்குள் வயது, ஆண், பெண் இனத்திற்குள் சாதி, படிப்பு, செல்வம், வேலை ஆகியவையும் முக்கிய இடம்பெறுகின்றன.

சமத்துவமென்ற கொள்கை, தனிமனித சுதந்திரம் என்பது நமக்கு அன்னியமானதுதான். 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து இந்தியப் பண்பாட்டில் ஆங்கிலம் பயின்றவர்களால் அது அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய வாழ்க்கையின் நடைமுறைக் கோட்பாடாகச் சுதந்திரம் கிடைக்கும் வரை - நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஜனநாயக அமைப்புமுறை வரும்வரை நிலைமை அதுதான்.

அகமதாபாத்தில் உள்ள 'சேவா' என்ற சுயவேலை வாய்ப்புத்தேடும் பெண்கள் அமைப்பு அனுசூயா என்ற கடித அறிக்கையை வெளியிட்டு விழிப்புணர்ச்சியை உண்டாக்குகிறது. 1982இல் சேவா, கூட்டுறவு வங்கிகளை ஆரம்பித்து மேலும் ஒரு படி முன்னேறியது.

மகாராஷ்டிரத்தில் மனஸ்வினி, மஹிலாமண்டலம், கான்பூரில் சசிகேந்திரம், பூனாவில் ஸ்த்ரி ஆதார கேந்திரம் ஆகியவை பெண்களின் வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொண்டுள்ளன. விதாயக் சன்யாத் இயக்கம் கொத்தடிமை முறையை எதிர்த்தும் நிலச்சீர்திருத்தச் சட்டங்களுக்காகவும் குறைந்தபட்சக் கூலிக்காகவும் போராட்டம் தொடங்கியது. குஜராத்தில், ஹமாரிமண்டல் என்ற பெயரில் வளர்ச்சித் திட்டத்தைப் பல பெண்கள் சேர்ந்து ஏற்படுத்தினர். அவை வகுப்புகள், மருத்துவ முகாம்கள், நெசவுக் கூட்டுறவு அமைப்பு, பால்வளக் கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றைத் தொடங்கின.

அநீதிகளையும் சுரண்டல்களையும் எதிர்த்துப் போராடச் சில அமைப்புகள் தோன்றின. பானி பஞ்சாயத்து என்ற அமைப்பினை நிறுவி, கிராம மக்களுக்கு முறையாகக் குடிநீர் வழங்க அதிகாரிகளை வற்புறுத்தினர்.

கர்நாடகத்திலும் தேசிகர்வாலிலும் பெண்களின் உள்ளூர் அமைப்புகள், மரங்கள் வெட்டுவதை எதிர்த்துப் போர் தொடங்கின. காடுகளை அழிப்பதால் கிராம மக்களின் வாழ்க்கை, போராட்டமாகி விடுமென்று உணர்த்தியது.

மகாராஷ்டிரத்தில் ஷாமிக் சங்கதனா, கஷ்டகாரி சங்கதினா போன்ற பல அமைப்புகள் லஞ்சம், பெண்களைப் பாலுறவு வழியில் கொடுமைப்படுத்தல் போன்ற பிரச்சனைகளுக்கு எதிராகப் போராடுகின்றன; கொத்தடிமைத்தனத்தை எதிர்த்துப் போராடுவதைத்

தமது முக்கிய நோக்கமாகக் கொண்ட இர்மஜீவி சங்கதனா (தானா) ஆந்திரப் பிரதேசத்துக் கிராமங்களைத் தமது போராட்டத்திற்குரிய களமாக எடுத்துக்கொண்டன.

ஆபாசச் சுவரொட்டிகளை எதிர்த்து 1977இல் சென்னையில் தோன்றிய பெண்ணுரிமை இயக்கம், வரதட்சிணைக் கொலை, குடிசைவாழ் மகளிர் அடிப்படை வசதி ஆகியவற்றுக்காகப் போராடும் நிலையிலும் அவர்களுக்குப் பயிற்சி முகாம்கள் நடத்தும் நிலைக்கும் தன்னை விரிவாக்கிக் கொண்டுள்ளது.

பெங்களூரில் ஸ்ரீலேகா, விமோசனா ஆகியனவும் பெண்களுக்கான பிரச்சனைகளை முன்னெடுத்துச் சென்று போராடுகின்றன.

மகளிர் இயக்கங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவளிக்கும் வகையில் நாடளாவிய தொடர்புச் சங்கலிகளை ஏற்படுத்தி வருகின்றன.

## தலித் பெண்ணியம்

இந்தியாவைப் பொருத்தவரையில் சாதியம், சாதிய ஒடுக்குமுறையை மனதில் கொள்ளாமல் எந்தவொரு விடுதலைச் சிந்தனையையோ செயல்பாட்டையோ உருவாக்க யாராலும் இயலாது. சாதிய ஒடுக்குமுறையினை உள்ளடக்காத பெண்ணியச் சிந்தனைகள் நிச்சயமாக முழுமையானதாக இருக்க முடியாது அது அனைத்துப் பெண்களின் விடுதலைக்கும் வழி கோலாது என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

சாதிய ஆதிக்கத்தால் தலித் ஆண்கள் பாதிக்கப்படுவதைக் காட்டிலும் தலித்பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஏனென்றால் சாதிக் கலவரங்கள் நடைபெறும் போதெல்லாம் ஆதிக்க சாதியினர் அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் பெருமளவிற்குப் பலியாவது தலித் பெண்களே. அரசு புள்ளி விவரமும் இதனைத் தெரிவிக்கிறது.

தலித் பெண்கள் தங்களுக்கு எதிராக நடைபெறும் ஆதிக்க சாதிக் கொடுமைகளை எதிர்க்க எழுந்த ஓர் இயக்கம் தான் தலித் பெண்ணிய இயக்கம்.

* இது பிற பெண்களாலேயும் ஒதுக்கப்படக் கூடிய தலித் பெண்களை ஒன்றிணையச் சொல்கிறது.
* தலித் அரசியலில் தலித் பெண் பங்கேற்க வேண்டும்.

தலித் பெண் அமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் என வற்புறுத்துகிறது.

சமூகப் பொருளாதார நிலைகளில் புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டுள்ளவர்கள், அதிகாரப் பயமுறுத்தலுக்கு அடங்கிப் போனவர்கள் தலித் என அடையாளப்பட்டு நாளும் நாளும் அவமானத்திற்குள்ளாக்கப் படுகிறார்கள்.

உள்ளாட்சித் தேர்தல்களில் தலித்பெண்களின் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்படுவதில்லை. ஜனநாயக நாட்டில் தனித் தொகுதிகளில் தலித்துகளைத் தேர்தலில் நிற்கவைக்க முடியாதபோது தலித் பெண்கள் எவ்வாறு அரசியலில் பங்குபெற முடியும்?

தப்பித்தவறிப் பஞ்சாயத்துத் தலைவர்களாக ஆகும் தலித்பெண் காலில் செருப்பணிந்து போகக்கூடாது. பஞ்சாயத்துக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றால் இருக்கை எடுத்துச் செல்ல வேண்டும். பஞ்சாயத்துப் பணிகளுக்கும் செலவு செய்வதைத் தலித் பெண் தீர்மானித்தல் கூடாது போன்ற நிலை இன்றும் தொடர்கிறது என்றால் பெண்ணுக்கு விடுதலை கிடைத்துவிட்டது என்று எப்படிக் கூற இயலும்? போராடிப் போராடி அவர்களுக்குரிய சில மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுள்ளார்கள் பிற பெண்கள். தலித் பெண்களுக்கோ அவையுமில்லை. இதுதான் யதார்த்த நிலை.

உலகமயமாதல் வேறு தலித் மக்களை தலித் பெண்களை மேலும் சுரண்டுகிறது. உழவுத் தொழில் செய்ய இயலவில்லை. நிலமெல்லாம் பெரும் பெரும் அந்நியக் கம்பெனிகளால் விழுங்கப்பட்டு, தலித் பெண்கள் மேலும் சுரண்டப்பட்டு தீராத் துயரநிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

ஆழ்குழாய்க் கிணறுகள், உறிஞ்சி குழாய்கள் மூலம் தண்ணீரும் விற்பனைப் பொருளாகிவிட்டது. நீர்ப்பற்றாக் குறை தலித் பெண்களை மேலும் பிரச்சனைக்கு ஆளாக்கி விட்டது.

வயல்களெல்லாம் வீடுகளாகி வருவதால் தலித் பெண்கள் விவசாய நிலங்களில் பணியாற்ற இயலவில்லை.

கிராமத் தொழில்கள் முற்றுமாக அழிக்கப்பட்டதால் நகரத்திற்குக் கூலி வேலைக்காக இடம்பெயர வேண்டிய கட்டாய நிலை.

ஆடுமாடு மேய்க்கும் தொழில் கூட இல்லாமற் போனது கலைகளும் அவர்களுக்குச் சொந்தமில்லாமல் போனது.

மண்ணின் மக்களாகிய அவர்கள் இழந்தவற்றை யெல்லாம் மீட்டெடுக்க வேண்டும்.

சாதியும் தீண்டாமையும் இருக்கும்வரை தலித்துகளுக்கு விடுதலை சாத்தியமில்லை. தலித் பெண்களுக்கு விடுதலையில்லாமல் பெண் விடுதலை முழுமைபெறாது.

அனைத்துப் பெண் இயக்கங்களும் இணைந்து நின்று முனைந்து செயல்பட்டாலொழிய பெண்ணியம் வெற்றி பெற்றதாகவோ சாதனைகளைச் சாதித்ததாகவோ கூற இயலாது.

இன்றைய நிலையில் சுயஉதவிப் பெண்கள் குழுக்கள் பல மிகச்சிறப்பாகப் பெண்களை ஒருங்கிணைத்துத் தங்களுக்கான பிரச்சனைகளையும் பொதுப்பிரச்சனைகளையும் எதிர்கொள்கின்றன. ஆணின் சார்பின்றி வாழப் பொருளாதாரச் சுதந்திரம் அவர்களுக்கு மிகுந்த தன்னம்பிக்கையை, துணிவைத் தந்துள்ளது. இவை அனைத்துமே பெண்விடுதலைக்காகப் போராடியதின் விளைவுகள் எனலாம்.

பெண் விடுதலையைப் பேசும் இவ்வேளையில் பெண் விடுதலைக்குரிய மொழி பற்றிப் பேசுதலும் தேவையாகிறது.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் மேலைநாட்டு மொழியியலார் பலரும் மொழியைப் பற்றிய ஆய்வில் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். பெண்ணியவாதிகளும் மொழியியலாரின் சில கோட்பாடுகளைத் தங்களுடையதாக ஆக்கிக்கொண்டு செயல்பட்டது பெண்ணிய வளர்ச்சிப் போக்கின் ஒரு புதிய பரிணாமம் எனலாம்.

அடுத்த இயலில் சுருக்கமாக மொழியியலார் சிந்தனைகளைப் பார்க்கலாம்.

# 2

# தணிக்கையும் மீறலும்

மொழி என்பது இயல்பாக வெளிப்படுவது. ஒரு குழந்தையின் பிறப்பிற்குத் தாய் தரும் உணவு எப்படியோ, அப்படியே மொழியும். அவள் உணர்வுகளும் நினைவுகளும் குருதிவழி குழந்தையின் செல்களில் பதிகிறது. பிறந்தவுடன் நாம் கைதட்டும் போது அந்த ஓசையைக் கேட்டு அசைகிறது; பார்க்கிறது. அதற்கு ஏதும் புரிவதில்லை என்றாலும் கூட வளரவளரத் தாய் பேசுவதின் மூலமாக மொழியைக் கற்றுக் கொள்கிறது.

அறிந்து கொள்ளப் பழக்கப்படும் குழந்தையிடம் அறியப்படும் பொருள் குறித்த புரிதலை ஏற்படுத்தும்போது மொழிக்கும் அது சுட்டக்கூடிய பொருளுக்கும் இடையில் ஓர் இடைவெளி ஏற்படுகிறது. இந்த இடைவெளியைப் பூர்த்திசெய்வதில் தாயின் பங்கு அதிகம். இதனை மொழித் தொடர்பால்தான் சாத்தியப்படுத்த முடியும். இப்படிப் புரிந்து கொள்ளும் பழக்கத்திற்குத் தயாராகும் குழந்தை வளர வளர சமூகத்தைப் பார்க்கிறது. கற்றுக் கொடுக்கப்படுவதற்கும் கற்றுக் கொள்வதற்கும் இடையே சமூகப் பண்பாடு செயலாகிறது. இதனால் மொழியும் மொழி மூலம் வெளிப்படும் குரலும் வேறாகிறது. அதாவது மொழியில் ஒரு சார்பான சமூக வரலாறு பதிவாயிருக்கிறது. இது ஓர் இறுக்கத்தைக் காட்டுகிறது. இதன் மூலம் ஆண் தன் அதிகாரத்தைக் காட்டுகிறான். இது பெண்ணின் இருப்பைக் கட்டுப்படுத்துகின்றது. இதனை மாற்ற வேண்டுமென்றால் இதுவரையில் சமூக இயக்கத்தைப் பார்த்துவந்த பார்வையைத் தளர்த்தி, ஒரு நீண்ட நெடிய வரலாற்றின் இயக்கத்தை மீட்டுருவாக்க வேண்டும். அப்படி மீட்டுருவாக்கும் போது ஏற்கனவே கட்டப்பட்டிருக்கும் மரபான பிம்பங்கள் மாறும். மற்றொரு புதிய தளம் / Space வெளி உருவாகும். பெண் தனது குரலை உயர்த்தும் போது புது அர்த்தம் பெறும். பெண் மீது புனையப்பட்ட மொழியானது கட்டுடையும். மௌனம் அதிர்ந்து புதிய சமுதாயம் உருவாகும். இதனை விரிவாகப் பேசுகிறார்கள் மொழியியல்வாதிகளான சசூர், டெரிடா, லக்கான், வொலோஷினோவ் ஆகியோர்.

இந்த வகையில் தாயிடமிருந்து குழந்தைக்கும் சமூகத்திற்கும் ஒரு பிணைப்புப் பாலமாகத் திகழும் மொழியின்றிச் சமூக இயக்கம் இல்லை. இவ்விடத்தில், "மொழிஓடை எவ்வித குறுக்கீடுமின்றித் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கிறது என்று தொடங்குகிறார் (1960:140) சசூர்" என்ற முத்துமோகன் கருத்தை நினைவு கொள்ளலாம் (அமைப்பியல், பின் அமைப்பியல், ப. 8). இந்த ஓட்டத்தில், ஆணின் எண்ணங்கள், ஆணினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள், புனைவுகள் எல்லாம் பெண்ணின் அடையாளத்தை மறைத்துவிட்டன. இங்கே மனித ஆளுமையை மிக நுட்பமாக விளக்குவதில் சிறந்து விளங்கும் ஃபிராய்டு ஆணாதிக்கப் பண்பாட்டின் வரையறைக்குள் இருந்துதான் பெண்ணுக்கு அடையாளம் கற்பிக்கிறார்.

பெண் என்பவள் பிறப்புறுப்பு இழக்கும் பயச்சிக்கலுக்குள் சிக்கித் தவிக்கிறாள். எனவே ஆணைவிடத் தன்னைக் குறையுடையவளாக எண்ணுகிறாள். உண்மையில் எந்த ஒரு சமூக மனிதனும், அவன் விஞ்ஞானியாக இருந்தாலும் கூடத் தனி, சொந்தப் பண்பாட்டுச் செல்வாக்கில் இருந்து முற்றிலும் விடுதலை பெற்றுவிட முடியாது போலும். உண்மையில் பெண்களைப் பற்றி ஃபிராய்டின் கூற்றுகள் அவருடைய யூதப் பண்பாட்டுப் பார்வையின் வெளிப்பாடே ஆகும்.

> யூதப் பண்பாட்டில் ஆண்களின் அன்றாட வழிபாடு:
>
> "கடவுளே! என்னை ஒரு பெண்ணாகப் படைக்காத
> தற்காக உமக்கு நன்றி கூறுகிறேன்'

என்றும், பெண்களின் வழிபாடு:

> "கடவுளே! என்னை ஆண்களின் விருப்பப்படிப்
> படைத்தமைக்காக, உமக்கு நன்றி கூறுகிறேன்".

என்றும் அமைந்துள்ளன (க. பஞ்சாங்கம், பெண்-மொழி-புனைவு, ப. 70). இதை எண்ணிப்பார்க்கும் போது, பெண் புரிந்து கொண்டுள்ள சமூகம், ஆண் உருவாக்கிய சமூகம் என உணரலாம். இது ஆண்மொழியை உற்பத்தி செய்கிறது. ஆண்மொழி என்பது பெண்ணின் சுயத்தை அழிப்பது என்று சொல்லலாம். தந்தை வழிச் சமூக ஆணாதிக்க அடக்குமுறையிலிருந்து பெண் வெளிவரவேண்டும் என்றால், பெண் தனக்கான மொழியைக் கண்டு பிடிக்க வேண்டும். பெண்மொழி தனியே உருவாக வேண்டும் என சசூரோ, டெரிடாவோ, லக்கானோ, வொலோஷினோவோ குறிப்பிடவில்லை. இவர்கள் மொழி என்பது குறிகளாலானது என்று மட்டுமே கூறியுள்ளனர். இவர்கள் மொழியை ஆண்மொழி என்றோ பெண்மொழி என்றோ பிரித்து

ஆய்வு செய்யவில்லை. ஏனென்றால் மொழியில் இடுகுறித்தன்மை பற்றியே அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இதில் தொன்மம் அதிகம் பேசப்பட்டது. தொன்மம், ஆணின் புனைவாலானது. மொழி பொருண்மையை உற்பத்தி செய்வது, தனித்தனிச் சொற்களால் பொருள் கொள்ளக் கூடாது. உறவுகளால் பொருள்கொள்ள வேண்டும். சொல்லின் கட்டமைப்பு, உறவு, அதன் மூலம் உற்பத்தி செய்யும் அர்த்தம் ஆகியவற்றைத் தான் மொழியாய்வின் அடிப்படையாக சசூர் விளக்குகிறார். இந்த அடிப்படையில் இலக்கியத்தை அணுக வேண்டும். இதற்கு அமைப்பியல் ஆய்வு பயன்படும் என்பர் மொழியறிஞர்கள். குறிப்பாக மொழியை ஆய்வு செய்யும் போது ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளபடி சொல்லின் கட்டமைப்பு, உறவு, அதன்மூலம் பெறும் அர்த்த உற்பத்தி இதுவரையில் ஆண் கற்றுத் தந்த மரபிலேயே தொடர்ந்தது. இதில் ஆண் x பெண் என்ற இருமை எதிர்வு கற்பிக்கப்பட்டது. ஆண் உயர்ந்தவன்; பெண் தாழ்ந்தவள். ஆண் சமூகத்தின் பிரதிநிதி! பெண் துணைப் பிரதிநிதி என்று பார்க்கப்பட்டது. இதனால் ஆணின் உளவியல் பெருமைக்குரியதாகவும் உயர்த்தகுதி பெறுவதாகவும் பெண்ணின் உளவியல் தாழ்நிலை அடைவதாகவும் உருவாக்கப்பட்டது. இந்த ஏற்றத்தாழ்வு, பெண்ணின் ஒட்டுமொத்த அடையாளத்தையும் சிதைத்தது.

"தந்தைவழிச் சமூகம் தன்மேல் சுமத்தியுள்ள அடையாளங்களை அழிக்க வேண்டுமென்றால், பெண் தனக்கான மொழியை உருவாக்க முயலவேண்டும்; மொழி உலகிற்குள் இவள் தன்னுடைய அசைக்க முடியாத ஆற்றலைப் பாய்ச்ச வேண்டும்". இப்படித்தான் ஜூலியா கிறிஸ்தவா போன்ற பெண்ணியத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர் (க.பஞ்சாங்கம் பெண்மொழி-புனைவு, ப. 71). எனவே பெண்மொழி உருவாக்கம் என்பது அவசியமாகிறது. ஆனால் பெண்மொழி உருவாக்கம் என்பது வக்கிரமானதாக இருக்கிறது என ஆண்கள் குற்றம் சாட்டுகின்றனர். சமூகக் கலாச்சாரம் சிதைந்து விடும் என அங்கலாய்க்கின்றனர். ஆண்களைப் பலவீனமாக்குகின்றது எனப் பயப்படுகின்றனர். இந்த நிலை இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் அதிகரித்தது. கலாச்சாரச் சீரழிவுக்குப் பெண் கவிஞர்கள் தங்கள் எழுத்தைப் பயன்படுத்துகின்றனர் எனக் குமுறுகின்றனர். ஆயினும் பெண்களுக்கான மொழி வேண்டும் என்று பெண்ணிய மொழியியல்வாதிகள் நம்புகின்றனர். இதில் ஜூலியா கிறிஸ்தவா மற்றும் ஹெலன் சிக்ஸிஸ் (Helene Cixous) ஆகியோர் முக்கியமானவர்கள்.

அப்படியானால் பெண்களுக்கான மொழியை எப்படி உருவாக்குவது? இந்த நோக்கில் ஹெலன் சிக்ஸிஸ்.

"இருப்பதை உடைக்காமல் - புதிய
சொல்லாடலை உருவாக்க வழியில்லை"

(க.பஞ்சாங்கம், பெண்-மொழி-புனைவு, ப. 71) என்று கூறுகின்றார்.

பெண்ணிய மொழியியல்வாதிகள் இப்படிக் கூறுவதற்குக் காரணம் ஆண்கள் ஆக்ரமிப்பாளர்களாக இருப்பதுதான்.

"எத்தனையோ விஷயங்கள் காலத்துக்கேற்ப மாறுகின்றன: ஆனால் பெண்களை அடக்கும் விஷயம் மட்டும் ஏனோ மாறவில்லை. இன்னும் ஆண்கள் அதை இழுத்துப் பிடித்து வைத்திருப்பதின் நோக்கம் என்ன?

- ஆண்களுக்கான சுயநலம்
- தமது சொகுசான வாழ்க்கை இதனால் பறிக்கப்பட்டு விடுமே என்ற பதற்றம்
- அந்தப் பதற்றத்தால் ஏற்பட்ட பயம்

அதாவது பெண்களின் வலிமையில் பயம்; பெண்களின் புத்திசாலித்தனத்தில் பயம். எங்கே பெண்கள் தங்களை விஞ்சிவிடுவார்களோ என்று பயம்.

> பெண்கள் மென்மையானவர்கள், பூப்போன்றவர்கள், வலிமையில்லாதவர்கள், புத்தியில்லாதவர்கள் என்றும், அவர்கள் அடங்கிப்போக வேண்டியவர்கள்தான் என்றும், இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் ஆண்களால் சொல்லிக் கொண்டிருக்க முடியும். அதைக் கேட்டுக் கொண்டு இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் பெண்களால் மனதுக்குள் குமுறிக்கொண்டு வெளியில் பதுமைபோல் நடிக்க முடியும் (றஞ்சி, ஊடறு, ப. 164)

என்று கேட்பதன் மூலம் பெண்கள் இனி என்ன செய்ய வேண்டும் என்பதில் கவனம் செலுத்துகின்றனர்.

பெண், தன் அடையாளத்தோடு வாழ முற்படுவதுகூட அவர்களின் மீது இடப்பட்ட தீப்புண்கள். அதனால் ஏற்பட்ட வடுக்கள் ஏற்படுத்திய தாக்கம் என்று சொல்லலாம். புரட்டியெடுத்து அடித்து நொறுக்கப்பட்ட வாழ்க்கை கற்றுத்தந்த பாடம்தான் பெண்மொழி உருவாக்கம் எனலாம். இவ்விடத்தில் அழகிய பெரிய நாயகி அம்மாள் குறிப்பிடும் கருத்தை நினைவு கூரலாம். 'கவலை' என்ற அவருடைய நூலுக்குப் பின்னுரை எழுதிய அவர் மகன் பொன்னீலன்,

> என் தந்தை பற்றிய செய்திகளைப் படித்தபோது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன். ஒவ்வொரு நபரைப் பற்றியும் இவ்வளவு நுட்பமாக எழுதிய என் அன்னை, என் தந்தையை மட்டும் ஏன் எப்படி இவ்வளவுக்கு இருட்டிப்புச் செய்தார் என்பது மட்டுமல்ல, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இழிவுபடுத்தியிருக்கிறார் என்பது எனக்குப் புரியவேயில்லை. அவரிடமே கேட்டேன், 'என் பார்வையில் அப்படித்தான்' என்றார் (கவலை, ப.426).

பொன்னீலனும் 'அது நியாயந்தான்' என்கிறார். அழகிய பெரிய நாயகி அம்மாள் தனக்கு உண்மையாக இருப்பதின் மூலம் எந்த முகமூடியும் அணியாமல் பெண்ணாகப் பெண்பார்வையில் தன் கணவனைப் பார்த்ததின் விளைவே அது.

உண்மைக்கு நிகரானது ஏதுமில்லை. அது தரும் துணிச்சலும் தனித்துவம் வாய்ந்ததுதான். 'பார்வையில் அப்படித்தான்' என்று கூறுவதின் குரலைச் சற்று அசை போட்டுப் பார்த்தால் அதன் பின் மறைந்துள்ள அவரின் அனுபவங்கள், ஆண் ஆதிக்கம் அவருக்குத் தந்த கோபங்கள், நிராசைகள் அனைத்தும் துணிச்சலுடனும் தெளிவுடனும் வெளிப்படுவதை உணர முடியும். இந்த இயல்பான தணிக்கையற்ற மொழிதான் பெண்மொழியாகிறது. ஆணினால் ஏற்பட்ட காயம், ரணம் எல்லாம் பெண்ணைத் தவிக்கச் செய்து, அதிலிருந்து வெளிவரத் துடிக்கச் செய்கிறது. இதற்கு எழுத்தை ஆயுதமாக மாற்றுகின்றனர் பெண்கள். கவிதை இதற்குச் சிறந்த ஊடகமாக அமைகிறது.

> அமுக்கப்பட்ட பெண்ணும் தனக்கான மொழியை உருவாக்கிக் கொள்ள கவிதை வடிவே சிறந்த சாதனம் என கோரா கப்லான் (Cora Kaplan) பெண்ணுக்கான மொழியை உருவாக்க வழி கூறுகிறார். மேலும் கவிதைதான் காரணகாரியம், பகுத்தறிவு தர்க்கம் என்கிற முறையில் பெண்ணை மடக்கிப்போடும் ஆணாதிக்க மொழியைத் தகர்த்துக்கொண்டு எல்லை மீறிய அப்பாலுக்கு அப்பால் அழைத்துச் செல்லும் படைப்பாக்கத்தின் உச்சகட்ட சுவையை எட்டிநிற்கும். எனவே 'கலகம் செய்ய நினைக்கிற பெண் எழுத்தாளர்களுக்குக் கவிதை சிறந்த வடிவம்' என்று பல பெண்ணியலார் இக்கருத்தை முன் வைக்கின்றனர் (பெண்-மொழி-புனைவு, ப. 73).

ஏனென்றால் கலகக்குரல் அதிகாரத்தை மையமிட்டது. அதிகாரம் பாலிய உறவின் மூலம் செயல்படுகிறது என்கிறார் பின்நவீனத்துவ

வாதியான ஃபூக்கோ. இவர், அதிகாரம் உடல் சார்ந்தும் அது அடக்குமுறையை உற்பத்தி செய்தவாறும் இருக்கும் எனக் கருதுகிறார். இதனை எதிர்கொள்ள, பெண் அதிகாரத்தைத் தன் கையில் எடுக்க வேண்டும் எனக் கருதுகிறார். இவ்விடத்தில் பின் நவீனத்துவவாதியான ஃபூக்கோ "அதிகாரம் பாலியல் உறவின் மூலம் செயல்படுத்தப்படுகின்றது" என்கிறார். அதிகாரம் உடல் சார்ந்தது. இது அடக்கு முறையை உற்பத்தி செய்கிறது. சாதி, வர்க்க, இன, மத, அரசியல் ஆகியவற்றில் வியாபித்து அவற்றின் மூலம் மனித அறிவையும் கட்டமைக்கிறது. ஃபூக்கோவின் 'அதிகாரம்' மற்றும் அறிவு (Power and Knowledge) பெண்ணின் உடலையும் மனத்தையும் ஆளும், ஆண்களின் அதிகாரத்தை உடைத்து வெளிவர உதவுகின்றது (மல்லிகா, ப. 73).

இந்த அதிகாரம் - பாலியல் உறவில், சட்டமாக / சட்டமற்ற மற்றும் அனுமதிக்கத்தக்கதாக / எதிர்க்கத்தக்கதாக அதிகாரம் இயக்கப்படுகிறது. குறிப்பாக, அதிகாரம் குடும்பம், பாலியல், பொருளாதாரம் ஆகியவற்றில் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்துகிறது. இதைத் தெளிவாக அறிய ஃபூக்கோவின் கருத்துகள் உதவுகின்றன.

- அதிகாரம் என்பது சாதாரணமானதன்று; தேவையானது; பரவலானது; எல்லா உறவுகளிலும் தொடர்புடையது.
- பொருளாதாரம், பாலியல் மற்றும் அறிவு ஆகிய நிலைகளில் தொடர்புடையது
- அதிகாரம் பலநேரங்களில் மனிதர்களைத் தடைசெய்கிறது. அமுக்கத்தைக் (repression) கண்காணிக்கிறது. உற்பத்தியும் செய்கிறது.
- இது உள்ளார்ந்து வெளிப்படுவது; ஆனால் தன்னிலை சார்ந்ததன்று.
- எந்த விதமான கொள்கையோ நோக்கமோ இல்லாமல் கூட இது செயல்படுத்தப்படும்.

அதனால் அதிகாரம் பெண்ணினுடையதாக மாற வேண்டும். அப்பொழுது சமூகத்தின் மைய நீரோட்டத்திலிருந்து ஓரங்கட்டப்படும் பெண்குரல் உயர்ந்து ஒலிக்கும். தணிக்கையைக் கடந்து பெண் எழுத்துக்கள் வீரியம் பெறும். இதற்கு மொழியின் பயன்பாடு அவசியம். ஏனென்றால் மொழி செய்திப்பரிமாற்றத்திற்குரிய ஊடகமாகும். இந்த ஊடகம் இதுநாள்வரையில் ஆண்களுடையதாக இருந்துவந்துள்ளது. இது பெண்ணிற்கும் சாத்தியமாகி இருக்கிறது. இந்த நூற்றாண்டில் இதனால், சகல ஜீவராசிகளுக்கும் உயிர்தரும் வானத்துச் சூரியனில் பாதி

நிரந்தர இருளில் இருக்க முடியுமா? மானிட குலத்தின் சரிபாதியான பெண்களும் அடிமைத்தன இருளில் என்றென்றும் காணாமல் போகமுடியுமா? இல்லை; கரையத்தான் முடியுமா? இல்லை என்பதையும் பெண்கள் பற்றிய உண்மை வரலாறு நிரூபிக்கிறது.

'வலிமையுள்ளதே வாழும்' என்ற கோட்பாடு ஆணாதிக்க சமூகத்தில் நவீன அறிவியல் மூலமாகவும் மீண்டும் மீண்டும் உறுதி செய்யப்படுகிறது என்பதைப் பெண்ணியவாதிகள் வெளிப் படுத்தியுள்ளனர். உண்மை என்ற கருத்தாக்கங்களை உருவாக்கும் சக்தி யாருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்பதைப் பொறுத்தே அமைகிறது என்பதைப் புரிந்து அவை அனைத்தையும் வினாவிற்கு உட்படுத்திவருகின்றனர்.

> ஆணின் உடல் ஒரு குறியீடுபோல் செயல்படுகிறது. அவ்வுடலின் சினம், ஆதிக்கம், அந்தஸ்து போன்றவற்றை அறியும் குழந்தை அதன் பெருமதிப்பைப் புரிந்து கொள்கிறது. கலாச்சாரங்கள் வேறானாலும் குழந்தை மனம் உடலை வைத்தே நபரை மதிப்பிடுகிறது. எப்போதும் ஆணுடல் வீட்டிற்கு வெளியே இருக்கிறது. கொடிய ஆபத்தான செயல்களில் ஈடுபடுகிறது. பெண்ணுடல் வீட்டிற்கு உள்ளேயிருக்கிறது. வீட்டினரின் வளர்ச்சி, பாதுகாப்பு போன்றவற்றைக் கவனிக்கிறது. இவ்வாறு குழந்தைகள் உடலை வைத்து ஏற்படுத்தும் எண்ணமே வளர்ந்து சமூகங்களையும் நாகரிகங்களையும் தீர்மானித்துள்ளது. (Women; Psychologist puzzle) செல்வி திருச்சந்திரன், மொழியும் ஆண்வழிச் சமூக அமைப்பும், ஊடறு, 2002/05, ப. 70).

சமூகங்களையும் நாகரிகங்களையும் தீர்மானித்த ஆணின் உடலான குறியீடு மொழியையும் கூடத் தீர்மானித்தது என்பது பெறப்படும். குறியீட்டின் அர்த்தம் என்பது ஏனைய குறியீடுகளுடனும் கட்டுமான அமைப்புகளின் வேறுபாடுகளுடனும் அவற்றின் இயக்கங்களுடனும் தொடர்புடையது. ஒரு வஸ்துவிற்குத் தனிப்பொருள் இல்லை. அதன் அர்த்தம் வேறு ஒன்றுடன் தொடர்புற்றே உண்டாக்கப்படுகிறது. இவ்விளக்கம் கலாச்சார அர்த்தங்கள் எப்படி மாறுகின்றன, இயக்கங்கள் மாறுபட, இருப்புகள் மாறுபட, கட்டுமான அமைப்புகள் வேறுபட மொழியின் அர்த்தங்களும் மாறுபடும் என்பதை விளக்குகிறது.

சமூக இயக்கங்களே முக்கியமன்றி உளவியல் தொடக்கங்கள் அல்ல என்பதை நாம் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

> ஆண்பாலும் பெண்பாலும் உடல் அமைப்பை மையமாகக் கொண்டிருந்தாலும் அவற்றிற்கு வரையறுக்கப்பட்ட குணாதிசயங்கள் சமூகப் பார்வையினாலேயே தோற்றம் பெற்றன. சமூக நியதிகளையும் கருத்தியலையும் உள்ளடக்கியே மொழியின் இயக்கம் வெளிப்படும். இந்த ரீதியில் மொழி முதலில் உருவாகவில்லை. சமூக உருவாக்கத்தின் பின்தான் மொழி உருவாகியது. ஆண், பெண் சமூக அசமத்துவ நிலையின் பிரதிபலிப்பாக வெளிவந்த மொழி வழக்குகள். ஆண், பெண் அசமத்துவத்தை வெளிப்படுத்தியே தீரும் (ஊடறு, ப71).

இன்றைய சமூகம் என்பது ஆணாதிக்கச் சமூகமே என்பது வெளிப்படை. இவ்வகையில் இந்த ஆணாதிக்கச் சமூகத்தினுடைய யதார்த்த நிலை, நடைமுறை ஆகியன மொழியில் செல்வாக்கு செலுத்துகின்றன. சொற்கள், சொற்றொடர்கள் ஆகியவற்றைக் கூட இதன் வழியே உற்பத்தி செய்கின்றன. இச்சொற்களும் சொற்றொடர்களும் அடங்கிய மொழியானது பால் வேறுபாட்டை வெளிப்படுத்துவதாகவும் அதனை நிலைநிறுத்தும் சாதனமாகவும் அமைகிறது.

இது மாத்திரமன்றி, மொழியின் இலக்கணங்கள் சமூகத்தில் அதிகாரம் பெற்றிருந்த ஆண்களாலேயே உருவாக்கப்பட்டிருந்தன. மொழி பற்றிய சிந்தனையின் பேரகராதிகள், சொற்களஞ்சியங்கள் யாவும் அதிகாரம் பெற்றிருந்தோராலேயே நிலைநிறுத்தப்பட்டுள்ளன. அவர்களுடைய பார்வையும் நோக்கும் கிரகிப்பும் புரிதலுமே மொழியில் இடம்பெற்றன.

இந்த ஆணாதிக்க மொழிப்பரப்பில் பெண்கள் குறுக்கீடு செய்து தமக்கான (கவிதை) மொழியாகத் தம்மை வெளிப்படுத்தும் மொழியாக ஆக்கிச் செயல்படுவது அவ்வளவு எளிதான காரியமன்று. அந்தச் செயல்பாட்டின் ஆரம்பக் காலத்தில் ஆண் எழுத்தாளர், பெண் எழுத்தாளர் என்று பாகுபடுத்திப் பார்ப்பது சரியல்ல என்று சிலர் தம் கருத்தை முன்வைத்தாலும் இன்று இலக்கியத்தில் மட்டுமின்றிப் பல்வேறு துறைகளிலும் ஆண், பெண் என்ற பாகுபாட்டு அடிப்படையில் பார்க்கின்ற பார்வை நிலைபெற்றுள்ளது. காரணம் பெண்ணிய இயக்கங்களின் வளர்ச்சியினால் ஆண், பெண், ஆண்மை, பெண்மை, தந்தை, தாய், கணவன், மனைவி முதலிய சொற்கள் இன்று அரசியல் சொற்களாக வெளிக்கொணரப்பட்டுள்ளன. இன்று பெண்ணிய நோக்குத் திறனாய்வும் (Gynocriticism) கூட முக்கியமான இடம் பெற்றுள்ளது. ஆணின் மொழி, பெண்ணின் மொழி எனப்

பிரித்துப் பார்க்கும் பார்வை வெளிப்பட்டுள்ளது. இப்பார்வையின் பொருள் மொழிக்குள் யாருடைய அதிகாரம் செயல்படுகிறது என்பதை உடைத்துப் பார்ப்பதுதான். டேல் ஸ்பெண்டர்தான் (Dale Spender) முதல்முதலில் 'ஆணால் உருவாக்கப்பட்ட மொழி' என்ற தன் எழுத்து மூலம் ஆணாதிக்கம் மிக்க மொழியினால் பெண் எவ்வாறு அமுக்கி வைக்கப்படுகிறாள் என்று விளக்கினார்.

படைப்பை விட அதைப் பற்றிய திறனாய்வுதான் ஆற்றல் மிக்கது. உண்மையில் படைப்பு ஊமையாகக் கிடக்கிறது. அதற்கு ஆயிரம் வாய்களை வழங்குபவர்கள் திறனாய்வாளர்கள்தாம் என்பார் நார்த்தராாப் ஃப்ரை. எனவேதான் இந்தத் திறனாய்வுத் தளத்திலும் தங்களுக்கான தளத்தை உருவாக்குவதன் முக்கியத்துவத்தையும் தேவையையும் உணர்ந்த பெண்ணியவாதிகள் பெண்கள் எழுத்தைப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து பெண்நிலைத் திறனாய்வை உருவாக்கியுள்ளனர்.

> ஆண்களே தங்களுடைய சொந்தக் கதையைப் பொதுவான மனிதர்களின் கதையாகச் சொல்லியதின் மூலம் எங்களுடைய ஒவ்வொரு நற்கூறுகளையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். மிக உயர்ந்த அளவில் கல்வியையும் கூடவே பேனாவையும் தங்கள் கையில் வைத்துக் கொண்டனர். எனவே எந்த ஒரு கருத்தையும் நிரூபிப்பதற்கு எந்த ஒரு புத்தகத்தையும் நான் அனுமதிக்கப் போவதில்லை. (ஜான் ஆஸ்டினின், பஞ்சு, பெண்ணெனும் படைப்பு.)

இந்தக் கருத்து பெண்ணியத் திறனாய்வின் தேவையை மேலும் எடுத்துரைக்கிறது.

ஆண்வழிச் சமுதாயம், அதில் தொக்கியிருக்கும் மதிப்பீடுகள் அனைத்தும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் எனலாம். பெண்ணின் உடலும் அதைச் சார்ந்த தேர்வுகளும் பெண்ணின் வசம் இல்லாமல் இருப்பது மேலும் கொடுமை. இச்சையிலிருந்து தாய்மை வரை பெண்ணின் உடல் அவள் ஆளுமையில் இல்லாதிருப்பது, அவள் உடலை மற்றவர்கள் அவரவர் விருப்பத்திற்கேற்ப விளக்கிக்கொள்ள அனுமதி அளிக்கிறது.

பெண்கள் சிலரைப் பேட்டி கண்ட அனுபவங்களை அம்பை கீழ்வருமாறு விளக்குகிறார். அவர்களைப் பேட்டி கண்டபோது அவர்கள் கூறிய சில விஷயங்கள் அவரைச் "சிந்திக்க வைத்ததாகவும் கூறுகிறார். அவை: "

நிறம், வடிவம் போன்ற விஷயங்கள். ஆண்களை விவரிக்கும் போது அவர்களுக்கான உவமானங்கள் தேக்குமரம், உலக்கை, பாறாங்கல் போன்றவையாக இருந்தன. ஆண்கள் எழுத்தில் அதே சமயம் பெண்கள் கொடிகள், மருளும் மான், பூக்கள், பழங்கள் என்று சித்திரிக்கப்பட்டனர். வேர்கள் ஆழப் புதைந்தும் கனத்துடன் கூடியும் உள்ள பொருட்கள் ஆண்களைக் குறித்தன. எடையில்லாமல், மற்றவற்றைச் சார்ந்து, மற்றவர்களுக்குக் களிப்பையும் சுகத்தையும் தரும் பொருட்கள் பெண்களுக்கு உவமைகள் ஆயின. பெண்களும் தங்களை இப்படியே விளக்கப்படுத்திக் கொண்டார்கள். இது அவர்களின் சமுதாய சார்பையே (சார்பு நிலையையே) காட்டியது. அந்தச் சார்பு நிலையை ஒட்டியே மொழியும் அமைந்தது.

மேலும் அவர் கூறியதில் வேறு சில உவமானங்களும் சுவையாக இருந்தன. ஒரு பெண் எழுதும் போது 'மனம் போல் பால் பொங்கியது' அல்லது 'உலைநீர் போல் கொதித்தது' என்று இயல்பாக உவமைகள் வந்தன. கடல்போல் அவள் மனம் ஆர்ப்பரித்தது அல்லது அருவிபோல் பொங்கியது போன்ற உவமைகள் பெண்கள் எழுத்தில் அதிகம் காணப்படவில்லை. பல ஆண்கள் பெண்களைச் சுவைக்கும் ஒன்றாகப் பார்த்தனர். உதடுகள் கோவைக்கனி, கண்கள் திராட்சைப்பழம், முலைகள் மாம்பழம், என்று எல்லாம் ஒரே சாப்பாட்டு சமாச்சாரம் தான். பெண்கள் எழுத்தில் ஆண்களைச் சாப்பிடும் வகையில் எதுவும் இல்லை. அவர்களுக்கு விருந்து படைக்கும் வைபவந்தான்!"

மொழி ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு என்றால் ஆணாதிக்கத்தின் எத்தகைய கூறுகளை மொழி வெளிப்படுத்துகிறது?

> குணாதிசயங்கள், நடத்தை, நடை, உடை, பாவனை போன்றவை பெண்களுக்கென்றே வகுக்கப்பட்டுள்ளன. இவை மானிடர்க்கென்று பொதுப்பண்பாக இருந்தாலும் பெண்களுக்குரியன என வகுக்கப்பட்டிருப்பதை மொழி மூலம் வெளிக் கொண்டு வருவர்.
>
> மெல்லியலாள், பேதை, மடவோள் என்பன பெண்ணின் உடல்ரீதியான இயலாமையையும் மனரீதியான திண்மையற்ற நிலையையும் வெளிப்படுத்துகிறது. பெண்களை உயிரற்றப் பண்டங்களுடன் இணைத்த இலக்கியக் கர்த்தாக்கள் ஆயிழை, சேயிழை, பொற்கொடி என்று அணிகலன்களுடன் சேர்க்கும் போது அதனால் வெளிப்படும் கருத்தியல் அவளைப் பண்டமாகவே நினைக்கத் தூண்டும்.

சுமங்கலி, வாழாவெட்டி, அறுதலி, விதவை, கைம்பெண் வாழ்விழந்தவள், ஆளிற் பெண்டிர் என்ற சொற்களும் அவள் ஆணுடன் இணைந்த தன்மையையும் அத்தொடர்பு அறுந்த தன்மையையும் சுட்டிக்காட்டுகின்றன. அத்தன்மைகள் மங்கலமாகவும் மேன்மை கொண்டவையாயும் சிறுமையற்றதாகவும் கருதப்படும்போது பெண்ணின் கல்வி, கேள்வி ஞானம், திறன் போன்றவை அர்த்தமற்றதாகி விட, ஆணுடன் இணைந்த/இணையாத தன்மைகளே அவளது பெரும் பொருட்டாக ஆகிவிடுகிறது. சமூகத்தில் ஆணின் இடம், அவன் அதிகாரம், ஆதிக்கம் அனைத்தையும் இவை தெளிவாகக் காட்டுகின்றன (திருச்சந்திரன், ஊடறு, ப. 72).

பொதுவாக அதிகாரம் எல்லாவற்றையும் ஓர் ஒழுங்கிற்குக் கொண்டு வருவதின்மூலம் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும். இலக்கியத்தில் இத்தகைய அதிகாரத்தை நிலைநிறுத்த விரும்பிய ஆண் தனக்கான கோட்பாடுகளைத் தனக்கேற்ப வகுத்துக் கொண்டான். இதையே 'ஆணின் தனம்' என பிரெஞ்சுப் பெண்ணியலாரான ஹெலன் சிக்ஸிஸ் பெண் எழுத்துகளுக்குக் கோட்பாடு காணக்கூடாது என்கிறார்.

ஆண்கள் வகுத்த கோட்பாடுகளையே பெண்களும் தங்களுடையதாக ஏற்றுக்கொண்டனர். ஏற்றுக் கொள்ளும்படி மூளைச்சலவை செய்யப்பட்டனர். படைப்பாளர் மட்டுமன்றிப் பெண்திறனாய்வாளர்களும் ஆண் பார்வையிலேயே பார்த்தனர். இந்தப் பார்வைப் பழக்கம் வேரோடியுள்ளது. ஆண்வாசக மனம்தான் பெண்ணுக்குள்ளும் செயல்படுகிறது. அதனால் அந்த மறுபரிசீலனைக்கு உட்படுத்தி அதிலிருந்து வெளிவருவது என்பது பெரும் பிரச்சனையாகவே இருக்கும். ஆனால் அது கட்டாயத் தேவையாகிறது.

ஆண்களின் திறனாய்வுக் கொள்கைகளால் மதிப்பிழக்குமாறு செய்யப்பட்டுள்ள பெண் எழுத்துகளைக் கண்டறிந்து மீட்டெடுப்பதில் கவனம் கொள்கிறது. இந்த வகைத் திறனாய்வு 'கைனோ கிரிட்டிசிசம்' (gyno criticism) எனப்படுகிறது. இத்தகைய திறனாய்வு இல்லாததால், பெண்களின் பெரும்பாலான படைப்புகள் அங்கீகாரம் பெறாமல் மதிப்பை இழந்து இலக்கிய வரலாற்றில்கூட அவர்களின் பெயர் இடம்பெறாமல் போயிற்று.

ஆரம்பகாலப் பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் யாவும் பதிவு பெறாமல் போனதற்கான காரணங்களில் மிக முக்கியமானது ஆண்களின் இலக்கிய அளவுகோல்கள்தாம். பதிவு செய்யப்பட்ட எழுத்துகளும் போகிறபோக்கில் ஒட்டுமொத்தமாகப் பெண்

எழுத்தாளர் தம் படைப்புகள் என்பதில் அடக்கிவிடும் நிலையே இருந்தது.

இந்தச் சமத்துவமற்ற நிலையை எவ்வாறு போக்குவது? ஹெலன் சிக்ஸீஸ், 'பெண் தன் உடம்பை எழுத வேண்டும் என வலியுறுத்துகிறார். அவளுக்கே உரிய பொருட்களையும் அவளுக்கே உரிய உறுப்புகளையும் ஆழமாகப் புதையுண்டு அடையாளம் இழக்காமல் கிடக்கும் அவளது உடம்பு சார்ந்த மிகப்பெரிய ஆட்சிப் பரப்பையும் மீண்டும் அதிவலுவோடு திரும்பப் பெற்று எந்த விதமாகவும் தன்னைத் தணிக்கை செய்து கொள்வதைத் தவிர்த்து அப்படியே பொங்கி வழிய வேண்டும்' என்கிறார்.

உண்மையாகப் பெண்ணியம் சொல்லுகிற பெண்ணுரிமை என்னவென்றால் ஒரு பெண் 'பெண்' என்கிற விதத்தில் அவள் மேல் திணிக்கப்பட்டிருக்கும் அடக்குமுறை வடிவங்கள் அனைத்தையும் இனம் கண்டுகொண்டு அதற்கு எதிராகக் குரல் எழுப்பி அவள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதே. இதனை நடைமுறைப்படுத்த பெண்மொழி இன்னும் விரிந்த தளத்தில் இயக்கப்பட வேண்டும்.

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து வரும் தமிழ்க் கவிதை வரலாற்றில் நமக்குக் கிடைக்கும் இலக்கியங்களில் பழமையானது சங்க இலக்கியங்களே. அக்காலக் கட்டத்தில் 30க்கும் மேல் பெண் கவிஞர்கள் இடம் பெற்றிருந்தார்கள். அவர்கள் பங்கும் குறிப்பிடத் தகுந்ததாய் இருந்தது என்பது நிறைவைத் தரும் ஓர் அம்சம்.

சங்ககாலம் என்றதும் உடனடியாக மனதில் வந்து நிற்பவள் ஔவைதான். எத்தனை ஔவை இருந்தனர் என்பது நம் வினாவாக இப்போதைக்கு எழ வேண்டாம். அவள் தொடர்ந்து ஒரு குறியீடாக இருந்து வருகிறாள் என்பதைக் குறித்துக் கொள்ளலாம். பெண் கவிஞராய் சுதந்திரக் காற்றைச் சுவாசித்த அவள் பெருமையை இங்கு விரித்துரைக்கத் தேவையில்லை. ஆயினும் பாரதி அவளைப் பற்றிக் கூறியதை நினைவு கூர்தல் இங்குப் பொருத்தமாக இருக்கும்.

ஔவையின் எழுத்துகளை மதிப்பிடும் பாரதியார் "ஔவையாரைப் போல கவிதையும் சாஸ்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண்மகன் இங்கு பிறந்திருக்கானா? ஏன் பிறக்கவில்லை? இதனின்றும் ஆண் மக்கள் இயற்கையிலேயே பெண்களைக் காட்டிலும் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிறதன்றோ?" (பாரதியார் கட்டுரைகள், ப. 301).

மேலும் ஔவையின் எளிய தமிழ் நடையையும் பாராட்டி வியக்கிறார். எல்லோருக்கும் புரியும் தெளிந்த நடை என்கிறார்.

அத்துடன் அமையாது, 'சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்' என்பது கவிதைத் தொழிலில் மிக உயர்ந்த தொழில். இதில் ஔவை ஒப்பற்றவள் என்கிறார் (மே.நூ. ப. 30).

சங்ககாலத்துக்குப் பின் குறிப்பிடும்படி பெண் கவிஞர்கள் யாரும் இடம் பெறவில்லை. நீண்ட இடைவெளிக்குப் பின் பக்தி இயக்கக் காலத்தில் காரைக்கால் அம்மையாரும் ஆண்டாளும் தமிழ்க் கவிதை வரலாற்றில் மிக முக்கியமான கவிஞர்கள் எனக் குறிப்பிடும் தகுதிபெற்றவர்கள். அவர்கள் மூவருமே தமிழ்க் கவிதை மரபின் தொடர்ச்சி என்று கூறலாம். காரைக்கால் அம்மையார் சைவ சமயத்தையும் ஆண்டாள் வைணவ சமயத்தையும் சார்ந்து நின்றவர்கள். அவர்கள் கவிதைகள் யாவும் பக்தி சார்ந்த அனுபவ வெளிப்பாடுகளாக அமைந்தன.

தொல்காப்பியர் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் பெண்ணுக்கான மரபுத்தளைகளைத் தாண்டிப் பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்த பாரதி தொடங்கிய நவீன கவிதை மரபில் கூடப் பெண் கவிஞர்கள் இடம் பெறவில்லை.

இங்கு ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். கவிதையுலகில் பெண்கள் அடியெடுத்து வைக்கவில்லை என்பது உண்மைதான் என்றாலும் நாவல், சிறுகதைகளில் அவர்கள் பங்கு குறிப்பிடும்படியாக இருந்தது என்பதை மறுக்க இயலாது. ஆனால் ஆண்கள் பார்வையிலேயே அவர்கள் பார்வையும் இருந்தது. பெண்களுக்கான ஆணாதிக்கக் கற்பிதங்களைத் தலைமுறை தலைமுறையாக நினைவிலி மனதில் பதித்து போயிருந்ததாலும் தாங்களும் ஆண்களைப் போன்றே சகலவிதத்திலும் சரிசமமானவர்கள் என்பதை உணரும் அறிதிறன் இல்லாததாலும் அவர்கள் பார்வையே பெண்களின் பார்வையாயிற்று. அந்தப் பார்வையிலேயே தங்கள் எழுத்தையும் பதித்துவைத்தனர்.

கவிதையில் குறிப்பிடத் தகுந்தவராக இருப்பவர் எழுபதுகளில் எழுதிய இரா. மீனாட்சியாவர். வேறு சிலரும் அக்காலத்தில் எழுதினார்கள்.

எண்பதுக்ளில்தான் பெண் கவிஞர்கள் பலர் எழுத முன்வந்தனர். ஈழத்துப் பெண் கவிஞர்களின் தாக்கமும் தூண்டுகோலாய் அமைந்தது. ஈழத்தில் ஏற்பட்ட தீவிரமான அரசியல் நெருக்கடிகளும் தமிழ்த் தேசிய இயக்கத்தின் எழுச்சியும் ஈழத்து இளைய தலைமுறையினர் இடையே பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின. பெண்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுத் தீவிரமாகச் செயல்பட்டன. தங்கள் நிலத்தின் விடுதலைக்காகவும் தங்களின் விடுதலைக்காகவும்

பெண் கவிஞர்கள் பலரும் வீரியமிக்க கவிதைகளை எழுதலாயினர். அவர்களின் கவிதைகள் புதிய பரிமாணத்தைக் கண்டன.

> தமிழகத்திலும் ஈழத்துப் பெண் கவிஞர்களின் பாதிப்பு கவிதைப் போக்கில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. வெளிப்படையாக இதனையாரும் இங்கு பதிவு செய்யவில்லை என்ற போதிலும் யதார்த்தம் அதுதான். 'மரணத்துள் வாழ்வோம்', 'சொல்லாத சேதிகள்' ஆகிய கவிதை தொகுப்புகளிலுள்ள பெண் கவிஞர்களின் கவிதைகளின் பாதிப்புக்குள்ளாகி, அவற்றின் உந்துதலால் தமிழகத்திலும் பெண்ணியப் பார்வையை வெளிப்படுத்தும் கவிதைகள் எழுதப்படலாயின (ராஜமார்த்தாண்டன், காலச்சுவடு, இதழ், 47, ப.32).

பெண்கள் உணர்ச்சி பூர்வமானவர்கள்; ஆயினும் கவிதை ஏன் அவர்களுக்கு வசப்படவில்லை? அவர்கள் அறிவில், கற்பனைத்திறனில் எந்தக் குறையுமில்லை. ஆனால் அனுபவக் குறைவுதான் மூலகாரணம் என நினைக்கத் தோன்றுகிறது.

இப்போது எழுதிவரும் கவிஞர்கள் பலரும் மறுக்கப்பட்டதும் விலக்கப்பட்டதுமான பலவற்றைப் பற்றி எழுதுகிறார்கள். அவர்கள் எழுத்துத் தீவிரமாக உள்ளது. அதனால் அவர்களுக்கு எதிரான விமர்சனங்களும் தீவிரமாக உள்ளன.

பெண்கள் வெளிப்படையாகத் தங்கள் உடல்பற்றியும் உடல்சார்ந்த உணர்வுகள் பற்றியும் தயக்கமின்றி எழுத ஆரம்பித்துள்ளனர். ஆனால் ஆணாதிக்க மனோபாவம் அவர்களை ஒழுக்கமற்றவர்கள் என்றும், அவர்கள் எழுத்து ஆபாசமானது என்றும் கூக்குரலிடச் செய்கிறது. பண்பாடு சீரழிந்து விடுமென்று இரைச்சல் போடுகிறது. கலாச்சாரம் கெட்டுவிடுமென வசை பாடுகிறது. மேலும் அவர்கள் பெண் கவிஞர்களை வார்த்தைகளால் ரணமாக்கிக் காயப்படுத்துகிறார்கள். நபீதா சென் கூறுவது போல, பெண்கள் தங்கள் உணர்வுகளை எழுதும்போது, அவை ஆண்களின் உணர்வுகளில் கலக்கத்தையும் நோயையும் ஏற்படுத்துகிறது. அதனால் பெண்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படலாம்; ஆனால் அவர்கள் தங்களைப் பிரதிநிதித்துவம் செய்வது தடைசெய்யப்படுகிறது" என்ற உணர்வை வெல்ல முடியவில்லை. அதனால் எல்லாவற்றையும் எழுத முற்படும் பெண் எழுத்தாளர்கள் கவிஞர்கள் அபாயகரமானவர்களாக ஆகிறார்கள். ஏனென்றால் அவர்கள் சமூகத்தில் ஆழமாக வேரூன்றிய ஓர் அமைப்பை, அதன் பல்வேறு வடிவங்களைப் பற்றிக்

கேள்விக்குட்படுத்துவதாகும். அவள் எழுதுகிற விஷயம் கூட முக்கியமில்லை. அவள் எப்படி எழுதுகிறாள் என்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

பல பெண்கள் இன்னமும் சமுதாயத்தை, குடும்பத்தைக் கண்டு பயப்படுபவர்களாக இருப்பதுதான் அவர்கள் எழுதாதற்கான காரணம். எதையாவது சொன்னால், எழுதினால் பாதுகாப்புப் போய்விடும் என்று கலங்குவதால், அடிப்படையில் பெண்கள் இன்றும் கோழைகளாகவே இருக்கிறார்கள். நிஜத்தைத் தைரியமாய் எடுத்துச்சொல்லப் பயப்படுகிறார்கள். பெண்கள் தன்னம்பிக்கையும் துணிச்சலும் நிறைந்தவர்களாக மாறினால்தான், தங்கள் பிரச்சனைகள் குறித்து வெளிப்படையாகப் பேசமுன் வருவார்கள். அதுவரையில் இதற்கு விமோசனம் இல்லை என்ற சுகதகுமாரியின் கருத்தை நினைவு கூரலாம்.

ஒரு பெண் செக்ஸ் பற்றி எழுதினால் உடனே அவள் தன் சொந்த அனுபவத்தை வைத்துதான் எழுதுகிறாள் என்று நினைக்கும் மனோபாவம் பலரிடம் உள்ளது. இந்த நிலையால்தான் அவர்கள் வெளிப்படையாக எழுதத் தடையாகிறது என்கிறார் மலையாள எழுத்தாளர் ஒருவர்.

பெண்களின் எழுத்து கருக்கொள்வதிலிருந்து உருக் கொள்வதுவரை மனதளவிலும் குடும்பக் கட்டமைப்பிலும் ஏகப்பட்ட தடைகளையும் சிக்கல்களையும் சந்தித்து வெளிப்பட்டாக வேண்டிய நிர்ப்பந்தம். அதையும் மீறி எழுதவரும் போது குடும்பம் இழுத்துப் போட்டுக் கொண்டு அசதியை மிச்சமாய்க் கொடுக்கிற போது அவளுக்கான கவிதை கூட அங்குக் கனவாகிப் போகிறது.

கமலாதாசின் கவிதையொன்றை இங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

**உன்னை நான் காணும் வரை**
**கவிதை எழுதினேன், ஓவியம் தீட்டினேன்**
**தோழிகளுடன்**
**உலவிவந்தேன்**
**இப்போது, நான் உன்னைக் காதலிக்கிறேன்**
**என்வாழ்க்கை ஒரு நாயைப்போல்**
**ஒடுங்கிச் சுருண்டு கிடக்கிறது**
**உன்னில் மனநிறைவைக் கண்டு**

காதலிக்கும் காலத்திலேயே பெண்ணின் திறன்கள் உள்ளடங்கிப் போகும் சூழல் என்றால் குடும்பத்திற்குள் சகலவித

கடமைகளையும் செய்யவேண்டிய பெண்ணுக்குத் தன் திறனை வெளிப்படுத்த ஏது நேரம்?

பொதுவாகப் பெண்களுக்கு எழுதவே நேரம் இல்லாத போது சுதந்திரமாக எழுதுவது எப்படி? எழுதும் பெண்களுக்குத்தான் எத்தனையெத்தனை எதிர்ப்புகள்! இன்று மட்டும், இங்கு மட்டும் இந்நிலையில்லை. எப்போதுமே எங்குமே இந்நிலைதான்.

சான்றாக ஒன்றிரண்டைப் பார்க்கலாம்.

முத்துப்பழனி எழுதிய 'ராதிகா சந்த்வானாம்' என்ற காப்பியத்தின் மீது எழுந்த சர்ச்சைகளும் வழக்குகளும் பற்றி சிலராவது அறிந்திருப்பர். எல்லாவற்றையும் மீறி அது அச்சேறியது. ஆனால் ஒரு பெண்ணின் விரகதாபத்தையும் புணர்ச்சியின்பத்தையும் பற்றிப் பேசுவதால் அது ஆபாசமானது; கீழ்த்தரமானது என்று கூறி அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் அதைத் தடை செய்தது. ஆனால் பெங்களூர் நாகரத்தினம்மாள் தொடர்ந்து வழக்காடிப் போராடியதால் இறுதியில் தடை நீங்கியது 1910ல். 1911, 1952ல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது அந்நூல்.

புத்தகத்தின் படிப்பு உரிமையை நிலைநாட்டிய எண்டமூரி சத்ய நாராயணராவ் தனது தீர்ப்பில், "இந்தக் காப்பியம் சிறப்பாக உருவாக்கப்பட்ட நவரசங்களும் முழுமையாக நிறைந்த கவிதைகளைக் கொண்டது. பெண்களைப் பற்றிய நமது இன்றைய பார்வையைக் கொண்டு பார்ப்போமேயானால் அவை தரக்குறைவாகவும் நலமற்றதாகவும் தோன்றலாம். அது நம் கலாச்சாரத்தின் போதாமைதானே ஒழிய காப்பியத்துடையதோ கவிஞருடையதோ அல்ல" என்று கூறினார்.

ஆயினும் முத்துப்பழனி எழுதிய முன்னுரையைப் புத்தகத்திலிருந்து நீக்கிப் பதிப்பித்தார் வெங்கடராசு. முன்னுரையில் தனது பாட்டி, சித்தி ஆகியோர் வழியில் தான் கவிஞரானதும் அரசவையில் தனது செல்வாக்கையும் கர்வத்தோடு வெளியிட்டிருக்கிறார் முத்துப்பழனி

**என்னைப் போன்ற பெண்களில் வேறு யார்**
**கல்வியாளர்களைப் பரிசும் பணமும் தந்து**
**கௌரவித்துள்ளனர்?**
**என்னைப் போன்ற பெண்களில் வேறு யாருக்கு**
**காப்பியங்கள்**

*புராணக்கதைகள் அர்ப்பணிக்கப் பட்டிருக்கின்றன*
*என்னைப் போன்ற வேறெந்த பெண்*
*ஒவ்வொரு கலையிலும் இவ்வளவு தேர்ச்சி பெற்றிருக்கிறாள்?*
*உன் போன்ற பெண்களில் முத்துப்பழனி*
*நீ தன்னிகரில்லாதவள் (எனக்குள் பெய்யும்மழை, முன்னுரை)*

இத்தகைய பெண்ணின் எழுத்திற்கே தடை, தணிக்கை. பெண் என்பதால் அவள் எதிர்கொள்ள வேண்டிய தடைதள்தாம் எத்தனை எத்தனை! முன்பே குறித்தபடி பெண்ணின் மனவுணர்வுகளைப் பெண்ணின் நிலையில் நின்று பதிவு செய்த எழுத்து இன்றல்ல என்றுமே நெருக்கடிக்கு ஆளாகியிருப்பதைத்தான் முத்துப் பழனியின் காப்பியம் பதிப்பித்த வரலாறு காட்டுகிறது என்று அமரந்த்தா விரிவாகக் கூறிச்செல்கிறார்.

கர்நாடகத்தைச் சார்ந்த சாரா அபுபக்கர் பல தடைகளையும் மீறி எழுத ஆரம்பித்தார். இஸ்லாமிய மதத்தின் பலதாரமணம், எளியமுறையில் விவாகரத்து ஆகும் நிலை ஆகியவற்றைக் கருவாக அமைத்துத் தம் இரு நாவல்களை எழுதினார்.

எளிய முறையில் விவாகரத்து ஆகும் நிலையை விளக்கி, அதனால் மனோரீதியாகப் பெண்ணுக்கு ஏற்படும் பாதிப்பை எழுதிய அந்த நாவல் பெரும் கண்டனத்துக்கு ஆளாகியது. பலதாரமணம் பற்றிய நாவலும் கடுமையான விமர்சனத்துக்கு உட்பட்டது.

'பலதார மணம்' நாவலில் இடம்பெறும் ஒரு பெண் கதாபாத்திரம், உடல்நிலை சரியில்லாமல் படுக்கையில் இருக்கிறாள். அவளுக்கு உடல்நிலை சரியில்லாததால் ஆண் கதாபத்திரம் வேறு திருமணம் செய்துகொள்ள விரும்புகிறான். அப்போது அந்தப் பெண் பாத்திரம் 'நீ படுக்கையில் நோயுற்றுக் கிடக்கும்போது, நான் இப்படி வேறொரு ஆணோடு சென்றால் என்ன ஆய்விடும்'? என்று கேட்கிறது. இப்படி ஒரு பெண்பாத்திரம் கேட்கும்படி ஒரு பெண் படைத்ததை ஆண்களால் ஜீரணிக்க முடியவில்லை. பல நூற்றாண்டுகளாக ஒடுக்கப் பட்டவர்களின் குரல் இப்படி ஒலிக்குமென்று ஆண்கள் எதிர்பார்க்கவில்லை; அதிர்ச்சியடைந்தனர்.

அதன் விளைவு? கட்டுரை வாசிக்கச் சென்றவர்க்குக் கருத்தரங்கில் வாசிக்கத்தடை; பல பத்திரிகைகளின் தாக்குதல் வேறு. இஸ்லாமியப் பெண்கள் அவரை அணுகிப் பேசவும் தடையென்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! மனிதர்கள் பற்றிய கதைகள் கூடாது; விலங்குகள், பறவைகள், செடி, கொடிகள் பற்றி எழுதலாமென்ற அறிவுரை வேறு! உண்மைதான்; உண்மையைக் கூறினால் அவை

யாரையும் தாக்கப் போவதில்லையல்லவா? என்று முடிக்கிறார் சாரா அபுபக்கர்.

நூறாண்டுகளுக்கு முன் ஒரு நம்பூத்ரி பிராமணப் பெண் கவிதையால் ஈர்க்கப்பட்டு, ரகசியமாகக் கவிதை எழுத முற்பட்ட அவள் குரல் கண்டறியப்பட்டு ஒடுக்கப்பட்டது என்று ஓ.வி. உஷா குறிப்பிடுகிறார்.

இப்படிப் பலருடைய வாழ்வில் குடும்பத்தாலும் சமூகத்தாலும் பெண்களின் எழுத்து தணிக்கை செய்யப்பட்டது. அதனால் தங்கள் மன அழுத்தங்களை, ஆசைகளை, ஏக்கங்களை, இன்னும் பலப்பல உணர்வுகளை ரகசியமாக எழுதியும், எழுதியவைகளை மறைத்தும், கிழித்தும், தங்களுக்கான விடுதலையைப் பலரும் தேடிக் கொண்டுள்ளனர். இவையும் இவை போன்ற பலவற்றையும் அஸ்மிதா குழு ஆய்வு மூலம் கண்டறிவது பெண்வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது. மேலைநாட்டிலும் பெண்ணைப் பொறுத்தவரை இதே கதைதான். அவை யாவும் பதிவு செய்யப்படவில்லை என்பதுதான் உண்மை.

தமிழகத்திலும் இந்நிலை பலருக்கு ஏற்பட்டிருக்கலாம். ஒரேயொரு சான்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நவீனத் தமிழ் இளம் பெண் கவிஞர்களில் சல்மாவும் குறிப்பிடத்தக்கவர். 'இலக்கியமும் வாழ்க்கையும்' (காலச்சுவடு, ப. 47) என்பதில் அவருடைய எழுத்துக்கு, குறிப்பாகக் கவிதைக்கு ஏற்பட்ட தடைகளை - தணிக்கைகளை அவரே வெளிப்படையாய் பேசியுள்ளார்.

திருமணம் நிச்சயமானபோது, அவர் எழுதிய கவிதையொன்று பத்திரிகையில் வெளியாக, அதனால் ஊரில் சொந்தக்காரர் ஒவ்வொருவர் வீட்டிலும் ஏற்பட்ட பதற்றம் - அதன் விளைவாக ஏற்பட்ட மோசமான விமர்சனங்கள். அதன் விளைவு: திருமணத்திற்கு முன் இனி இது போன்று நேராது என்பதற்கான உத்திரவாதம் வேறு கேட்கப்பட்டது. லெனின், மார்க்ஸ், பெரியார் புத்தகங்களைப் படிப்பதற்குத் தூண்டுகோலாய் இருந்த அவருடைய சகோதரரைப் பார்க்கக் கூடாதென்ற கட்டளை வேறு!

திருமணத்திற்குப் பிறகும் கணவரால் பல தடைகள் அவருடைய இலக்கிய ஆர்வத்திற்கு ஏற்பட்டன. ஆயினும் எல்லாவற்றையும் மீறிக்கொண்டு அவர் இலக்கிய ஆர்வம் மேலோங்கியுள்ளது என்பது வியப்பைத் தருகிறது. இத்தனை ரணங்களையும் ஏற்றுக் கொண்டுதான் 'சல்மா' என்ற பெண்கவிஞர் தனக்கான சுதந்திரத்தோடு எழுதிவருகிறார். அவர் கவிதைகளுக்காகச் சிறப்பாகப் பேசவும்படுகிறார்.

இப்படிப்பட்ட தடைகளும் நிர்ப்பந்தங்களும் வெவ்வேறு வடிவில் பலருக்கும் தொல்லை தந்திருக்கலாம். ஆனால் அவையெல்லாம் சொல்லாத சேதிகளாக ஆகிவிட்டன. உண்மை அநுபவங்கள் மௌனமாகிப் போயின.

பெண் ஆணுக்கு அடங்கியவள் என்றும், ஆணைச் சார்ந்து இருப்பவள் என்றும் அவனுக்குத் தாழ்ந்தவள் என்பதும் இந்த ஆணாதிக்கச் சமுதாயம் கற்பித்த புனைவுகள் பெண்ணின் நினைவில் மனதில் பதிந்திருப்பதால், அவற்றையெல்லாம் மாற்றிப் புதிய தனக்கானதொரு மொழியை, வாழ்வை ஏற்படுத்திக் கொள்வது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று.

பெண் விடுதலையை உண்மையிலேயே விரும்பும் பெண்களால் கூட இந்த மனோபாவத்திலிருந்து விடுதலையாக முடிவதில்லை: அந்த எண்ணச் சிறையிலிருந்து வெளியேறித் தனக்கான ஒரு பாதையை அமைத்துக் கொள்ளுதல் என்பது நடைமுறையில் அசாத்தியமாகவே உள்ளது. இதுதான் யதார்த்த நிலை.

ஆனால், எல்லாக் காலக்கட்டத்திலும் எல்லாத் தேசங்களிலும் விதி விலக்குகளாகச் சிலர் வாழ்க்கையை எதிர்கொண்டு, தொடர்ந்து போராடித் தங்களுக்கான பாதையை அமைத்துக்கொள்ளாமல் மௌனமாக இருந்துவிடவில்லையென்பது நம் கவனத்தை ஈர்க்கிற விஷயம். அவர்களின் மௌனம் கலைந்தபோது அது ஏற்படுத்திய அலைகள் சமூகத்தில் பெரும் அதிர்ச்சியைத் தந்தன என்பது மட்டும் உண்மை.

பெண்கள் தங்கள் உள்ளத்து உணர்வுகளை வெளியிடக் கூடாதென்ற பண்பாட்டு எல்லையைத் தாண்டித் தங்கள் இருப்பை உறுதியாக்கிக் கொள்வதன் மூலம் மற்றப் பெண்களின் இருப்பையும் உறுதி செய்த சிலரை அவர்தம் கவிதை மொழியின் மூலம் காண்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

பெண்கள் தங்கள் கவிதைகளில் அவர்களுக்கான உணர்வுகளை வடிப்பது என்பது அப்படியொன்றும் புதியதில்லை என்பதை வரலாறு காட்டி நிற்கின்றது.

சில சான்றுகள் மூலம் அதனை அறிய முற்படலாம். ஒரு பெண் தன் காதலனைப் பிரிந்த துயரத்தை, தவிப்பை ஔவை எப்படிக் கூறுகிறார்? தலைவி\ கூற்றாக ஔவை பாடிய அந்தப் பாடல் பெண்மொழிக்குச் சான்று. ஆனால் அதைப் பெண் மொழி என்று நாம் உணரவில்லை. அந்தச் சிந்தனை நமக்கு அன்று ஏற்படவில்லை.

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு உறக்கம் வரவில்லை. வாடைக் காற்று வீசுகின்றது. அதுவும் சுழன்று வீசுகின்றது. பிரிவின் துயரத்தைத் தாங்க இயலவில்லை தலைவியால். தலைவனை எண்ணி வருந்துகிறாள். அவனைச் சேர வேண்டுமென்ற தாபம் மேலும் மேலும் அதிகரிக்கிறது. காமம் தீவிரமாய் அவளைத் தாக்குகிறது. அதனால் சினம் கொள்கிறாள் ஊர்மக்கள் மீது! அவள் உறக்கம் வராமல் தவிக்கும் போது, தனிமையில் துயரத்தை அனுபவிக்கும் போது ஊர்மட்டும் இனிதாகத் துயில் கொள்கிறதே என்று கோபம் கொள்கிறாள். அதன் வெளிப்பாடுதான்,

முட்டுவேன் கொல் தாக்கு வேன்கொல்
ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
ஆஅ ஒல்லெனக் கூவு வென்கொல்
அலமரல் அசைவளி அலைப்பவென்
உயவுநோ யறியாது துஞ்சும் ஊர்க்கே

(குறுந்தொகை, 28.)

என்ற பாடல்.

அதாவது என் இந்த நிலையை அவர் அறியுமாறு மூளச்செய்து அறிவிப்பேனோ அன்றி அவர் மெய்யில் புடைப்பேனோ? ஏதேனும் ஒன்றனைத் தலைக்கீடாக மேற்கொண்டு ஆஅ ஒல்லென்னும் முழக்கம் உண்டாகும்படி கூப்பிடுவேனோ என்று கலங்கி இன்னது செய்வதென்று தெரியவில்லையென காமத்தின் கொடுமையைக் கூறுகிறாள் தன் தோழியிடம்.

மொழி, உடல், மனம் ஆகிய மூன்றும் தலைவன் பிரிவால்-காமத்தின் விளைவால் படுகின்ற பாட்டைக் கூறும்போது பெண்மொழி பிறக்கிறது. ஆண் மொழியைப் புறக்கணித்து, மற்றொரு எடுத்துக்காட்டையும் பார்ப்போம்.

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்தும் உக்காஅங்
கெனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை உணீஇயல் வேண்டும்
திதலை அலகுலென் மாமைக்கவினே'

(குறுந்தொகை, வெள்ளிவீதியார், பா. 27.)

தலைவன் பிரிவைத் தாங்காது துயர் உறும் பெண் கூறும் கூற்று. நல்ல ஆவினது இனிய பால் ஒன்று கன்றுக்குப் பயன்படவேண்டும். பின் கறக்கும் கலத்தினில் விழவேண்டும். இரண்டுமே இல்லாமல் மண்ணில் சிந்தினால் என்ன பயன்? அதைப்போல் அல்குலில் படர்ந்த பசலையாகிய மணிநிற அழகு எனக்கும் பயன்படாமல் என்

தலைவர்க்கும் இன்பம் பயக்காமல் பசலை படர்ந்து அந்த அழகினை உண்ணுதல் என்ன நியாயம்? எனக் கேட்கிறார்.

பெண்கள் பேசக் கூடாதென்று விலக்கப்பட்ட காமவுணர்வை வெளிப்படையாக எடுத்துரைக்கும் போது பெண்மொழி உருவாகிறது. ஆண் பெண்ணுக்கு வகுத்த வன்முறைச் சட்டத்தைத் தகர்த்துக் கொண்டு வெளிப்படுகிறது.

விதிவிலக்காக அமைந்த ஔவை, வெள்ளிவீதியார் பாடல்கள் பெண்மொழிக்குச் சிறந்த சான்றுகளாகின்றன. தொடர்ந்து இப்போக்கில் ஆய்வுசெய்யின் மேலும் சில பாடல்களும் இடம் பெற்றிருப்பதைக் கண்டறியலாம்.

அடுத்து, நீண்ட கால இடைவெளி. அதன்பின் பக்தி இயக்கக் காலத்தில் காரைக்கால் அம்மையாரையும் ஆண்டாளையும் காணலாம். பொதுவாகப் பெண்களுடைய வெளிப்பாடாக ஓர் இலக்கியம் உருவாகும் போது, அது உடல்பரமான உணர்வுகளைச் சார்ந்தே முகிழ்க்கிறது என்பது ஓரளவு உண்மையாக உள்ளது.

புனிதவதி என்ற காரைக்கால் அம்மையாரின் தெய்வபக்தியை உணர்ந்த அவள் கணவன் பரமதத்தன் அவளை விடுத்து, வேறு ஒரு பெண்ணை மணந்து, அவள் மூலம் பிறந்த குழந்தைக்குப் புனிதவதி என்று பெயரிட்டு, வேறு ஓர் ஊரில் வாழ்ந்து வருகிறான். செய்தியறிந்த உறவினர் காரைக்கால் அம்மையாரை மீண்டும் கணவனிடம் சேர்க்க அழைத்துச் சென்றபோது, அவன் அவளைத் தொழுது ஏற்க மறுத்துவிட்டான். அம்மையார் இறைவனை வேண்டிப் பேயுருக் கொள்கிறார். பூமியில் ஓர் ஆடவனுக்குத் திருமணவிதிப்படி உரிமையான பிறகு அந்தப் பெண், ஆண்டவனுக்கும் கூடத் தன் உடலை உரிமையாக்க முடியாது என்ற கற்பியல் மிக அழுத்தமாக உணர்த்தப்படுகிறது.

இதைப்போல் ஔவையைப் பற்றிய கதை வரலாறும் உண்டு. தனக்கு மண்ணுலகு வாழ்வு வேண்டாமென்று இளமையில் முதுமையை தெய்வவரமாகக் கேட்டுப் பெற்றாள் எனக் கூறப்படுகிறது.

ஓர் ஆண், மனைவி மக்களுடன் குடும்பவாழ்வில் ஈடுபட்டு ஆன்மீகத்தில் ஏற்றம் பெறமுடியும். அவன் குடும்பம் துறந்து கானகமேகித் தவநெறியில் நின்றாலும் அவன் இளமையும் அழகும் அதற்குத் தடையாக இருப்பதில்லை. ஆனால் பெண்ணுக்கு ஆன்மீகத் துறவு வாழ்வே அந்நியமாகிப் போகிறது. இயல்புக்கு மாறானதாக ஆகிவிடுகிறது.

ஆண்டாள், 'திருப்பாவை', 'நாச்சியார் திருமொழி'யை அருளிச் செய்தவர். மண்ணிலே உலவி, அக்கால வாழ்வைத் தன் பாசுரங்களில் பிரதிபலிக்கச் செய்தவள். பக்திப் பரவசமாகிய உணர்ச்சிப் பெருக்கு அவள் குரலாகிறது.

நாச்சியார் திருமொழியில் வரும் விவரங்கள் அனைத்தும் மிக நுட்பமாக உடல்சார்ந்த விரகதாபத்தைப் பல்றே கோணங்களில் மனமுருக்கும் சொற்களால் உணர்த்துகின்றன.

ஆண்டாளின் தாபங்கள்

ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே! (பா. 5)

என்பதில் அழுத்தமாக வெடித்துக் கொட்டுகின்றன.

தேய முன் அளந்தவன் திரிவிக்கிரமன்
திருக் கைகளால் என்னைத் தீண்டும் வண்ணம்
சாயுடை வயிறும் என் தடமுலையும்
தரணியில் தலைப்புகழ் தருகிற்றிலேம் (பா. 7)

எனத் தன் வேட்கையை உரத்துச்சொல்கிறாள்.

ஆணாதிக்கக் கோட்பாடுகளினால் பெண்களின் உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்கச் சமுதாயம் முயல்கிறது. ஆனால் இத்தகைய பார்வைக்கு நேரெதிரான பார்வை பெண் படைப்பாளியான ஆண்டாளின் நாச்சியார் திருமொழியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண்களின் பாலியல் உணர்வுகளையும் மனவுணர்வுகளையும் சொல்லவிடாமல் தடுக்கும் சமூகத் தடைகளை ஆண்டாள் உடைத்தெறிகிறாள்.

'ஆண்டாளுக்கு அவளது உடல், உருவம் அது சம்பந்தப்பட்ட மனக்கோல ஆத்ம விசாரம் எல்லாமே பாலியல் பொருட்களாகவும் அவற்றின் அனுபவங்களும் அவற்றின் வளமையான வாழ்க்கையின் கோலங்களாகவே தெரிகின்றன. உடல் இன்பம் பற்றிப் பெண்கள் பேசமறுக்கும் தன்மை இங்கே இல்லை. அது இயற்கை என ஏற்படும் ஒருவித மனப்பான்மை இங்கே உருவாகிறது. அவளுடைய பக்திவுடல் மூலமே வெளிப்பாடு கண்டது.' தனக்கேயுரிய பெண்மொழியை, சொல்லாடலைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட முதல் பெண் படைப்பாளியாக ஆண்டாளை நாம் இனம்காண முடிகிறது (செல்வி. திருச்சந்திரன்).

3

# பெண்கவிஞர்கள் - பெண்மொழி

தத்துவங்களால் நிராகரிக்கப்பட்டவர்கள்; இலக்கியங்களால் மௌனமாக்கப்பட்டவர்கள்; ஊடகங்களால் பண்டமாக்கப் பட்டவர்கள் பெண்கள். அவர்களுக்கென்று கனவுகளில்லை. உணர்வோ உலகமோ இல்லை. அவர்களுக்கான வாழ்க்கை இல்லை. அவர்களிடமிருந்து இந்த உலகம் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டது. ஆனாலும் அவர்கள் தமது தடங்களைப் பதிக்கின்றனர்.

தங்கள் இழப்பைப் பதிலீடு செய்வதற்காக, துக்கத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக எழுத்தை அவர்கள் அடையாளம் காண்கிறார்கள். எல்லாவற்றையும் இழந்து, சொற்கள் மட்டுமே எஞ்சியிருக்க அந்தச் சொற்களைக் கதவுகளாக்கி அவற்றைத் திறப்பதின்மூலம் பிற உலகங்களுக்குள் நுழைகிறார்கள்.

சுவர்களாகச் சூழ்ந்திருக்கும் ஆண்களின் உலகைத் தமது படைப்பு ஆளுமையின் மூலம் தகர்க்கிறார்கள் பெண்கள். அவர்கள் தம் படைப்புகளினூடே உருவாக்கும் பொறிகளில் சிக்கித் திணறுகிறது ஆண்களின் இறுமாப்பு.

> பெண்கள் வெகுகாலமாக எழுதிவந்த போதிலும் பெண் என்ற பிரக்ஞையோடு எழுதத் தொடங்கியது அண்மைக் காலத்தில்தான். வேறுவிதமான பார்வைகளை வெளிப்பாடுகளை முன்வைக்கும் அவர்களது படைப்புகள் வேறுவிதமான அணுகுமுறையைக் கோருகின்றன. அதன் முக்கியத்துவம் புரியாத ஆண்கள், தம்மை வழிகாட்டிகளாகப் பாவித்துக்கொண்டு அந்தப் படைப்புகளைப் படிப்பதைக்கூட ஒரு சலுகையாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் தமது பேதமையை உணராத பலவீனமே அது. **(காலச்சுவடு, இதழ், 47)**

எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தமிழகத்தில் பெண் **கவிஞர்கள்** சிலரின் தொகுப்புகள் வெளியாயின. அவை நம்

கவனத்திற்குரியன என்பதை நினைவுகூரலாம். எண்பதுகளின் பிற்பகுதியிலும் தொண்ணூறுகளிலும் அதன் பின்னரும் பெண் கவிஞர்களின் பல தொகுப்புகள் வெளியாயின. அவை பரவலான கவனத்திற்கும் உரியவையாயின. இவை முன்பே கூறப்பட்டன என்றாலும் பொருத்தம் நோக்கி மீண்டும் கூறப்பட்டது.

அவர்களுள் சிலரின் கவிதை மொழிகளே இங்கு மையப்படுத்தப்படுகின்றன. பெண்ணியத் திறனாய்விற்கும் உட்படுத்தப்படுகின்றன.

சுகிர்தராணி, மாலதிமைத்ரி, குட்டிரேவதி ஆகியோர் அண்மைக் காலத்தில் எழுதிய கவிதைகள் தீவிரக் கண்காணிப்புக்கு உட்படுகின்றன. இதுவரையில் பேசப்படாத, தடைசெய்யப்பட்ட, அசிங்கம், ஆபாசம் என்ற கட்டுப்பாட்டுடன் பார்க்கப்பட்ட பெண் உறுப்புகள், அவற்றின் செயல்பாடுகள் அனைத்தும் அவர்களின் கவிதைகளில் எந்த விதமான தயக்கமுமில்லாமல் வெளிப்பாடு அடைகின்றன. பெண் குறி சார்ந்த அரசியல் புரட்டிப் போடப்படுகின்றது. இதன் தேவை என்ன என்ற கேள்விக்கு இதுவரையில் சொல்லப்பட்டு வந்த மரபுகள் உடைபடுகின்றன. அதாவது பெண் உடல், சமூகத்தின் ஒரு சார்பான தேடலுக்குரியதாய் இருந்துவந்தமை தெரியவருகிறது. அத்துடன் இந்த உடல் கலாச்சார, பண்பாட்டு ஆதிக்கத்திற்குரிய ஒரு நுகர்வுப் பொருள் என்பதும் மாற்றுப் பார்வையோடு அணுகப்பட வேண்டும் என்ற ஒரு புதுப் போக்கும் சுகிர்தராணியின் கவிதையில் அரசியலாகிறது. இந்த அரசியல்தான் ஆணின் முகமூடியைக் கலைத்து உண்மை முகத்தைக் காட்டுகிறது.

## முதல் முத்தம்

வெகு நாட்களாகின்றன
முத்தங்களைப் பரிமாறிக்கொண்டு
கூர்தீட்டிய கல்லால்
நறுக்கப்பட்ட தொப்புள் கொடிபோல்
துருத்திக் கொண்டிருக்கிறது
நம் உதடுகளுக்கிடையே முத்தம்
ஒவ்வொரு முறையும்
இரத்த ஓட்டம் தடைபட்ட
வறட்டு முத்தமாகவே
நிகழ்ந்து விடுகிறது.
உதடுகளைச் சீண்டிப் பெறப்பட்ட

அம்முத்தத்தின் சத்தம்
வெறுமைச் சுவரில் பட்டுத் திரும்புகிறது
போர்க்களத்தில் பேரோலமாய்.
ஸ்பரிசத்திலிருந்து
பருகப்படாத அது
ஒளியின் நேர்க்கோடென
காய்ந்து கிடக்கிறது
விழித்திருக்கும் நேரங்களில்
கதவடைப்பைச் செய்கின்றன
கானல் உதடுகள்
அசந்தர்ப்பமான வேளைகளில்
வளைந்த ஆடிகளாய் உறங்கும் போது
வெற்றிடத்தை நிரப்புகிறது
எப்போதோ பெற்ற
நம் முதல் முத்தம்.
*(காலச்சுவடு, ஆகஸ்டு, 2004, ப. 36).*

சுகிர்தராணியின் கவிதைகளில் பாலியல் உறவு சார்ந்த சொல்லாடல்கள் தீவிர சர்ச்சைக்குள்ளாகின்றன. அதாவது ஒரு பெண்ணின் அந்தரங்கம் ஆசைகள் நேர்க்கோட்டில் வெளிப்பட ஆணின் செயல்கள் தடையாக இருக்கும்போது, ஆணின் வல்லுறவிற்குப் பெண் நிர்பந்திக்கப்படுதலை நிராகரிக்கும் எதிர்வினை பதிவாகிறது.

வெப்பத்தைத் தின்ன முடியாமல்
பெருங்குர லெடுத்து அழுகிறது காற்று
தூரத்தே
வெட்கமறியாத குழந்தையைப் போல
நிர்வாணமாய் நிற்கின்றன மரங்கள்.
நீரைத் தேடிக் களைத்த நதி ஒன்று
கடலில் கால் நனைத்து
அள்ளிப் பருகுகிறது அதன்தீராத நீரை
இரத்த சோகை பிடித்த மேகங்கள்
ஈரமருந்து தேடுகின்றன
கிழக்கில் வெந்த
சூரியனைச் சுவைத்து விட்டு
எதிர்ப்புறம் சாய்கிறது பகல்
முன் எப்போதோ
கனிமரங்கள் செழித்திருந்ததைக்
கானலில் கண்டு மருகுகிறது பருவம். (மேலது, ப. 37.)

இயற்கை, தனது இருப்பிலிருந்து மாறும் சூழல் அதனுடைய மற்றொரு முகத்தைக் காட்டுகிறது. அதன் தாகம் தீர்க்கப்படும் வழியை அதுவே தேடிக் கண்டுகொள்கிறது. ஆனால் பெண்ணின் தேடல் மட்டும் கானலாகத் தொடர்கிறது.

மேற்கண்ட கவிதையில் பெண்ணின் தேடலுக்குச் சமூகத்தடை தொடர்ந்து அவளது இருப்பைக் கண்காணித்து வருகிறது. கன்னிமரமாய்ப் பெண் செழிப்புடன் பருவத்திளைப்புடன் வளர்ந்திருந்தாலும்கூட, தானே தனது வாழ்வை அமைத்துக் கொள்ளும் சுதந்திரம் ஆண் ஆதிக்க அதிகாரச் சமூகத்தால் கானல் நீராக்கப்படுவது யதார்த்தமாகிறது.

மாலதிமைத்ரியின் கவிதைகளில் உடல் வேட்கை மையமாக இருக்கிறது. தாய்சேய் உறவும் சிறப்பாகப் பேசப்படுகிறது. ஏனென்றால் ஆண் உடல் பெண் உடலைத் தன்னுடைய கட்டுக்குள் வைத்திருக்கின்றது. தனது புனைவுகளால் பெண் உடல் சிறையிடப்படுகின்றது. இதில் பெண்ணின் சுவாசமும் வேட்கையும் சுருங்குகின்றது. இதனால் மொழிக் கட்டமைப்பும் ஆணினுடையதாகிறது. இந்த மொழிக் கட்டமைப்பை எல்லை கடந்து பயணிக்க மாலதி மைத்ரி கவிதைகள் பயன்படுகின்றன. பெண்ணின் தேடல், அடையாளம் மாற்றம் பெறுகின்றன. பெண்ணை அடிமைப்படுத்தும் உறுப்பான பெண்குறி ஒருவன் ஒருத்தி சார்ந்த உறவோடு மட்டும் அர்த்தப்படுத்துவதைக் கலைத்துப் பார்க்கிறார் மாலதி மைத்ரி.

ஏதோ ஒரு பருவ மாற்றத்தில்
எனது அங்கங்கள் ஒவ்வொன்றும்
மிருகமாகவும் பறவையாகவும் மாறி
என்னைவிட்டு விலகிச் செல்லத் தொடங்கின
அவையே திரும்பி வந்து சேர்வதும்
பல சமயங்களில் தொலைந்த ஆட்டுக்குட்டியை
தேடிச் சென்று அழைத்து வருவ தென நிகழ்வும்
பிறகு யாத்திரை போலப் புறப்பட்டுச்
சென்றுவிடுவதும் வழக்கமாகி
எல்லாக் கால வெளியிலும் அலையத் துவங்கின
நீண்ட காலமாகிவிட்டது
பல திக்குகளின் நீர் நிலங்களை
நோக்கிச் சென்றிருக்கும்
எது எத்திசையில் உலவுகிறது
என யூகித்தறிய முடிவதில்லை

திரும்பி வந்துவிடும் போது
வெவ்வேறு நிலத்தின் வாசனையோடும்
குரல்களோடும் என் உடலெங்கும் மேய்ந்து
என் அடையாளத்தைக் கலைத்து அடுக்குகின்றன
யோனி ஒரு பட்டாம்பூச்சியாக
மலைகளில் அலைவதைக் கண்டதாக
காட்டில் விறகு பொறுக்கச் சென்ற
பெண்கள் வந்து கூறக் கேட்டேன்.

(நீரின்றி அமையாது உலகு, ப.18.)

இக் கவிதையில் தமிழ் மரபு மாறுகிறது. இந்த வரிகளைப் படிக்கும்போது ஒரு அருவருப்புணர்வு தோன்றுகிறது. எனினும் இந்த உணர்வு பெண்ணிற்கு மட்டும் என்று சொல்லப்படுவது மாற்றம் பெற வேண்டும். ஏனென்றால் இந்த உறுப்பை ஆசையுடனும் காமத்துடனும் பார்த்தவர்கள் ஆண்கள். எனவே ஆண்கள்தாம் அவர்களின் பார்வைதான் அருவருக்கத்தக்கது அருவருப்பானவர்கள் என்ற புரிதல் மாலதி மைத்ரியின் குரலாகிறது.

## வேறு மழை

நினைத்த பொழுதெல்லாம் வரும் மழை
வேண்டும் பொழுதெல்லாம் கிடைக்கும் மழை
சோர்ந்த பொழுதெல்லாம் பெய்யும் மழை
மகிழ்ந்த பொழுதெல்லாம் கொட்டும் மழை
மனம் அறியும் மழை
உணரும் மனம் மழை (சங்கராபரணி, ப. 11.)

'வேறு மழை' என்ற இந்தக் கவிதையில் மழை இல்லையென்றால் உலகம் இல்லை. நீர், உலக ஆதாரம் என்ற பொதுமைச் சிந்தனை பெண்ணை மழையாகப் பார்க்கத் தூண்டியுள்ளது. இது பெண் உடல்மீதான புதுப்பார்வையாகத் தெரியலாம். அதாவது மனதை மழையாகப் பார்த்தல் என்பது பெண் மழையாக வியாபித்திருப்பவள் என்று உணர்ந்து கொள்ளலாம். மனதை மழையாகப் பார்ப்பதின் மூலம் மொழியை புனருற்பத்திச் செய்கிறாள். நானே எனது மகிழ்ச்சியை உருவாக்கிக்கொள்வேன். ஏனென்றால் பெண்ணின் தனிமை, பெண் சமூகத்தில் ஓரங்கட்டப்படுதல், விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுதல், பெண் குரல் அழுத்தமான, ஆழமான மௌனமாக்கப்படுதல், நீண்ட பள்ளத்தாக்கில் தூக்கி எறியப்படல் எல்லாம் பின்நவீனத்துவ அடிப்படையில் சொந்தக் குரலாக, உயிருள்ள குரலாக மாறும் சூழலைப் பெண்ணை, பெண்ணுடலை மையப்படுத்தி

அதிகாரமாக்கும் பின்காலனித்துவக் குரலாக மாறி, மரபான தமிழ்ச் சூழலைத் தகர்க்க வேண்டும் என்ற புதுக்குரல் வேறு மழையாகப் பொழிந்திருக்கிறது.

சமீப காலமாகத் தமிழில் பெண்கவிகளை நோக்கி வரலாற்று மறுப்புப் பார்வைகள் ஆண் கவிஞர்களால் முன்வைக்கப்படுகின்றன. காமம், விரகதாபம் போன்ற உணர்வுகள் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவான உணர்வுகள். ஆண், தன் காமத்தையும் விரகதாபத்தையும் வெளிப்படுத்த உரிமையுடையவன். ஆனால் பெண்ணோ அவற்றைப் பேசவே கூடாதென்றால் எழுத்தில் வடிப்பது என்பது எப்படிச் சாத்தியமாகும்? இந்தக்கட்டுப்பாடு சமூகம் - ஆண் அதிகார ஆதிக்கப் பண்பாடு சொல்லிவைத்த சட்டம். அவள் அதை மீறக் கூடாது. மீறினால் அவள் ஒழுக்கமற்றவள் என்றும், வெட்கமில்லாதவள் என்றும் அழைக்கப்படுவாள்; குற்றம் சாட்டப்படுவாள். காமம் என்பது ஓர் உணர்வு என்றால் அது ஆண், பெண் இருவர்க்கும் பொதுவாகத் தானே இருக்க வேண்டும்? பெண் என்ற ஒரு காரணத்தினாலேயே அவளுள் எழும் இயல்பான உணர்வுகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது ஒருவகையில் அவள்மீது அவர்கள் செலுத்தும் வன்முறைதானே? இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள்தாம் ஆண், பெண் பாலிய அரசியலாவதை நாம் கவனிக்க வேண்டும்.

ஒரு பெண்ணின் காமம், குட்டி ரேவதியால் கூறப்படும் விதமே பெண்மொழியாகப் பரிமாணம் பெறுகிறது. கவிதையில் இடம்பெறும் படிமங்கள் வியப்பைத் தருகின்றன. காமத்தைப் பற்றிய ஒரு புதிய நோக்கு - புதிய உவமை இடம்பெறுகிறது.

ஒரு பெண்ணின் காமத்தை ஆண் என்றுமே முழுமையாகப் புரிந்து கொண்டதில்லை. அதன் பரிமாணங்களை அறிந்து கொள்ள முயன்றதுமில்லை. இதுதான் யதார்த்த வாழ்வின் நிதரிசனமான உண்மை. பெண்ணின் காமம் அணையாது காக்க வேண்டிய சுடர். அதன் கண்கள் மென்மையான குழந்தையின் பாதத்தை ஒத்துள்ளது. அதன் தன்மையைப் பச்சைநிற மருந்திற்கு ஒப்பிடுகிறார் கவிஞர். அம்மருந்து அருந்தி மனிதநேயம் என்ற உடல்நலனைப் பெற அழைக்கிறது. ஒரு புதிய காகிதத்தில் எழுத விரும்பும் மனதில் பொங்கும் மகிழ்ச்சி, அதாவது புதியதைப் படைக்கும் மனதின் மகிழ்ச்சி, அல்லது ஒரு குழந்தையின் பிஞ்சுவிரல்களைப் பற்றிக்கொண்டு நடக்கும் போது எத்துணை மகிழ்ச்சி ஏற்படுமோ அத்தகைய ஆர்வத்துடன் என் காமத்தை வருடிப் பார்த்திருக்கிறாயா? என்று கேட்பதில் பெண்ணின் காமம் வெறும் வடிகாலாக மட்டும் அமையாமல் படைப்பாற்றலுக்கான சக்தியாக, மனித நேயத்தைச் சுரக்கும் ஊற்றாகப் புலப்படுவதைக் காணலாம்.

'என் காமத்தை இதுவரை
நீ வருடிப் பார்த்தது கூட இல்லை
. . . . .          . . . . .          . . . . .
நீரும் காற்றும் போல
காற்றும் நீரைப் போல
புயலின் நிழலை
இரவில் காணுகிறேன்
வருடிப் பார்த்திருக்கிறாயா என் காமத்தை
ஒரு புதிய காகிதத்தில் எழுத விரும்புவதைப்
போலவோ

அல்லது

ஒரு குழந்தையின் விரல்களைப் பற்றும்
ஆர்வத்துடனோ? (முலைகள், ப. 31)

ஒரு பெண்ணின் பருவகால உணர்வுகளைக் குட்டி ரேவதியின் மற்றொரு கவிதை வெளிப்படுத்துகிற விதம்:

### காலத்தின் முன் . . . .

காலத்தின் முன்
ஆபரணங்களும் பட்டாடைகளும் சூடிப்
பரவசம் சுமந்த மணப் பெண்ணாய் நிற்கிறேன்
அது சில சமயங்களில்
உடலெங்கும் விதைக்கப் போகும் பருவமாய்
அல்லது
ஓர் அறுவடைக்காலமாய் அல்லது
தவறிய ஒரு பருவத்தின் வேகத்தோடு
கடந்து செல்கிறது அல்லது என்முன்
தயங்கிநிற்கிறது
குழந்தையின் வெளிறிய கைகளால்
என்னை அருகருகே அழைத்துக்
கொண்டேயிருக்கிறது
அதன் வாசனை
சம்பவங்களற்றதான ஒரு காலம் பற்றி
அழகான கற்பனையோடு என்னையே
வளையவருகிறது
வசீகரங்கள் அணிந்த அதன் சுவாசம்
என் மார்பின் மீது வீசிவிடாது
மிகக் கவனமாய்க் கடக்கிறேன்

தனது காற்சலங்கைகளால் சப்தமெழுப்பி
ஒரு குழந்தையின் விழைவோடு என் மீது
பாயும்போது
அதன் அணைப்பில் திணறுகிறேன்
காமவேகம் தாளாது
(தனிமையின் ஆயிரம் இறக்கைகள், ப. 27.)

விரகதாபமும் தனிமையுணர்வும் ஆணுக்கும் பெண்ணுக்கும் உரியவைதாம். விரகதாபத்தை ஒரு பெண் பேசுவது என்பது பண்பாட்டுக்கு முரணானது என்று கூறுவது பெண்ணை ஒடுக்கும் செயலாகவே உள்ளது. விரகதாபம் என்பது பெண்ணுக்குத் தோன்றாமல் இருந்தால் பெண்ணும் பேசாமல் இருக்கலாம். ஆனால் அந்த உணர்வை அவள் பெறும்போது அவள் ஏன் அதைப் பேசக் கூடாதென்று தடை விதிக்க வேண்டும்? எந்த விதமான அளவுகோல்களை இந்தச் சமூகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் தந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இறகினும் சன்னமான கனமுடன்
விழுந்தது அந்நிலவொளி, அதன்
அதிர்வில் புரண்டு விழுந்தேன்
இன்னோர் உடலின் நதிப்படுகையில் (மேலது, ப. 29)

ஒரு பெண்ணின் விரகதாபத்தை ஒரு பெண் வெளிப்படுத்துவதில் என்ன ஆபாசம் வந்துவிட்டது? ஆபாசம் என்பதும் அசிங்கம் என்பதும் அவரவர் மனதின் அழுக்குகளையல்லவா வெளிப்படுத்துகிறது? குட்டிரேவதியின் கவிதைகளில் படிமங்கள் அற்புதமாய் வந்து விழுகின்றன.

பெண்ணுக்கு உடல்ரீதியான, மனரீதியான வலிகள் எத்தனை எத்தனையோ எதிர்கொள்ள வேண்டிய சூழல். சில அவளுக்கு இன்பத்தையும் தரலாம். ஆயினும் முற்றும் வலியற்ற இன்பம் என்பது அவளுக்கில்லை. கூடியபின் ஏற்படும் மகிழ்ச்சி ஒரு புறம் அவளுக்குச் சொந்தமாயினும் அதனால் ஏற்படும் வலிகள் பெண்ணுக்குப் பெரிதுதான். இந்த வலியை 'கொடுக்கு' என்ற கவிதை புலப்படுத்துகிறது. அத்துடன் கொடுக்கு என்பது வலியின் குறியீடாக அமைந்து பெண்ணின் பிற வலிகளுக்கெல்லாமும் அடிப்படையாகிறது. பெண்ணின் பெரும்பான்மையான வலிகளுக்கு ஆணின் அதிகாரமும் ஆதிக்கமும் காரணமாகின்றன என்பதையும் இக்கவிதை மொழி உணர்த்துகிறது.

*சொல்லின் முள்ளொன்று தந்தாய்*
*மீனின் முள்ளையோ தாவர முள்ளையோ*
*ஒத்திராதது*
*சதைக்குள் இறங்கிய அக்கொடுக்கை*
*விட்டோடிப் பறந்தது குளவி*
*கடுக்கின்றன*
*என் விசேஷ உறுப்புகளான*
*கண்களும் முலைகளும் யோனியும்*
*அழியாதவலியின் சாயலெல்லாம் /*
*'கொடுக்குதானோ?'*
*(முலைகள், ப. 38.)*

மற்றொரு கவிஞரால் காமம் எனும் இவ்வுணர்வு எப்படி வெளிப்படுத்தப்படுகிறது எனப் பார்க்கலாம்.

காலம் அனைத்தையும் சாட்சி பூவர்வமாய் நின்று வேடிக்கை பார்க்கிறது. இங்கு ஒரு பெண்ணுக்குப் பருவத்தில் ஏற்படும் உணர்வுகளை அதன் வாயிலாய்த் தோன்றும் மெய்ப்பாடுகளைக் காலம் வேடிக்கை பார்க்கிறது என்கிறார் அஞ்சுகம்.

கோடைக்காலத்தில் தார்ச்சாலை வெப்பம் தாளாமல் உருகுவதை நம்மில் பலரும் பார்த்திருப்போம். அப்படித்தான் ஒரு பெண் பருவம் வளர்ச்சியடையும்போது காமமும் பெருக்கெடுக்கிறது. அது கோடை வெயிலில் உருகும் தாராக இயல்பாக வழிந்தோடுகிறது. அதற்கான வெளிப்பாடு இல்லாததால் நரம்புகள் புடைக்கின்றன. பருவமுதிர்ச்சியால் இயல்பாகக் காலநதி ஓட்டத்தில் காதல் பயிர் விளைகிறது. இது இயற்கை நியதி (துறவை மேற்கொண்ட மணிமேகலையின் மனம் உதயகுமரனை நாடிச் சென்றதையும் 'இதுவோ அன்னாய் காமத்தி யற்கை' எனத் தன் தோழியிடம் கூறியதையும் இங்கு நினைவு கூரலாம்). அறுவடைக்குக் காத்திருக்கும் பயிர்போல அது வடிகால் வேண்டி நிற்கிறது என்கிறார்.

பெண் பருவமடைந்ததும் அவள் உடம்பில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. அவள் உள்ளத்தில் ஆசைகளும் பருவத்திற்கு ஏற்ற உணர்வுகளும் தோன்றுகின்றன. உடல் ரீதியாகவும் மனோ ரீதியாகவும் அவள் மாற்றமடைகிறாள். அவற்றைப் பெண் என்பதால் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற சமூக நியதியைக் கடந்து பெண் இயல்பாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் போது பெண்மொழி தானாகவே பெண் வசமாகிறது.

## வேடிக்கை பார்க்கிறது காலம்

ஒரு கோடை வெய்யிலின்
உக்கிரத்தில்
உருகிடும் தாராய்
வழிந்தோடும் என் காமம்
வெறிச்சிடும் சாலையில்
பயணிக்கும்
புடைக்கும் என் நரம்புகள்
காலநதியின் ஓட்டத்தில்
விளைந்திடும் காதல் பயிர்
அறுவடைக்குக் காத்திருக்கும்
இருள் கிழித்து வரும் பாம்பு
வரம்பில் அமர்ந்து
வேடிக்கை பார்க்கிறது காலம்

(பனிக்குடம் - 2, செப். -அக். 03, ப. 35.)

சமூகத்தின் அமைப்புமுறை, பண்பாட்டின் பெயரால் பெண் சுதந்திரமோடு இயங்கப் பெரும் தடையாக உள்ளது. இது நூற்றாண்டு காலமாய்த் தொடர்ந்து வரும் நிகழ்வுதான். தாய், தந்தை, சுற்றம் என அத்தனை உறவுகளும் அவள் மீது அக்கறை செலுத்துவதாக எண்ணியே கண்ணுக்குத் தெரியாத தளைகளை அவர்களையும் அறியாமல் அவளுக்குப் பூட்டி அவள் இயக்கத்தைக் குறுக்கிவிட்டனர். எழுதப்பட்ட, எழுதப்படாத சட்டங்கள் வேறு அவள் பாதையைக் குறுக்கிட்டன. அவள் தன் சுயத்தை உணர்ந்து தன் விடுதலையைப் பிரக்ஞை பூர்வமாகத் தெளிந்து எல்லாவற்றையும் கட்டுடைத்து வெளிவர வேண்டும். இதுதான் நடப்பியலில் அவள் நிலை.

பெண்ணுக்கென்று பெண்மொழி இல்லாததால் கனிமொழி எமக்கென்று சொற்களில்லை. மொழியோ ஆணினுடையதாக இருப்பதால் அது நம்மை இணைத்துக்கொள்வதில்லை. உங்கள் கதைகளில் நாங்களில்லை; நீங்கள் புனைந்துரைத்த நாங்களே உள்ளோம்; எமக்கென்று வரலாறுமில்லை. ஏனென்றால் நீங்கள் கற்றுத்தந்ததுதான் நிஜம் என்று நினைத்தோம். எமக்கென்று கண்களில்லை; அதனால் உங்கள் பார்வையே என் பார்வையாயிற்று என்று கூறுகின்றார்.

எனக்கென்று செவிகளும் கால்களும் கூட இல்லை. எல்லாம் இரவலாய்த் தந்ததுதான் என்று கனிமொழி ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்ணுக்கான எந்தச் சுதந்திரமும்

இல்லையென்பதையும் அவள் சுயத்தை இழந்து வாழும் பெண்ணின் சமூகநிலை பற்றியும் சித்திரிக்கிறார் (கருவறை வாசனை, ப. 15).

இனி, பெண்களுக்கான வரலாறு எழுதப்பட வேண்டும். அவர்களுக்கான மொழி உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் அமையாது அவள் சுதந்திரமான தன் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதும் கனிமொழியின் எதிர்பார்ப்பும் ஆதங்கமும் ஆகும்.

*சட்டாம் பிள்ளையாய்*
*அம்மா*
*சிறைக் காவலாய்*
*அப்பா*
*அறிவுச் சலவைக்குப்*
*படிப்பு*
*கைகொட்டிச் சிரித்து அடக்கிவைக்க*
*சுற்றம்*
*சிலுவையின் ஆணி தகர்த்து இறங்கிவந்தால்*
*கையில் தாலிக் கயிற்றோடு*
*கணவன்*
*உன் கருவறைக்குள் மற்றுமொரு*
*அடிமை*

*(கருவறைவாசனை, ப. 25.)*

கணவன் கட்டிய தாலி புனிதமானது; அந்தத் தாலியை அணிந்து கொள்ளாமல் இருப்பவர்களும் கணவனை இழந்து தாலியை இழந்து நிற்பதாலேயே அமங்கலமாகிநிற்கும் கற்பிதங்களும் கட்டவிழ்க்கப்படும் போது திருமணம் ஒரு சிலுவையாகச் சித்தரிக்கப்படுகிறது. ஆண்களால் நூற்றாண்டுக்காலமாய்க் கட்டிக்காத்த புனிதக் கற்பிதங்கள் அர்த்தமிழந்து பெண்மொழியில் சிதறிப் போகின்றன.

திருமணம் என்ற நிறுவனம் யதார்த்த வாழ்க்கையில் எப்படியுள்ளது? பெண்ணுக்குத் திருமணம் மிக அவசியமானது. அதற்காகவே அவள் கற்பிக்கப்படுகிறாள். பெரும்பாலும் படுக்கையறையில் ஆணின் விருப்பத்தை நிறைவேற்ற என்பதே முதலிடம் பெறுகிறது. வாழ்வின் ஓர் அம்சமே அது; அதுவே வாழ்வாகி விட முடியாது; கூடாது. ஆனால் பெண்ணுக்குக் கூறும் அறிவுரையெல்லாம் கணவனுக்கு அடிபணிய வேண்டுமென்பதே. உறவுகள் எதுவாயினும் அறிவுரை என்னவோ அதுதான். வேறுவழியின்றிப் பெண்ணும் அதனை ஏற்க வேண்டியவளாகிறாள்.

அதற்கான காரணத்தை 'ஒப்பந்தம்' கவிதையில் சல்மா வெளிப்படுத்துகிறார்.

ஒவ்வொரு முறையும்
அம்மா நாசூக்காய் சொல்வதை
அக்கா கோபமாய்ச் சொல்வாள்
படுக்கையறையின்
தவறுகளெல்லாம்
என்னுடையதென
(ஒருமாலையும் இன்னொரு மாலையும், ப. 22.)

ஆனால் என் நிலைப்பாடு காலத்தாலும் வரலாற்றாலும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

உன்னிடமிருந்து சிறிது அன்பைப் பெற, உன் குழந்தையின் தாய் என்ற பொறுப்பை நிறைவேற்ற, வெளியுலகிலிருந்து சானிட்டரி நாப்கின்களையும் கருத்தடை மாத்திரைகளையும் இப்படியான இன்னும் சிறு சிறு உதவிகள் பெற வேண்டுமென்பதற்காக மட்டுமன்றி சிறிது அதிகாரம் செய்யவுந்தான் அவள் அவனுக்குத் தன்னைத் தருகிறாள். இதை

முடியுமானால்
உன்னைச்சிறிதளவு அதிகாரம் செய்ய
நான் சிறிதளவு அதிகாரத்தை
ஸ்திரப்படுத்திக் கொள்ள
எல்லா அறிதல்களுடனும்
விரிகிற தென்யோனி

இக் கவிதையின் இறுதிவரிகள் சல்மாவைப் பாராட்டுவதற்கும் பழிப்பதற்கும் காரணமாயின. இவ்வரிகளை ஒட்டி நடந்த விவாதங்களையும் கிண்டல்களையும் அவமானத்தினால் சுறுத்த முகத்தோடுதான் சந்திக்க வேண்டியிருக்கிறது (காலச்சுவடு, இதழ்-47, ப.59) என சல்மா கூறியதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். வெளிப்படையாகத் தங்கள் உணர்வுகளைக் கூறப் பெண்ணுக்குத்தான் எத்தனை எத்தனை இடையூறுகள்?

தாம்பத்தியம் எத்துணை போலியாக - செயற்கையாக யதார்த்த வாழ்க்கையில் நடைபெறுகிறது என்பதை சல்மா மற்றொரு கவிதையிலும் சித்தரிக்கிறார்.

எல்லா உறவுகளைக் காட்டிலும் தாம்பத்திய உறவு நெருக்கமானது. உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஒன்றுபடுகிற

நிகழ்வுக்கான உறவு. ஆனால் அந்த உறவில் கூட ஆண், பெண்ணைப் புரிந்து கொள்வதில்லை; புரிந்துகொள்ள முயன்றதுமில்லை. அவளுடைய மென்மை, உறுதி, நேசம், உள்ளே அமிழ்ந்து கிடக்கும் படைப்பாற்றல் திறன், காதல் எல்லாமும். ஆனால் எதையுமே ஆண் அறிவதில்லை. அந்த உறவில்கூட பெண்ணின் பல்வேறு பரிமாணங்களை அறியவில்லையென்றால் அந்தத் தாம்பத்தியம் யந்திரத்தனமாகவே இருக்க முடியும்.

தன்னைப் புரிந்து கொள்ளாத, புரிந்த கொள்ள முயற்சிகூடச் செய்யாத ஆணின் உணர்வுகளை அறியும் பெண், தன் சோகத்தை, கையற்ற நிலையை, விரக்தியை வெளிப்படுத்தும் நிலையில் பெண்ணிற்கான மொழி உருவாகிறது.

பெண்ணின் மென்மை, உறுதி, நேசம், ஆற்றல், காதல் இவைபற்றியெல்லாம் ஆண் அறிந்து கொண்டதில்லை. தன்னோடு வாழ்க்கையைப் பகிர வந்துள்ள ஒருத்தியின் சகலவிதமான உணர்வுகளை, விருப்பங்களை, அவளின் ஆளுமைகளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஆண் நினைப்பதேயில்லை. ஏனென்றால் பெண்ணை அவன் சகமனுஷியாக நினைப்பதேயில்லை; மதிப்பதுமில்லை. அவளை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. அவனின் சுகத்திற்காக, சுயநல சௌகர்யங்களுக்காக, அவனுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக அவள் இருக்கிறாள் என்ற எண்ணமே அவளைச் சமமாக மதிக்கவிடவில்லை. இந்தச் சிந்தனை, அவன் உயர்ந்தவன்; அவள் அவனைச் சார்ந்து வாழவேண்டியவள் என்ற நினைவிலி மனதின் செயல்பாடாகும். (இதுவும் பாலிய அரசியலின் ஒரு தன்மை எனலாம்).

என்னை
எப்போதும்
அறிந்ததில்லை நீ
எனக்கு நேர்ந்த
எதையுமே
(ஒருமாலையும் இன்னொரு மாலையும், ப. 13.)

என்ற கவிதை வரிகள், சமத்துவமற்ற நிலையை மட்டுமின்றி ஆணின் பல்வேறு அம்சங்களையும் அவன் அதிகார ஆளுமையின் அலட்சியப் போக்கினையும் பொறுப்பற்ற தன்மையினையும் எடுத்துரைக்கிறது.

லீனா மணிமேகலை 'என் உடல் அலாதியானது' என்று சொல்லும்போதே உடல் பரந்தவெளி என்ற புரிதலைத் தருகிறார். இந்த உடல், இதற்குள் நடக்கும் வினைகள் எல்லாம் ஆணின் உடலுக்கு

இல்லாதவை என்பதையும் உணரவைக்கிறார். இது ஓர் இசைக்கருவி. மீட்டப்படும்போதுதான் இன்பம் பெறமுடியும். அவ்வளவு எளிதில் மீட்டிவிடக் கூடியதல்ல எனினும் இந்தப் புரிதலை இதுவரை ஆண் உள்வாங்கியதில்லை. வெறும் ஆசைக்கு உரிய ஒரு பண்டமாகப் பார்த்தல் என்பது மட்டுமே கலாச்சாரமாகியிருக்கிறது. தழுவலால் மட்டுமே பிரக்ஞை பெறுகிறது என்று சொல்வதின் மூலம் பெண் உடலுக்கான எல்லையற்ற ஆற்றல்/வீரியத்தை வெளிப்படுத்துகிறாள். இந்த வீரியம் பெண்ணின் உணர்வு சார்ந்து/விருப்பம் சார்ந்து இல்லாத போது இது வெறும் மூச்சை உண்ட பைகளெனத் திரண்டு, சுழிந்து வழிந்து கிடப்பதாகின்றது. ஏனென்றால் ஒவ்வொரு பெண்ணின் பாலியல் உறவிலும் இருவரது ஆசைகளும் நிறைவேற வேண்டும். அது இயலாதபோது ஆண் அதிகாரத்தின் ஆதிக்கம் ஒரு சடலத்தைப் புணர்வது போலாகிறது. இது பெண் உடல் சார்ந்த கருத்தாக்கத்தை மீட்டுருவாக்கம் செய்கிறது. இது பெண் மொழியால்தான் சாத்தியமாகிறது.

லீனா மணிமேகலை, பெண்ணுடலை ஆண்மையின் வேராகப் பார்ப்பதைப் பரிசோதனைக்குட் படுத்துகிறார். வாழ்வின் ஆதாரம் ஆண் எதிர்பார்க்கும் பெண்ணுடல் சார்ந்ததாகவே இருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் ஆணுக்குரியதாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இதைமாற்றி பிரபஞ்சத்தை அணிந்துகொள்ள யத்தனிக்கும் முயற்சி பெண்ணுடையதாக மாறும்போது பிரபஞ்சம் மேலது கீழாய், கீழது மேலாய் மாறும். அது தவிர்க்க இயலாதது. இந்த மாற்றம்தான் மொழிக்கூறைக் கட்டமைக்கிறது. மொழிக்கும் மொழிதலில் உள்ள இடைவெளிக்குமான நெருக்கத்தைப் புதிய கருத்தாக்கங்கள் நிரப்புகின்றன. இது பெண்ணியத்திலும் சாத்தியப்படுகிறது. தலித்தியத்திற்கும் பொருந்துகிறது. பிரபஞ்சம் ஆணினுடையது என்ற குரல் மாறி பிரபஞ்சத்தை அணிந்துகொள்ளப் பெண்ணும் தயாராகிறாள். இதில் கரையொதுங்கிய கழிவுகள், அழுக்குகள் அழிக்கப்படுதல் சாத்தியமாகலாம் என்பதை லீனாவின் பெண்மொழி உருவாக்கமாகக் கொள்ள முடிகிறது.

## என் உடல் அலாதியனது

**என் உடல்**
**அலாதியானது**
**தொடுதலில் மட்டுமே**
**ரூபம் பெறுகின்றது**
**மூச்சை உண்ட பைகளென**
**திரண்டு**

கழிந்து
வழிந்து
கிடப்பது
தழுவலில் மட்டுமே
பிரக்ஞை பெறுகிறது
பரிவை உணரும் வரை
உயிரை உணர மறுக்கின்றது
என் உடல்
அலாதியானது (ஒற்றையிலையென, ப.44.)

## என் நிர்மலம்

ஒரு
மழைத்த நாளில்
சத்தியமான வார்த்தை போல்
நீண்டு
கிடக்கிறேன்
உடைதுறந்து
பள்ளத்தாக்கின்
உரத்தமௌனம்
உருளுகிறது
வளைவுகளில்
சலனமற்ற பொய்கையின்
தணலாய்
என் நிர்மலம்
கானலின் வேட்கையொடு
காற்றைக் கவ்வின
அவயவங்கள்
மெல்லப்
பீடித்த
கிலியில்
உடலைச்
சுருட்ட முயன்றது
உயிர்
அணிந்து கொண்டேன்
பிரபஞ்சத்தை (மேலது, பக். 62-63.)

பெண்-கவிதைமொழி உடலும் உடலின் உபாதைகளும் வேட்கையும் சார்ந்தது என்பார் ஜூலியா கிறிஸ்தவா. 'இது ஒரே

சமயத்தில் மறுப்பும் படைப்புமாகிறது. அதுவரை பெண்ணுடலை வெறும் வஸ்துவாகச் சுட்டிய சொற்கள் பெண்ணால் உச்சரிக்கப்படும் போது உடலைக் கடந்த இயக்கமாகின்றன. லீனாவின் கவிதைகளில் உடலைக் குறிப்பிடும் சொற்கள் அதைக் கடந்து பொருள்படுகின்றன. 'என் உடல் அலாதியானது', 'என் நிர்மலம்' ஆகிய கவிதைகளை இந்த நோக்கில் பார்க்க விரும்பிய மாலன், "இந்த இரு கவிதைகளும் தமிழ்க் கவிதையின் புதுப்போக்குக்குப் பங்களிப்பவை" **(ஒற்றையிலையென, முன்னுரை, ப. 13.)**

என்று கூறியதையும் குறித்துக் கொள்ளல் அவசியமாகிறது.

பெண் தன்னில் பலவற்றை இழந்துதான் இந்த வாழ்க்கையைச் சுமக்கிறாள். அவளின் சுயம் அழிந்து, அவளுக்கான முகமும் அழிந்த நிலையில்தான் அவள் வாழ்வு அமைந்துள்ளது. ஏனெனில் ஆணின் விருப்பப்படியே இங்கு அனைத்தும் நடக்கிறது. தன்னைப் பற்றிய திறனும் அவளுக்கு அறிய வாய்ப்பில்லை. எஞ்சியிருப்பது அடிமனதில் கனன்று எரிகின்ற தழல்தான், அத்துடன் நீ இல்லாத நேரங்களில் குற்ற உணர்வின்றிக் கட்டிலின்மேல் தான் கழற்றி வைக்கும் தாலியுந்தான் என்கிறார் (சுயம், ப. 30).

தாலிக்குச் சமூகம் தரும் புனிதமும் மதிப்பும் இங்கு பொருளற்றுப் போகிறது. ஒருவரையொருவர் மதித்து, ஒருவர் மீது ஒருவர் எந்த ஆதிக்கமும் இல்லாமல் காட்டுகிற அன்பில்தான் ஆண், பெண் உறவின் உயிர்ப்பு உள்ளதே தவிர, ஆண் கட்டிய தாலிக்கயிற்றில் ஏதுமில்லை. மரபு இங்கு உடைக்கப்படுகிறது. அந்த நிகழ்வில் பெண்மொழி பிறக்கிறது.

வயல்வெளி, வீட்டுச்சூழல், ஏன் கிராமத்தின் வேர்களைக் கிளறிப் பார்க்கும் பெண்ணாய்த் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர் இளம்பிறை. பெண்மீதான மரபுத் தளைகளிலிருந்து விடுபட்டு இயல்பாகப் பெண் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இவருடைய கவிதையின் குரலாகும். பெண்ணைச் சுற்றி நடக்கும் அன்றாட நிகழ்வுகளை மாற்றுப்பார்வைக்குட்படுத்துகிறார்.

'முரண்' என்ற கவிதை,

> **நிஜமாய் இருக்கிறேன்**
> **முரணானவள் என**
> **முகம் சுழிக்கிறார்கள்** (மௌனக் கூடு, ப. 4.)

என்ற அங்கலாய்ப்பில் மாக்கோலம் போடுவதையும் மருதாணி இட்டுக்

கொள்வதையும், கோயிலுக்குப் போவதையும் வாடிக்கையாகக் கொண்ட பெண்ணின் இருப்பு பதிவாயிருக்கிறது. இதற்குப் பழக்கப்படுவதால் பெண் 'நல்லபெண்' ஆகிறாள் என்ற பிம்பத்தைக் கட்டுடைக்கிறார். அதாவது,

அடங்காப்பிடாரி யென
ஆசைதீரக் கத்தட்டும்
அதற்குமேல் என்னவுண்டோ
எல்லாமே சொல்லட்டும்
நான்,
நிஜமாகத்தானிருப்பேன் (மௌனக் கூடு, ப. 4.)

என்று பிரகடனம் செய்கிறபோது பெண்மீதான மாற்றுக் கலாச்சாரம் பதிவாவதை அறிந்து கொள்ளலாம்.

கருவைச் சுமக்கும் ஒவ்வொரு பெண்ணும் அவரவர் உடலின் தன்மைக்கு ஏற்ப உடல் ரீதியான வலிகளைத் தாங்கிக் குழந்தையைப் பெற்றெடுப்பாள். அந்த உணர்வுகளை, வலிகளை ஆண் எழுதலாம். சிறப்பாகவும் எழுதலாம். தன்னை ஒரு பெண்ணாக எண்ணி அல்லது கற்பனை செய்துதான் எழுத முடியும். ஆனால் பெண் யாராகவும் ஆகாமல் அவளாகவே இருந்து எழுதுவதால் அது உண்மையாகவும் யதார்த்தமாகவும் அமைந்துவிடுகிறது. நாயகி, நாயகன் மனோபாவத்தோடு எழுதிய ஆழ்வார்களும் அடியார்களும் மனதை உருகச் செய்யும்படியாகவே எழுதியுள்ளார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் ஆண்டாள் எழுதிய பாடல்கள் மிகவும் இயல்பானதாக ஒரு பெண்ணின் மனவுணர்வுகளைக் காட்டுவதாக அமைந்துள்ளன என்பதற்கு மறுகருத்து இருக்க இயலாது.

கரு சுமக்கும் பெண்ணின் அவஸ்தைகளை உடல் ரீதியான வலிகளைச் சோர்வை வெண்ணிலாவின் கவிதை வெளிப்படுத்துவது, நடைமுறையில் ஒரு பெண் எப்படி உணர்கிறாள் என்பதை உணர்த்துகிறது.

நின்றால்
உட்காரச் சொல்கிறது
உட்கார்ந்தால்
வயிறு மடிந்து
சாயச் சொல்கிறது
சாய்ந்து கொள்ள நினைக்கையில்
காணாமல் போகிறது உன் தோள்
நின்றும் உட்கார்ந்தும் சாய்ந்தும்

சரிப்படாத தருணங்களை
நடக்கத் தேர்ந்தெடுக்கிறேன்
எடுத்து வைத்தது எட்டடியாகக் கூட இருக்காது
நெற்றியில் வியர்வை
ஒற்றி எடுக்க எங்கே உன் உதடுகள்
யாரோடோ பேச நினைக்கையில்
உள்ளுக்குள்
காலால் உதைத்துக் கொண்டு
பேச அழைக்கிறது குழந்தை
தடவிக் கொடுக்க எங்கே உன் கைகள்
எப்படி கழியும் விநாடிகள்
வேதனையில் இதயம் வெறுமை சுமக்க
'உர்ருனு உட்காராதே என
அறிவுரை கூறுபவையா உன் வார்த்தைகள்
சாப்பிடும் சோறு
பேசும் பேச்சு
சிரிக்கும் சிரிப்பு
எல்லாம் குழந்தைக்காக என
கரு சுமந்து . . .
நாளை
உன்னோடு வண்டியில்
முன் நின்று சிரித்துவர
உன் இனிஷியல் போட்டுக்கொள்ள
உனக்கு பிள்ளை பெற்றுத் தருவேன்
நான்கைந்து மணி நேரம்
ரத்த வெள்ளத்தில் மிதந்து
கேட்டால் கிடைக்கும் தான்
உன் முத்தம்
உன் அரவணைப்பு
உன் ஆறுதல்
பச்சப்புள்ள கேட்டா
பாலூட்டுகிறோம்
கரு சுமந்து
குழந்தைத் தவம் இருக்கும் பெண்களை
சுமக்க
எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை

(நீரில் அலையும் முகம், பக். 34–35.)

வெண்ணிலாவின் இறுதிவரிகள் நமக்குப் பல்வேறு பரிமாணங்களோடு பல்வேறு அர்த்தங்களைத் தந்து நிற்கின்றன. ஆண் அதிகாரம் பெண்ணைக் கீழ்ப்படுத்திய நிலை புரட்டிப் போடப்படுகிறது. உன்னையே பூமிக்குத் தரக்கூடியவள் பெண். . . இப்படிப் பல தோன்றுகின்றன மனதில்.

வாழ்நாள் முழுவதும் / இல்லை இணைந்து வாழுங்காலம் வரையில் பெண்ணோடு உறவு கொள்ளும்போது உடல்மட்டுமன்றி மனமும் ஒன்றுபட வேண்டும். அப்படியின்றி உணர்வுகளற்ற ஏதோ ஒரு நிகழ்வாக மட்டும் ஏன் பலருடைய வாழ்வில் அது ஆகிவிடுகிறது.

ஒரு வித அங்கலாய்ப்போடு வெண்ணிலா இதை வெளிப்படுத்துகிறார்.

**முத்தத்தில் துவங்கி**
**முத்தத்தில் முடியும்**
**தாம்பத்ய உறவு**
**எத்தனை பேருக்கு வாய்க்கிறது?**
**யாரும் சொல்லாமலேயே**
**கற்றுக் கொள்கிறார்கள்**
**அலுத்துத் தூங்குவதற்கான**
**உடற்பயிற்சியாக** **(மேலது, ப. 28.)**

திருமணம் என்ற நிகழ்வு நிறுவனமாகிப் போனதில் ஆணின் விருப்ப நிறைவேறலும் பெண்ணின் ஒடுக்குமுறையும் ஆணாதிக்க அதிகாரக் கட்டமைப்பில் காலம் காலமாக இருந்து வந்ததைச் சிதைக்கிறது வெண்ணிலாவின் கவிதை.

சில நேரங்களில் நமது நினைவுகள் கற்பனையாகவே நின்று விடுவதுண்டு. சில, யதார்த்த வாழ்வின் நினைவுகளில் சாட்சியாகக் காட்சியாவதும் உண்டு. ஆனால் உள்ளத்தின் தவிப்புகள், ஏக்கங்கள், தனிமையின் ஆழ்ந்த துயரம் ஆகியவை நினைவுகளாய் நின்றால் மட்டும் நிறைவு தருவதில்லை. அவற்றை அந்தத் தனிமையின் கனத்தைத் தாங்க முடியாமல் பிரிவின் தகிப்பைப் பொறுக்க முடியாமல் தடுமாறிப் போகாமல் இருக்க அவனின் நினைவுகள் உதவினாலும் மனம் என்னவோ நினைவுகளால் மட்டும் நிறைந்து விடுவதில்லை. பார்ப்பதால், தொடுதலால் - அருகாமையின் இருப்பால் மட்டுமே மனம் மகிழ்கிறது. இப்படி தன் உள்ளத்து உணர்வுகளை, தனிமையை, ஏக்கத்தை ஒரு பெண் வெளியிடுவது பண்பாட்டினைச் சிதைக்கும். அவள் புதுப்பானையில் கசியும் நீர்போலத்தான் தன் உணர்வுகளைக் காட்ட வேண்டுமென்ற புனைவினை ஏற்படுத்திய ஆணின் அதிகாரம்

இங்கு முற்றுமாய்க் கட்டுடைக்கப்படுகிறது. பெண்ணின் உணர்வுகள்/ தவிப்புகள் இயல்பாய் வெளிப்படும்போது ஆண் மொழி சிதறுண்டு பெண் மொழி எந்த ஆரவாரமின்றியும் புனைவுமின்றியும் வெளிப்படுவதை சல்மாவின் 'நினைவில் ஒரு பயணம்' வெளிப்படுத்துகிறது.

உனது பிரியங்களின்
அருகாமையில் அமைதியுறும்
எனது பெரும் துயரங்கள்
நிலவு இரக்கமற்று பிரகாசிக்கும்
இந்த இரவு
இன்று உருவாக்கும் தனிமை
எப்போதை விடவும் கடுமையானது
இலக்கை நோக்கிப் பாயும் நதியாய்ப்
பெருகும் எனது தவிப்புகள்
போய்ச் சேரும் உன் நினைவுகளுக்கு
இருந்தும்
உன் அருகாமை வேண்டிப்பெருகும்
தாபம் கரைக்க
வெறும் நினைவுகள் மட்டும்
போதுமானதாயில்லை. (மேலது, பக். 28–29.)

பெண்கள் தங்கள் தனிமையை வெளிப்படுத்துவதில்லை. பொதுவாகத் தனிமையுணர்வு வெளிப்படும் போது புலம்பலாக மாறிவிடும் என்பர். புலம்பல் எழுத்தில் வழக்கப்படவில்லையாயினும் பெண்களுக்குப் புலம்புவது என்பது கைவந்த கலையாகிறது என்ற கருத்தும் சமூகத்தில் இடம் பெற்றுள்ளது. தனிமை துன்பத்தைத் தருவது பலரும் அறிந்த ஒன்றுதான். ஆனால் அந்தத் தனிமையே பேரின்பம் தருவதாக வத்ஸலாவின் கவிதை (சுயம், ப78) விளக்குகிற து.

புல்தரையில் அமர்ந்து ஆலங்கிளிகளின் அரவம் கேட்கும்போது, அணில்கள் மரத்தைச் சுற்றிச் சுற்றி வருவதை ரசிக்கும்போது, அபஸ்வரம் ஒலித்தாலும் பிடித்த பாட்டை அட்டகாசமாகப் பாடும்போது, நடுநிசியில் நெஞ்சில் கவிதை எழுந்த உடனே மின்விளக்கைப் போட்டு எழுதத் துவங்கும்போது, காலையிருட்டில் கரு நீலவானத்தில் எஞ்சிய வைரங்களைக் கணக்கிடும்போது, மதியம்வரை தூங்கும்போது, ஒரேநாளில் குண்டு புத்தகத்தைப் படித்து முடிக்கும்போது, அகம் அதிர பாட்டை வைக்கும்போது, கடல் அலையைக் கண்டமரும் போது, நிசப்தத்தின் அழகை உணரும் போது தனிமை பேரின்பம் தரும் என்கிறார் வத்ஸலா.

ஒரு பெண்ணின் மனதில் ஏற்படும் சின்ன சின்ன ரசனைகள். இவற்றையெல்லாம் ரசிக்க, அவற்றை நினைத்துப் பார்த்து எழுத்தில் வடிக்க அந்தத் தனிமை கிடைப்பது என்பது அருமை. கிடைத்தால் அந்தத் தனிமை அவளுடைய பல ரசனைகளுக்கும் வாய்ப்பளிப்பதால், அந்தச் சுதந்திரம் அவள் தனிமையை இன்பம் தருவதாக மாற்றிவிடும், தனித்து இருக்கும் தனிமை நேரத்திலும் பெண்ணுக்கு விருப்பமானதைச் செய்ய இயலாத ஒரு சூழலை விளக்குகிறது.

பெண்ணியம் என்பது பெண்ணின் உடல் சார்ந்தது அல்ல; உடல்பற்றிய பட்டுணர்வைச் சார்ந்தது. உடல் சமுதாயத்தில் ஆக்கிரமிக்கும் இடத்தைச் சார்ந்தது. காலம், சரித்திரம் இவை தொடக்கப்படாத உடல் இல்லை'.

ஹெலன் சீக்ஸீஸ் போன்றவர்கள் உடலில் ஊறும் ரசங்களால் எழுதுவது - பால் - மாதவிடாய்க் குருதி போன்றவை என்று கூறும்போது அதை ஓர் எதிர்வினைச் செயலாகவே நோக்க வேண்டும். அதாவது, 'இதுதான் பெண் என்று நீ என்னைக் குறுக்கினால் அதையே ஒரு பிரம்மாண்டமாக்கிக் காட்டுகிறேன் பார்' என்று கூறும் செயலாகப் பார்க்கலாம் என்பார் அம்பை (பனிக்குடம், 3, மார்ச்-ஏப்ரல், 2004, ப. 17)

பெண்ணுக்கான சில உடல்ரீதியான வலிகளை ஆண்தன் மொழியில் வெளியிடுவதை விடப் பெண் தனக்கான வலிகளைப்பற்றி எழுதுகிறபோது அது யதார்த்தமாகவும் இயல்பாகவும் அழுத்தமாகவும் பதிவாகும்போது பெண்ணுக்கான ஒரு மொழி வீரியத்தோடு பிறக்கிறது.

மாதவிலக்கு நேரும்போது ஒரு பெண்ணிற்கு எத்தனையெத்தனை அவஸ்தைகள் ஏற்படுகின்றன. மறு உற்பத்தியோடு தொடர்புகொண்ட விஷயம் அது! ஆனால் அசிங்கம் என்றும் ஆபாசம் என்றும் கூறி அதையெல்லாம் எழுதக்கூடாது பெண் என்று கூறுவது ஒருவிதத்தில் வன்முறைதானே? ஆதிக்க மனோபாவத்தோடு அதிகாரத்தைப் பல்லாண்டு காலமாய்க் கையில் எடுத்துக்கொண்டு பெண்ணுக்கான புனைவுகளை உண்டாக்கியதோடு அவற்றைக் கட்டிக் காத்த சமுதாயம் இது.

அவன் தந்த புனைவுகளிலேயே தன்னையும் இருத்திக் கொண்டு தன் சுயத்தை முற்றுமாகத் தொலைத்து விட்ட பெண்களும் தங்களைப்பற்றி எழுதத் தயங்குவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ஆனால் காலம் பல மாற்றங்களை அடைந்துள்ளது. பெண்களும் தங்களை உணரத் தலைப்பட்டுள்ளனர். தங்களுக்கான வலிகள், வேதனைகள், தேடல்கள் எனச் சுதந்திரமாக இயங்க

ஆரம்பித்துள்ளனர். அதனால் பல பெண்கவிஞர்கள் இதுவரை சொல்லாத சேதிகளைச் சொல்லத் துவங்கியுள்ளனர்.

பெண்ணால் மட்டுமே உணரமுடிந்த உடல் ரீதியான வலியையும் மனோரீதியாக அது ஏற்படுத்தும் பாதிப்புகளையும் வெண்ணிலாவும் அரங்க மல்லிகாவும் தங்கள் கவிதையில் சித்திரிக்கும்போது மொழி புதியதாய் உருவெடுத்துப் பெண்மொழியாகிறது.

ஈரப்பிசு பிசுப்போடு உட்கார்ந்து இருப்பதும் ரத்தப் பெருக்கோடு உறங்க வேண்டியிருப்பதும் பெரும் அவஸ்தை, ஆண்கள் மனதை மட்டும் தூக்கிக்கொண்டு அலைகிறார்கள். ஆனால் பெண்களோ இவற்றை இந்தக் கட்டுக்களையெல்லாம் தவிர்த்து, இந்த உடம்பை விட முடிவதில்லை. தளர்ந்து போகும்போது தாங்க மடி வேண்டும். அடிவயிற்றில் பிரபஞ்ச பூதத்தின் மூலதார அவஸ்தை, பிறப்பின் வாசம் உடலெங்கும் பரவி நிற்கிறது. ரத்தம் தோய்ந்த ஆடைகளோடும் நடுங்கும் கால்களோடும் சாய்ந்து கொள்ளத் தவிக்கிறோம். அம்மா கூட 'தொடாதே, தள்ளி நில்' என்கிறாள்.

பெண்ணுக்கு மட்டுமே இந்த அவஸ்தைகள்.

**எறும்புக்கும் நாய்க்கும்**
**எப்படியோ இந்த அவஸ்தை**

*(நீரில் அலையும் முகம், ப. 18.)*

இதே விஷயம் அரங்கமல்லிகாவினாலும் கவிதையாக் கப்படுகிறது. கவிதையில் உடல் வலி படிமங்களாக வெளிப்பட்டுள்ளன. இதுவரை பெண்ணை ஆண் பார்த்த பார்வையினின்றும் முற்றுமாக மாறியுள்ளதை இங்கு நோக்கலாம். பெண்ணின் அழகும் அவளின் பல்வேறு அம்சங்களின் வருணனையும் தங்களுக்கான இடத்தை இழந்து ஆணிய மொழியைப் புறக்கணித்துப் பெண் மொழியாக வெளிப்படும் தன்மையை உணரலாம்.

தொப்புளைச் சுற்றி இயந்திர ஓட்டத்தில் சிக்குண்டு நசுங்கும் அரிசியாய் வலி. உதிரப் பெருக்கில் கண்கள் மயங்கி விழி சொருகும் சோர்வு, வலியினால் உட்கார முடியாமல் வளைந்த முதுகு, தொடையில் வெடிப்பு, உரசலில் எரிச்சல், உதிரவாடையிலும் மாதவிடாய் நாற்றத்திலும் முகம் எண்கோண முகமாயிற்று. இத்தனை அவஸ்தைகளையும் தாங்கிக் கொண்டு அன்றாடக் கடமைகளையும் செய்ய வேண்டும்.

கணவனுக்குச் சாப்பாடு, குழந்தைக்குப் பால், மாமியார்க்கு மாத்திரை, எல்லாம் முடித்த பின் அலுவலகத்தில் அரிதார பூச்சில் அசதி மறைத்து மேலாளரிடம் புன்னகை, உதிர அதிர்வின் இழப்பில் முத்துமுத்தாய் நெற்றியில் வியர்வை... இவை ஒரு பெண்ணின் வாழ்வு அனுபவம். இரண்டு கரங்களைக் கொண்டு அணைத்துத் தடவி வருடும் இதயம் வேண்டி நிற்கும் பெண்ணைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், வலி உணரும் மனிதனாக நீ மாறுவது எப்போது? என்று கேட்பது ஆண் ஆதிக்கத்திலிருந்து விடுதலையாகி மனிதனாகப் புத்துயிர் பெறுவது எப்போது? சக மனுஷியாகப் பெண்ணை மதிப்பது எப்போது? என்ற கேள்விகளையே மேலும் மேலும் உள்ளத்தில் எழச் செய்கின்றன.

பெண் ஆற்றலை, ஆளுமையைச் சமூக மதிப்போடு பதிவு செய்த எழுத்தாளர்களில் க்ருஷாங்கினியும் குறிப்பிடத்தக்கவர். பெண்ணிற்கான மன அழுத்தங்களை மடைமாற்றம் செய்யக்கூடிய கவிஞர். இவருடைய கவிதைகளில் ஆண்மன ஆக்கிரமிப்புகள் கவிதையாகியுள்ளன. ஓர் இயந்திரமாகப் பெண் இயங்குவது கவிதைக்கான கருவாகிறது. இந்த இயந்திரத் தனமான பெண்கள் வாழ்வின் சோகத்தை 'பெண்' கவிதையில் (கானல் சதுரம், ப.24) கதவு என்ற குறியீட்டின் மூலம் பதிவு செய்துள்ளார். பெண்ணின் வாழ்க்கை கதவாக இருக்கிறது என அலுத்துக் கொள்வதோடு சுயம் அழிந்து போகிறது என மனம் குமுறும் குரலையும் கேட்க முடிகிறது.

*(கானல் சதுரம், ப. 24.)*

அதிகாரத்தின் வடிவம் 'அடி'யாக- வன்முறையாக உருவெடுக்கிறது. நூற்றாண்டு காலமாகச் சாட்டைகளாகவும் ஈட்டிகளாகவும் கத்திகளாகவும் அந்த அடியின் வன்முறை வடிவெடுக்கின்றது. அது ஆணின் பலத்தைக் காட்டுவதோடு பெண்ணின் பலவீனத்தையும் காட்டுகிறது. இப்படித் தொடர்ந்து விழும் அடி மீண்டும் கூராகி எதிர்த்துக் குத்தவோ, தைக்கவோ, எதிர்வினையாற்றும் கலகத்தைத் தொடங்கும் காரணியாகும். ஒரு வேளை உன் மொழி அதுவாயின் என் மொழியும் மாற்றுருப் பெறும்; காலத்தைக் கணிக்கும் என உமாமகேஸ்வரி 'அடி' கவிதையில் (வெறும் பொழுது, ப.114) கூறியுள்ளார்.

தொடல்களை இனிமையற்றதாக்கும்
அடிகளாலான வலி
நம் தூரம் நீட்டி
என்னை விடுவிக்கும் எதிலிருந்தாவது.

**ஒரு வேளை உன்மொழி**
**அதுவென்றால்**
**வேறெப்படிப் பேசுவாய் நீ?**
**ஆகவே அடி!** *(வெறும் பொழுது, ப. 14.)*

அடிகளால் ஆன வலியானது விடுதலைக்கு வழி வகுக்கும் என்ற பொருளில் தன்னை விடுவிக்கும் என்கிறார். ஆணின் அதிகாரத்திற்கு அடங்கியிருந்த பெண் இனியும் மௌனமாய் அவனுடைய வன்முறைக்கு உடன்படாமல் ஆண் மொழியிலேயே அவனை எதிர்கொள்வாள். அடியின் தழும்புகள் கலகம் துவக்கக் காரணமாகும். இங்கு 'அடி' அனைத்து விதமான வன்முறைகளுக்கும் குறியீடாகிறது.

"வழக்கிலுள்ள கலாச்சாரமும் பழக்கத்திலுள்ள மொழியும் ஆணுலகை மையமாகக் கொண்டவை. பெண் தனது மனதையும் சிந்தனையையும் முன்னிறுத்திய அனுபவ உலகைப் படைக்கும்போது அந்த மொழி தவிர்க்க இயலாத வகையில் எதிர்ப்பும் கலாச்சார மறுப்புமாகிறது. (மாலன், ஒற்றையிலையென, முன்னுரை, ப.12). மாமூலான மொழிதலுக்கும் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கும் சவாலான ஒன்றாக 'என் தந்தையை. . .' என்ற கவிதையை முன் வைக்கிறார் மாலன்.

லீனா மணிமேகலை, தந்தை-மகன் உறவில் பொதிந்துள்ள அதிகாரப் பண்பாட்டைச் சிதைக்கிறார். தந்தை இறந்து போனால் மகன்தான் கொள்ளி வைக்கவேண்டும் என்ற மரபு தேவையில்லை. சுடுகாடு வரை பெண் பயணம் செய்தால் பயம் கொள்வாள். பெண் இடுகாட்டிற்குச் சென்று பிணத்திற்குத் தீ மூட்டுவதற்கும் பழக்கப்படாததால் அவள் ஓரங்கட்டப்படுகிறாள். தாயாயினும் தந்தையாயினும் ஏன் கணவனாயினும் கூடப் பிணத்தை அடக்கம் செய்வதோ தீ மூட்டுவதோ கூட ஆணின் அதிகாரத்திற்குட் பட்டதாகிறது. தந்தைக்கும் மகனுக்குமான உறவாக்கப்படுகிறது. இறுதிச் சடங்கைக் கூடப் பெண் செய்யக் கூடாதென்ற நிலை. இதை மீறி, லீனா மணிமேகலையின் 'என் தந்தையை' கவிதை தனக்கான இருப்பைத் தேடிக் கொள்கிறது.

**என் தந்தையை என்னிடம் விட்டுவிடுங்கள்**
**நான் மரணத்திடம் பேசிக் கொள்கிறேன்**
**நீங்கள் அதைவிடக் கொடியவர்கள்**
*(ஒற்றையிலையென, ப. 19.)*

என்று கூறும்போது சாவித்திரி எமனுடன் போராடிய தொன்மம் கட்டவிழ்கிறது. மரணத்தினும் கொடியவர்கள் ஆண்கள் என்பதில்

உள்ள கோபமும் எரிச்சலும் ஆண் மையப் புனைவுகளைக் கலைவதில் எழும் வேட்கை மூலம் பெண்மொழி உயிர்த்தெழுகிறது. இது ஆணின் பார்வையை, செயல்பாட்டை அதிரச் செய்கிறது. இதுவரையில் ஆண்கருத்தியல்களை உள்வாங்கிக்கெண்ட சமூகக்கலாச் சார முகமூடியைக் கழற்றவேண்டிய தேவையை வலியுறுத்துகிறது.

இயற்கையைக் கவிஞர்கள் பலரும் ரசனையோடு எழுதுவார்கள். குறிப்பாகப் பெண் கவிஞர்கள் இயற்கையைக் கருவியாகக் கொண்டு பாடுவது குறைவாகும். ஆனால் வைகைச் செல்வி சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதில் பெண்களின் பங்கு அதிகம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

> **மரங்களை நான் நேசிக்கிறேன்**
> **மனிதர்களைக் காட்டிலும்**

என்று 'மரங்களே - ஓ மரங்களே' என்ற கவிதையில் தன் பிரியத்தை வெளிப்படுத்தும் கவிதையின் இறுதியில்,

> **எத்தனை எத்தனை மரங்கள்**
> **என்னை நேசிக்கின்றன'.**
> **அதனால்தான் சொல்கிறேன்**
> **மரங்களை வெட்டாதீர்'**
> **வெட்டுகையில்—**
> **என் இதயத் துடிப்பு**
> **மெல்ல மெல்லக் குறையும்** *(அம்மி, ப. 81.)*

என்று கூறுகையில் வைகைச் செல்வியின் இதயத் துடிப்பு மட்டுமா குறையும்? இந்தச் சமூகத்தின் இதயத் துடிப்புமல்லவா குறைந்து போகும்.

காடு, மரங்களையும் செடிகளையும் பறவைகளையும் விலங்குகளையும் அரவணைத்து அவற்றுக்கான இடமாக இருப்பது. பழங்குடியினர் வாழ்க்கைக்கு ஆதாரமாக இருப்பது. எல்லா உயிரினங்களுக்கும் உயிரூட்டும் காட்டை மனிதன் அழிக்கிறான். ஆனால் காடு அழியும்போது இயற்கையும் அழியும்; வளமும் வற்றிப்போகும் அபாயத்தை அவன் உணரவில்லை. காடுகள் அழிக்கப்படுவதால் பருவங்கள் மாறி மழை பொய்த்துப் போகும் நிலையை நாம் இன்றைய வாழ்க்கையில் நிதரிசனமாகக் கண்டு கொண்டிருக்கிறோம். மேலும் இயற்கையும் பெண்ணும் ஒன்று என்ற சிந்தனை கூட இயற்கை உற்பத்தியை வைத்தே கணக்கிடப்படுகிறது. இதனால் காட்டைப் பாதுகாக்க வேண்டியவள் பெண் என்று

கூறுகிறார் வைகைச் செல்வி. "மரங்களை நேசிக்கிறேன், மனிதர்களைக் காட்டிலும்" என்று கூறும்போது மரங்களால் அவள் பெறும் மகிழ்ச்சியும் வெட்டுவதினால் அவள் படும் வதையும் எண்ணிப்பார்க்க நம்மைத் தூண்டுகிறது.

> 'மெல்லச் சாகுமோ மலைக்காடுகளும்' என்ற கவிதையில்
> கருவில் பெண்ணை அழிப்போர்க்குக்
> காட்டை அழித்தல் பெரிதாமோ? (அம்மி, ப. 30.)

என்ற வினாவில் பற்பல அர்த்தங்கள் வெளிப்படுகின்றன.

ஈழத்து நவீன அரசியல் சமூக வரலாற்றில் மிக முக்கியமான காலக்கட்டத்தில் பல பெண் கவிஞர்கள் எழுதலாயினர். எண்பதுகளில் ஈழத்துத் தமிழர் வாழ்வு பல்வேறு நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் கருத்துகளையும் அனுபவங்களையும் சந்தித்தது. குறிப்பாக இளைய தலைமுறைப் பெண்களிடையே விழிப்புணர்ச்சியும் புதிய ஆர்வமும் ஏற்பட்டன. அவர்கள் அரசியல் இயக்கங்களைச் சார்ந்தும் சுயேச்சையாகவும் பெண்கள் அமைப்புகளை ஏற்படுத்தித் தீவிரமாகச் செயல்பட்டார்கள். பல்வேறு அரசியல் அனுபவங்களையும் பெற்றனர். அப்போது தோன்றிய தேசிய இயக்கத்திலும் பெண்கள் பெருமளவிற்குப் பங்கு பெற்றனர். பெண்கள் அணிகளும் தேசியவாதக் குழுக்களால் அமைக்கப்பட்டன. பெண்கள் இராணுவ நடவடிக்கைகளிலும் பங்குகொண்டனர். எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து பெண் கவிஞர்கள் தங்கள் நிலத்தின் விடுதலைக்கான போர்க்குரலுடன் இலக்கிய உலகில் தங்களுக்கான இருப்பை, சமூக அந்தஸ்தை, சுதந்திரத்தை இன்னும் பெண்களுக்கு எதிரான சகலவிதமான ஒடுக்குமுறைகள் குறித்தும் தீவிரமாக வெளிப்படுத்தலாயினர். பெண்களின் கலை, இலக்கிய வெளிப்பாடுகள் புதிய பரிமாணத்தை இலக்கியத்திற்குத் தந்தன. பெண்கள் தம் கண்ணோட்டத்தில் எழுதும் நிலை உருவாகியது. அதிகார வர்க்கத்தின் ஆணவங்களுக்கு எதிரான கோபங்களும் வெடித்துக் கிளம்பும் அழுகைகளும் தங்களுக்கான மொழியைக் கண்டறியும் தேடலும் தீவிரமாகியது. அதனால் ஏற்கனவே இருந்த மொழிக் கட்டமைப்பை உடைத்தும் சிதைத்தும் தமக்கான ஒரு புதிய மொழியை உருவாக்குவதில் முனைந்து நின்றனர். அதன் விளைவாக முன்பு சொல்லாத சேதிகள் சொல்லப்பட்டன; மௌனக் கூடுகள் உடைந்தன; அவர்கள் பார்வை விரிந்தது, ஆழமானது; பறத்தல் அவர்களின் சுதந்திரம் என்ற பிரக்ஞை பெற்றனர். மௌனத்தின் அதிர்வு உரத்துப் பேசும் பெண்மொழியானது.

பொதுவாக இலக்கியத்தில் பெண்கள் பிரச்சனைகளாகப் பேசப்பட்டு வந்தவைகளைக் கடந்து புதிய நோக்கில் புதிய பரிமாணத்தோடு பேசத் தொடங்கினர். ஆண், பெண் சமத்துவமற்ற நிலையும் அதனால் பெண்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் ஆணாதிக்கமும் பெண்ணொடுக்குமுறையும் இலக்கிய வடிவம் பெற்றன.

ஈழத்தின் கடந்த இருபத்தாண்டுகளில் நடந்த நிகழ்வுகள் பெண்களின் உணர்திறனைப் பெரிதும் விசாலப்படுத்தின. அவர்கள் பார்வை விரிந்தது; ஆழமாயிற்று. அவர்களின் சுயதேடலும் அவர்களுக்குள் அமிழ்ந்து விடாமல் உலகப்பார்வையாக மாற்றம் பெற்றது.

பொதுவாகத் தமிழில் பெண்களது எழுத்துகள் பற்றி யாரும் பெரிதாகக் கவலைப்படுவதில்லை. அக்கறை காட்டுவதில்லை. அங்கீகாரமும் செய்வதில்லை. அப்படி யாரேனும் கூறப் புகுந்தாலும் அவற்றைப் பற்றிய ஒருவிதமான புறக்கணிப்பும், அலட்சிய மனோபாவமும் கிண்டலுமான விமர்சனமுமே வாடிக்கையாயிற்று. ஒரு சிலர் விலக்காக இருக்கலாம்.

“இத்தகைய புறக்கணிப்புக்கு ஆளாவதற்குக் காரணம் பெண்களின் பலவீனமன்று. படிமங்களைப் புதியதாய் அமைக்கவும் வடிவங்களைப் புதியதாய் வளர்க்கவும் முடியாத (தயக்கம்) பலவீனம் பெண்களின் இயற்கையைச் சார்ந்தது அல்ல; இது பெண்களின் நடவடிக்கைகளை வடிவமைப்பதில் பெரும்பங்கு கொள்ளும் கலாசார அமைப்பிலிருந்து உருவாவது, பெண்களின் அனுபவங்களும் சிந்தனைகளும் அவற்றின் வெளிப்பாடுகளும் குறுக்கப்பட்டும் இறுக்கப்பட்டும் இருக்கும்போது அந்த மனத்தடையையும் அதனுடன் தொடர்பான மொழித்தடையையும் மீறுவது ஓர் அசாதாரண பலத்தைச் சார்ந்ததாகும்” என்ற சித்திரலேகா மௌன குருவின் கருத்தை இங்கு நினைவு கூரலாம். (சித்ரலேகா, சிவரமணி கவிதைகள், பதிப்புரை, ப. xxix).

அத்தகைய அசாதாரண பலத்தைப் பெற்ற சில ஈழத்துப் பெண் கவிஞர்கள் கலை இலக்கியப் பரப்பில் எண்பதுகளிலும் அதற்குப் பின்னரும் காலடி எடுத்து வைத்தனர். அவர்கள் தம் சுவடுகளை அழுத்தமாகப் பதித்த போது பெண்மொழியும் வீரியத்தோடு தன் இருப்பைக்கண்டது.

அவர்களுள் தனது இருபத்தி மூன்றாவது வயதிலேயே தன்னை மாய்த்துக் கொண்ட சிவரமணி சிறந்த கவிஞர்களுள் கவனிக்கப்பட வேண்டியவர். அவர்,

எனது கைக்கெட்டியவரை
எனது அடையாளங்கள் யாவற்றையும்
அழித்து விட்டேன்

என்று தன் இறுதிநேரக் குறிப்பில் எழுதிவிட்டுத் தன் முடிவைத் தேடிக் கொண்டார்.

மீண்டும் மீண்டும் போர்நிலைமை. தேசிய இயக்கங்களின் - தேசிய இயக்கங்கள் என்று கூறிக் கொண்டவைகளின் எதேச்சதிகாரம் பல்வேறு வன்முறைகள் ஆகியவற்றால் பல அமைப்புகள் தங்கள் ஆர்வத்தை இழந்து, செயல்பாடுகளைக் குறைத்துக் கொண்டன. மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லாமற் போனதும் பொதுவான வேலைத் திட்டங்களில் ஒன்றிணைந்து செயல்பட வாய்ப்பில்லாமற் போனதும் நம்பிக்கையை இழக்கக் காரணங்களாயின. குறிப்பாகப் பெண்கள் ஒரே சமயத்தில் நம்பிக்கையும் நம்பிக்கையின்மையுமான உணர்வுகளுக்கு ஆளாயினர். ஈழத்துப் பெண் கவிஞர்கள் பலரின் கவிதைகளிலும் இப்போக்கினைக் காணலாம்.

அழகிய காலை நேரத்தில் பாதைகளின் குறுக்கில் வீசப்படும் முகமற்ற உடல்கள், உயிரோடு இருக்கையில் அவர்கள் மீது உடைந்து விழும் சுவர்கள் இவற்றைப் பார்த்த குழந்தைகள் / சிறுவர்கள், சிறுவர்களாய் இல்லாது போயினர்.

படலை நேரத்தோடு மூடவும் நாயின் வித்தியாசமான குரைப்பைக் கேட்டு இனம் காணவும், கேள்வி கேட்காமலிருக்க, கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது மௌனமாய் இருக்க மந்தைகள் போல எல்லாவற்றையும் பழகிக் கொண்டனர். இவை எல்லாவற்றையும் விட அதிர்ச்சி தருவது தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும் தடியையும் புல்லையும் துப்பாக்கியாக்கி எதிரியாய் தன் நண்பனை எண்ணிக் கொல்வதும் சிறுவர்களின் விளையாட்டானதுதான்.

ஈழத்தில் அன்றாடம் நடக்கும் போர்களும் அதனால் உண்டாகிய நெருக்கடிகளும் அச்சம் தரும் சூழ்நிலையும் வருங்காலச் சந்ததியினர் நாட்டின் வளத்தை உருவாக்குவதில் பங்கெடுக்கப் போகிறவர்களின் மனம் எந்த அளவிற்கு வெறுப்புக்கும் பகைமைக்கும் ஆளாக்கிவிட்டன என்பதும் சிறுவர்கள் தங்களுக்கான இளமை விளையாட்டையும் இளமையையும் இழந்து நிற்கும் அவலநிலையையும் சிவரமணி,

யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
'வளர்ந்தவர்' ஆயினர் (சிவர மணி கவிதைகள், ப. 34)

என்று கூறுவதை மீண்டும் மீண்டும் வாசிக்கிற போது அது அவரவர் அனுபவத்திற்கேற்பப் பல்வேறு அர்த்தங்களைத் தந்து நிற்கின்றன.

இந்தப் போர்க்கால அனுபவங்கள் எத்தகைய பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலையைப் பெண்களிடையே உருவாக்கியது என்பதை ஊர்வசியின் கவிதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

எப்பொழுதாவது ஒரு மாலையில் 'அது' நடக்கலாம். ஒரு மதகுரு அல்லது முக்காடு அணிந்த ஒரு மாது, ஒரு தாடிப்பிச்சைக்காரன், இப்படி வேறு யாராவது என் வீட்டு வாசலில் கதவைத் தட்டலாம். நான் அவர்களைச் சட்டென்று அடையாளம் கண்டுகொண்டதால் அந்த இரவு முழுவதும் அவர் அவளருகில் இருக்கலாம். ஆனால் வாய்திறந்து பேசமுடியாதபடி மௌனமே இறுக்கமாக அங்கு ஆட்சிபுரியலாம். அதுமட்டுமன்றி, பழகிய துப்பாக்கி, துண்டுப் பிரசுரங்கள், அடர்ந்தகாடு இப்படி எதையெதையோ மறந்து அவனது மனமும் உடலும் அவளுடன் அடைக்கலமாகிய போது கருக்கல் கலைந்து விடிய ஆரம்பித்தது.

அவளுக்குக் கிடைத்த தற்காலிக அமைதியில் அவள் உறங்கும்போது முரட்டுத்தனமாகக் கதவு தட்டும் சப்தம் செவிகளில் விழுந்து, உறங்கும் விழிகள் விழித்தெழுந்தபோது நிகழ்ந்தது

ராணுவ கும்பல்
அல்லது போலீஸ்படை
பிறகு
கூந்தல் அவிழ்ந்து வருகிற வரையில்
விசாரணை
என்னருகே அம்மாவும்
கூட்டிலிருந்து தவறி விழுந்துவிட்ட
ஒரு அணில் குஞ்சைப்போல்
நீ போய்விட்டாய்
நாள் தொடர்கிறது

(பறத்தல் அதன் சுதந்திரம், பக். 53–54)

ஈழத்துப் பெண்ணின் இந்த அனுபவத்தைப் பதிவு செய்யும் ஊர்வசியின் கவிதை அங்குள்ள பெண்களின் அனுபவங்களை அன்றாட வாழ்க்கையின் பாதுகாப்பின்மையை, அடக்குமுறையின் மமதையை வெளிப்படுத்துகிறது. இது ஒரு பெண்ணின் அனுபவமாக மட்டும் இல்லாமல் ஓர் இனத்தின் அனுபவமாகி, விரிந்த தளத்தில் போர்க்கால நெருக்கடியில் உடல் ரீதியாகவும் மனோரீதியாகவும்

பெண்கள் படும் அவஸ்தைகளைக் கவிதையில் வடிக்கிறபோது அது தன் தளத்தை உலக அளவில் விரிந்து அர்த்தமாவதை வீரியத்தோடு வெடித்துப் புறப்படும் பெண்மொழி வெளிப்படுத்துகிறது. சுய அனுபவம் அதன் எல்லையைக் கடந்து, பரந்து அனுபவவெளியை ஏற்படுத்துகிறது.

பெண்ணைப் பெண்ணாகப் பார்ப்பதில்லை; ஒரு மனுஷிக்கான மதிப்பும் தருவதில்லை. அவள் ஒரு போகப் பொருளாகவே காட்சியளிக்கிறாள். கணவன் உட்பட சமூகத்தின் பார்வையில் பெண் என்னவாக இருக்கிறாள்?

அவளுக்கென்று முகமில்லை; இதயமில்லை; ஆத்மாவும் இல்லை. அவர்களின் பார்வையில் அவளுக்கு இருப்பதெல்லாம் இரண்டு மார்புகள், நீண்ட கூந்தல், சிறிய இடை, பருத்த தொடை அவ்வளவே. அவளுக்கு அறிதிறன் உண்டென்றோ, படைப்பாற்றல் அவள் வசப்படுமென்றோ, கற்பனைத்திறன் அவளுக்கும் சாத்தியப்படுமென்றோ எண்ணுவதில்லை. மாறாகச் சமையல் செய்தலும் படுக்கையை விரித்தலும் குழந்தை பெறுதலும் பணிந்து நடத்தலுமே அவள் கடமையாகும் என்பதோடு அவர்கள் அவளுக்கெனப் புனைந்து வைத்த கற்புக்கும் மிகப்பெரிய இடமுண்டு. ஏனென்றால் பெண் கற்போடு இருப்பாளேயானால் மழை பெய்யெனப் பெய்யும் என்று இவர்கள் பேசுவார்கள். எப்போதும் பெண்ணின் உடலைப் பற்றியே அவர்களது பண்பாட்டு விதிமுறைகள் அளவு கோல்களாகின்றன.

அவர்கள்
எப்போதும் எனது உடலையே
நோக்குவர்
கணவன் தொடக்கம்
கடைக்காரன் வரைக்கும்
இதுவே வழக்கம்

(பறத்தல் அதன் சுதந்திரம், ப. 84.)

என்ற சங்கரியின் கவிதை இன்றைய சமுதாய யதார்த்தத்தை வெளிப்படுத்துகிறது.

பெண்ணைப் பேதையாகவும் ஆணை வீரபுருஷ நாயகனாகவும் நோக்கும் வரைக்கும் சமத்துவம் வரப்போவதில்லை. பெண்ணுக்கும் ஆணுக்குமான இடைவெளி இருக்கத்தான் செய்யும். பெண் சமத்துவத்தை நிலைநாட்டத் தன்னாலான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறாள். ஆயினும் இடைவெளி குறைந்தபாடில்லை. ஆண் தன் மேலாதிக்கத்தை விடும்வரையில் தன் அதிகாரத்தை முற்றுமாகப் போக்கும்வரையில் பெண் பேதையாகவே

இருப்பாள் அவனுக்கு. ஆனால் பெண்ணே அவள் எல்லாத் தளைகளையும் நீக்கிக் கொண்டு சுதந்திரமாகச் செயல்படுகிறாள்; அவனைச் சமத்துவப் பாதைக்கு அழைக்கிறாள்.

அவனது கரங்களைப் பற்றி நட்புடன் குலுக்கி, நெற்றியில் பாசத்தோடு சிறு முத்தமளித்தும் தன் அன்பினை உணர்த்த விரும்புகிறாள். தோழமையோடு அவனை அழைத்து, நடுநிசியிலும், இராகுயில் கூவும் சோளக் காற்றின் உறுமல் கேட்கும் நடுநிசி நேரத்திலும் கடமையை ஆற்றுவாள். மனித வாழ்க்கையைப் பற்றியும் அரசியல் சூழல் பற்றியும் உயிர்துடிப்போடு இயங்குபவனை நோக்கி வியப்படைவேன். அந்த வியப்பு, நீண்டகாலம் அவனோடு பழகிய பழக்கம் மனதில் காதலை ஏற்படுத்தும்.

**அக்காதலை**
**முத்தமிட்டும்**
**நெற்றியை வருடியும்**
**உன்னிரு கைகளை**
**இறுகப்பற்றியும்**
**உணர்த்த விரும்பினேன்**

ஏனென்றால் என் காதல் சுதந்திரமானது. எந்தப் பண்பாட்டுத் தளைகளும் அற்றது. அது என் நெஞ்சத்தில் ஊற்றெடுக்கும் நேசத்தின் ஒரு பரிமாணம்.

ஆயினும் ஒரு பெண்ணிடம் நான் சொல்வது போல உணர்த்துவது போல உன்னிடம் இயல்பாக அணுக அஞ்சினேன். ஆணின் அதிகாரமும் அவனின் புரிதலும் அவன் பெண்ணுக்கான நடைமுறைகளைப் புனைந்து கூறியதையும் எண்ணி இயல்பாக ஒரு பெண் தன் உள்ளத்து சின்ன சின்ன ஆசைகளை, உணர்வுகளை ஒரு பெண்ணாக இருந்து சொல்லமுடியாத தயக்கத்தை வெளிப்படுத்துகிறாள். பறவைகள் போலவும் பூக்கள் போலவும் இயல்பாய் மனிதர் இருக்கும் நாளில் நானும் உனது அருகில் நெருங்குவேன் எனக் கூறுகிறாள். ஆனால் பெண்ணைப் பேதையாகப் பார்க்கும் ஆணிடம் எப்படி இயல்பாய் இருப்பது? இருவருக்குமான இடைவெளி பெரும் தடையாக உள்ளது. அதனால்

**அதை நான் விரும்பேன்**
**எனது நண்பனே**
**இந்த இடைவெளி**
**எமக்குள் இருப்பின்**
**எனது காதலை**

உணரவே மாட்டாய்.
'என்ன செய்வது?
நான்
விடுதலை அடைந்தவள்
உன்னால்
அந்த உச்சிக்கு
வரமுடியாதே (பறத்தல் அதன் சுதந்திரம், ப. 87.)

தன்னைப் புரிந்து கொண்ட ஆணிடமே தன் நேசத்தையும் காதலையும் பகிர்ந்து கொள்ள முடியும். அப்படியின்றி எத்தனையோ காலமாக ஆண் தனக்கான தளைகளை உணரக் கூட முடியாத மனோபாவத்துடன் பெண்ணுக்கான தன் புனைவுகளையே நினைத்து வாழ்வானேயானால் சுதந்திரம் பெற்ற பெண்ணால் அவனோடு தன் வாழ்க்கையைப் பகிர்தல் என்பது செயற்கையாகவே அமையும். எல்லாவற்றையும் விட சுதந்திரமும் அதனால் பெறும் இயற்கையான ஆற்றலையும் ஒருபோதும் அவளால் விட்டுக்கொடுக்க இயலாது. தான் சுதந்திரமாக இருப்பதின்மூலம் பிறரின் சுதந்திரத்தையும் மதிக்கும் பெண் அதிகார மேலாண்மை உணர்வுகளினின்றும் விடுபடாத ஆணை முற்றுமாக நிராகரிப்பாள் மிக இயல்பாக.

பொதுவாக மொழி ஆள்பவர்களின் அரசியல் தத்துவார்த்த ஆதிக்கத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளது. அதனால் நாம் பழக்கத்தில் இருக்கும் மொழியை அப்படியே எடுத்தாள்வது என்பதை விடுத்து புதிய அர்த்தங்களைத் தரும் கொள்கையோ அல்லது பழைய சொற்களின் அர்த்தங்களை மாற்றிய பிறகோதான் அவற்றைக் கையில் எடுக்க வேண்டும். அதனால்தான் "நாம் மொழியைப் பேசுகிறோம். என்பதை விட மொழி நம்மைப் பேசுகிறது" என்பர். அதனால் மொழி தங்களை - தங்கள் உணர்வுகளைப் பேசக்கூடியதாக மாற்றப்பட வேண்டும். ஆனால் இந்தச் செயல்பாடு அவ்வளவு எளிதான காரியமன்று; முனைந்து நின்றாலொழிய வசப்படாதது.

ஈழத்துக் கவிஞர்தம் சூழல் அவர்களுக்குப் பெரும் உந்துதலாக அமைந்துள்ளது. கவிதையாக்கத்தில் தமது திரண்ட அனுபவத்தையும் உணர்வுகளையும் மன உளைச்சல்களையும் சிந்தனைகளையும் கேள்விகளையும் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுள்ளதால் கவிதைக்கான பெண்மொழி வெடிப்புடன் வெளிப்படுகிறது அவர்களிடம்.

பெண்ணுடல் நுகர்விற்காகவே என்ற பார்வை ஆணுக்கு மட்டுமின்றி ஆணால் கற்பிதம் செய்யப்பட்ட அந்தக் கருத்தாக்கத்தில் பெண்ணும் தன்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கும்

பார்வையினின்றும் ஆழியாளின் கவிதை வேறு ஓர் அர்த்தத் தளத்தை நோக்கி நகர்வதை உணரலாம்.

*இக்கணத்தில்*
*மூக்கும் தொண்டையும் வரள*
*அங்கெங்கோ என் சிற்றிதயம்*
*அவதியாய்த் துடித்துத் தளர்கிறது*
*அத்தனைக் காக்கைகளும்*
*கொத்திச் சுவைக்கும் ரணவலி*
*ஒவ்வோர் உயிரணுவிலும்*
*இத்தனைக்குப் பின்னரும்*
*இன்னோர் அரை சிட்டிகையை*
*நான் உறிஞ்சத்தான் வேண்டுமா?*
*இல்லை*
*இல்லவே இல்லை*
*இன்னமும் எனக்கென்ற அபிலாஷைகளைப்*
*பிடித்து தொங்கியபடி - நான்*
*என்னை, என் சுயத்தைப்*
*பராமரிக்கும் தாதியாவேன்*
*பின் ஏன்*
*அக்னி மொட்டின் முகிழ்ப்பை*
*முறங்கொண்டு மூடுகிறீர்?*

*(ஆழியாள், உரத்துப்பேச, ப. 27.)*

என்ற வினாவில் ஆணின் ஆதிக்கம் தரும் குரூர நிலையையும் பெண்ணின் வலியையும் பேசும் இக்கவிதை எப்படி மரபுகளைப் புரட்டிப் போடுகிறது என்பதையும் ஆண் மொழியை வீரியத்தோடு உடைத்து எறிகிறது என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

ஒரு பெண் ஓர் ஆணுடன் இயல்பாகப் பழகும் போது அவளைப் பற்றிய படிமங்கள் அவன் மனதில் எவ்வாறு நிழலாடும் என்பதை ஆண் பார்வையில் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அந்தப் புரிதலை ஆழியாள் கவிதை வேறொரு தளத்தில் நகர்த்திச் செல்கிறது.

### நீயும் நானும்

**வரையறைகளைக் கடக்கவேண்டும்- நான்,**
**உன் விவேகத்தோடும்**
**நீ என் வீரியத்தோடும்**
**கடக்க வேண்டும்.**

*எனினும்*
*என் கருவறையை*
*நிறைப்பது உன் குறியல்ல*
*வா!*

*ஒன்றாய்க் கடப்போம்*
*நீ என் விவேகத்தோடும்*
*நான் உன் வீரியத்தோடும் (உரத்துப்பேச, ப. 10.)*

'ஆழியாளின் ஒவ்வொரு கவிதையின் வழியே விரியும் 'வெளி' நமக்குள் ஏற்படுத்தும் அர்த்தப் புரிதல்கள் ஏராளம். அவை பன்முகத் தன்மை கொண்டமை. மேலும், ஆழியாள் கவிதைகள் நுண்ணிய உணர்திறனையும் கவிதையாக்கங்களையும் கருத்துநிலைச் செம்மையினையும் தன்னளவில் நன்கு வெளிப்படுத்துகிறது' (தெ.மதுசூதனன், ப. 71.)

'நிலுவை' கவிதையைப் படிக்கும் போது நமக்குள் ஏற்படுத்தும் உணர்வுகள் இயல்பானதாகவும் அதே நேரத்தில் இயல்பைத் தாண்டி அதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. ஆழியாள் கேட்கும் கேள்விகள் பலவும் பலகாலமாகப் பல பெண்களும் கேட்க விரும்பிக் கேட்காமலேயே மௌனமாக்கப்பட்டவைதாம். ஆயினும் மௌனத்தை உடைத்துக்கொண்டு கவிதை பிறக்கும் போது ஆழியாளின் உணர்ச்சியும் கோபமும் கவிதைக்குப் பல்வேறு பரிமாணங்களைத் தருகின்றன. சொற்களில் பெண்மொழி வேகத்தோடும் வீச்சோடும் பிறந்து உருவாகி ஆழியாளின் கவிதையாக்கத் திறனை உரத்துப் பேசுகிறது.

## நிலுவை

*நீ திருப்பித் தரலாம்*
*மணிக் கூட்டை*
*கைவிளக்கை, கத்தரிக்கோலை*
*(கன்னி மீசை வெட்ட நீயாய்க் கேட்டது நினைவு)*
*கடும் பச்சை வெளிர் நீலக்*
*கோடன் சேட்டுக்களை*
*தரலாம் - இன்னமும் மிச்சங்களை*
*இன்று பல்வி எச்சமாய்ப் போனவற்றை.*
*உன் முகட்டில் சுவடாய்ப்*
*பதித்த*
*என் காட்டு ரோஜா உணர்வுகளையும்*
*அள்ளி அள்ளித் தெளித்து*

பூப் பூவாய்ப் பரவிய
திவலைக் குளிர்ச்சியையும்
எப்படி மறுதலிப்பாய்?
எந்த உருவில் திருப்பி அனுப்புவாய்?

கடிதத்திலா
காகிதப் பொட்டலத்திலா?
இதில் நான்
உனக்கிட்ட உதட்டு முத்தங்களையோ
நீ எனக்குள் செலுத்திய
ஆயிரத்தெட்டுக் கோடி விந்தணுக்களையோ
நான் கணக்கில் எடுத்துச்
சேர்க்கவில்லை என்பது மட்டும்
நமக்குள்
ஒரு புறமாகவே இருக்கட்டும்
(உரத்துப்பேச, பக். 13-14.)

ஆணின் பொறுப்பின்மை, சுயநலம், பெண் மீதான அக்கறையின்மை, அலட்சியம் ஆகிய உணர்வுகள் ஆழியாளின் தார்மீகக் கோபத்தில் பொசுங்கிப் போகின்றன. கவிதையில் எழும் வினாக்கள் எத்தனையெத்தனை அர்த்தங்களை வெளிப்படுத்தித் தனக்கான விரிந்த வெளியை உருவாக்கியுள்ளன.

பெண்ணைப் பெண்ணாக இருக்க முடியாத தளைகளைத் தகர்த்துக் கொண்டு அவள் அவளாகவே இருக்க விரும்புகிறாள். அதற்குத் தடையானவற்றைத் தகர்த்துச் செல்லவும் அவள் தயங்குவதில்லை.

நான் நானாக மட்டும்
என்னைப் பேசவிடு
தெளிவாக
தீர்மானமாக
. . . . . அனார், (ஊடறு, ப. 34.)

உனக்குப் பிடிக்காதென்பதற்காகவும், நீ அனுமதிக்கவில்லையென்பதனாலும் தினமும் என் தேவைகள் தீக்கிரையாக வேண்டிய அவசியமில்லை. இந்த வாழ்வு பற்றி உன் போன்றே ஆயிரம் கனவுகளுடன்தான் நானும் உயிர் வாழ்கிறேன்- அன்றாடம் என் கனவுகளை, அபிலாசைகளைக் கொன்று விடும் விதம் நீ ஆயிரம் ஆணிகள் அறைகிறாய். உன் பொறாமைகளுக்கெல்லாம் நான் பொறுப்பாளியாக முடியாது. விசாரணைகளும் குற்றப்பிரேரணைகளும்

என் மீதான உன் நம்பிக்கையில்லாத் தீர்மானமும் எல்லாமும் விவாதிக்க படுக்கையறை உன் பாராளுமன்றமுமல்ல.

என்னைப் பேசவிடு
ஆழ்ந்த வலிகளை
வரைந்து காட்ட முடியாது
என் வெறுப்பை
புரிய வைக்க
உன் முன்னே
ஒரு யுத்தத்தை
நிகழ்த்திக் காட்ட முடியாது

(மேலது, ப. 34.)

இந்தக் கவிதை மூலமாக அன்பும் பரிவும் அரசியலாக வேண்டுமே தவிர, நம்பிக்கையின்மையும் குற்றச்சாட்டும் அரசியலாகக் கூடாது எனத் தெளிவாகக் கூறுகிறாள். இந்தத் தெளிவும் உறுதியும் விளிம்பு நிலையில் உள்ள ஒவ்வொரு பெண்ணிற்கும் தேவை என்பது தான் பெண்மொழியின் அரசியலைக் கட்டமைக்க உதவும். ஏனென்றால் மைய நீரோட்டத்தில் பெரும்புள்ளியாக மாறும்போதுதான் சமூகத்தின் அனைத்து விளிம்பில் உள்ள அனைவருக்கும் உண்மையான விடுதலை சாத்தியமாகும்.

எத்தனையோ நூற்றாண்டுகளாகப் பண்பாட்டுப் பெயரால் மௌனமாக்கப் பட்ட பெண்ணின் உணர்வுகள் அதிர்வுகளை உண்டாக்குகின்றன. அப்போது அந்த அதிர்வுகளின் விளைவு பெண்ணின் எழுச்சிக் குரலாக - உரத்த குரலாக வெடித்துப் புறப்படுகிறது. அந்தப் பயணத்தில் பெண் உறுதியானவற்றைப் பேசுவாள்; தனக்கான மொழியில் பேசுவாள்; மேலும் மேலும் ஆணோடு - அவன் அதிகாரம் செலுத்தும் ஆதிக்க உணர்வோடு போராடுவதில் தன் நேரத்தை வீணாக்க மாட்டாள்.

தன் விடுதலைக்கான பயணத்தை மேற்
கொள்ளும் அவளை எந்தச் சக்தியாலும்
தடுத்து நிறுத்த இயலாது.

# நிறைவுரை

'பெண் பெண்ணாகப் பிறப்பதில்லை; பெண்ணாக உருவாக்கப்படுகிறாள்' என்று சைமன் டி. பவார் கூறியதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளலாம். பெண் என்பதாலேயே அவளுக்கெனப் பல கட்டுப்பாடுகளையும் வாழ்வு முறைகளையும் வகுத்துத் தந்தைவழிச் சமூகத்தினைத் தக்கவைக்க உறுதிபூண்ட ஆணாதிக்கப் போக்கினால் பெண் தன் அறிதிறனை, சிந்தனையை இழந்து முகமற்றுப் போனாள்.

உலகளாவிய நிலையிலும் பெண்களின் நிலை இதுதான். பல நூற்றாண்டுகளாய்ச் சுயத்தை இழந்து ஆண் ஆதிக்கத்தின் கீழ் அடங்கியிருந்த பெண்ணினத்தின் மௌனம் கலைய ஆரம்பித்தது. அந்த மௌனம் தந்த அதிர்வுகள் பல்வேறு மாற்றங்களை ஆங்காங்கே அவ்வப்போது வெவ்வேறு சூழ்நிலைகளில் உருவாக்கின. எப்படியாயினும் பெண் விடுதலைக்கான விடியலைக் காண நேர்ந்த காலமிது. பெண் தன்னைச் சுயசிந்தனையுடைய ஒரு மனுஷியாக எண்ணியதோடு ஆணுக்கு நிகரானவளாக நடத்தப்படாததின் நியாயமற்ற போக்கைப் புரிந்து கொண்டாள். அதனை மாற்றியமைத்து ஆணுக்கான பரந்த வெளியைத் தனக்குமாக்கிக் கொண்டு தன் இருப்பை ஸ்திரப்படுத்திக் கொள்ள எண்ணியதால் பெண் விடுதலைப் போராட்டங்கள் தோன்றின.

மேலைநாட்டில் நடந்த இந்தப் போராட்டங்களின் தீவிரம் எல்லா நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலை நாட்டுக் கல்வியாகிய ஆங்கிலத்தைப் பயின்றவர்களால் இந்தியாவிலும் அத்தாக்கம் மாற்றங்களை ஏற்படுத்தின. இது வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்வாகும்.

பெண்ணுக்கான மொழியோ, வரலாறோ, வெளியோ இல்லாததால் ஆண்கள் கற்பித்ததும் புனைந்துரைத்ததுமே பெண்ணாயினாள். எல்லா நாடுகளிலும் பெண்ணின் வாழ்க்கையும் அடையாளமும் இதுவே ஆயிற்று,

ஆனால், உண்மையில் ஆணின் ஆற்றல்கள் வரம்புக்கு உட்பட்டனவாயிருக்கையில், பெண்ணே வரம்பற்ற ஆற்றல்களைப்

பெற்றுள்ளவள் என்பதை மகிஷாசுரமர்த்தனி கதை விவரிக்கிறது. ஆணின் துணை இல்லாது கூட, பெண் படைக்கும் தன்மையுடையவளே என்கிறது ஒரு புனைகதை. படைப்பின் கிரமத்தில் முதலில் தோன்றியது மட்டுமல்லாமல் தன்னின் அம்சமாய் ஆண்களாகிய தெய்வங்களைப் படைத்ததுடன் அவர்களுக்கு ஆற்றல்களை வழங்கியதும் பெண்ணே என்கிறது வாய்மொழி மரபுக்கதை (பெண்ணியச் சிந்தனைகளும் படைப்புகளும், பக். 6-7).

இத்தகைய ஆற்றல் படைத்த பெண்ணை ஆணைவிடத்தாழ்த்திக் கூறுவது, அதுவும் பண்பாட்டின் பெயரால் அவள் இயக்கத்தை முடக்கிப்போடுவது பெண்மீதான அராஜகச் செயலாகும். தம்மில் ஒரு பாதியாக இருக்கும் பெண்ணைச் சமமாக எண்ணாத ஆணின் ஆதிக்க மனோபாவம் திட்டமிட்டுச் செய்யப்பட்ட அநாகரிகச் செயலாகும். பெண்ணின் பலத்தை அவள் அறியாமல் செய்து தம் பலத்தை நிலைநிறுத்திக் கொள்ள அவர்கள் செய்த தந்திரமாகவும் இருக்கலாம். இது அவர்களின் பயத்தை, பலவீனத்தை மறைப்பதற்காகவும் இருக்கலாம்.

எத்தனையோ விஷயங்கள் பெண்ணின் மனதில் அலை அலையாக எழுந்தாலும் அவையனைத்தும் வடிகாலின்றி, பண்பாட்டுக் காவல் நிலையைக் கடந்து கரையேற முடியாமல் மீண்டும் அவர்கள்தம் மனக்குகையில் பலகாலமாய் அமிழ்ந்து போயின.

பெண் என்பதாலேயே அவள் எழுத்துகள் பல்வேறு காலங்களிலும் குடும்பம், சமூகம் ஆகியவற்றால் தணிக்கை செய்யப்பட்டன என்பதையும் அவள் கற்பனைகள், ஆசைகள், தவிப்புகள், ஆளுமைகள் அனைத்தும் அடக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் காலநதியில் கரைந்து போயின என்பதையும் சற்று விரிவாகக் கண்டோம்.

தன் இருப்பை - தன் சுயத்தை மீட்டெடுத்த பெண் இப்போது தனக்கான தடைச்சுவர்களைத் துணிச்சலோடு தாண்டி முன்னேறிச் செல்கிறாள் நதியாக. நதி எக்காலத்தும் பின்னோக்கிச் செல்வதில்லை. இனி அவள் பொங்கிப் பாய்வதில் அவளை அழுத்தி வைத்த அத்தனை கருத்தாக்கங்களையும் சுனாமி அலையாய் அடியோடு அழித்து, தனக்கான ஒரு புதிய வெளியைக் காணும்போது பெண்ணுக்கான இயல்பான மொழி உருவாகும்.

பாலியல் உறவுகளை அவள் பேசுகிறபோதும் அவை அசிங்கமாகவோ ஆபாசமாகவோ இல்லாமல் புனிதம் என்ற புனைவையும் கடந்து நிற்கும் போது உண்டாகும் மொழி பெண்

மொழியாகும். அவள் உடலையும் உடலைச் சார்ந்த வலிகளைப் பற்றியும் சுதந்திரமாக வெளிப்படுத்தும் போது அவளுக்கான மொழி வீரியத்தோடு பிறக்கிறது என்பதையும் கண்டோம்.

இங்கு ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஹெலன் சீக்ஸீஸ் கூறுவது போல, பெண் தன் உடம்பைப் பெய்து வைப்பது மட்டும் போதாது. தடை செய்யப்பட்ட அவள் உடலைச் சார்ந்த வலிகளையும் முறை சார்ந்த உணர்வுகளையும் கடந்து வரவேண்டும். அவள் தன்னைச் சுயத்திலிருந்து விடுபட்டு, குறிப்பிட்ட சாதி, மதம், வர்க்கம் ஆகிய நிலைப்பாடுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். பிறகு அவற்றைக் கடந்து வேறான பாத்திரங்களை, வாழ்க்கை நெறிகளை, உணர்வுகளை அவற்றுக்குரிய பண்புகளுடன் நியாயங்களுடன் பதிவு செய்ய முன்வரவேண்டும். அவ்வாறு படைப்பாளிகள் சுயத்தினின்றும் அகலாவிடில் வேறொரு விதமான கட்டுப்பாட்டுக்குள் நம்மை ஆழ்த்திக் கொண்டவர்களாவோம். இங்கு கீதாவின் கருத்தை நினைவு கூரலாம்.

பெண்கள் மனம் விட்டுப் பேசினால் இப்படித்தான் காதல், முலை, யோனி, தாய்மையின் வலி . . . .என்றெல்லாம் எழுதுவார்கள். இதைப் போய் யார் படிப்பார்கள் என்று ஒரு காலத்தில் பெண்களே சலிப்படையக்கூடும். உலக அனுபவங்கள் அனைத்தையும் சுவீகரிக்கும் வாய்ப்பை நாம் இழந்து விடுவோம். பெண்விடுதலை என்பது சுயத்துக்கானது மட்டுமன்று; உலகத்துடன் புது உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவுந்தான் (வ. கீதா, பறத்தல் அதன் சுதந்திரம், முன்னுரை, ப. 25).

படைப்பாளி யாராக இருந்தாலும் அவரை இப்படி எழுது, அப்படி எழுதாதே, இதை எழுது, அதை எழுதாதே என்று உத்தரவிட யாருக்கும் அதிகாரமோ உரிமையோ இல்லை. பேச்சும் எழுத்தும் அடிப்படை சுதந்திரம். பின் ஏன் பெண் மீதான இந்தத் தாக்குதல்?

தனக்கான வெளி பறிபோய் விடுமோ என்பதால் ஆண்களுக்கு ஏற்பட்ட பயமும் இயலாமையும் காரணமாகலாம்.

ஒன்றை எப்போதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்த ஒரு சித்தாந்தமாயினும் அது எங்கிருந்து யார்மூலமாக வந்ததாயினும் மக்களுக்கு நன்மை பயக்குமெனின் அதை நமதாக்கிக் கொள்வதில் எந்தக்குறையும் நேர்ந்து விடாது. அது அவசியமும் கூட நம் மண்ணுக்கு ஏற்ற வகையில் அது மாற்றியமைக்கப் படவேண்டும் என்பது முக்கியம். இல்லையேல் சிறிது காலத்திற்குப் பின் அது தேக்கமடைந்து விடும். கண்ணை மூடிக்கொண்டு பழையனவற்றை

எதிர்ப்பதும் புதியனவற்றை மோகத்துடன் ஏற்பதும் வளர்ச்சிக்கு வழிகோலாது. இப்படிக் கூறுவதால் மரபில் வந்த அனைத்தையும் நாம் பின்பற்றவேண்டுமென்ற அர்த்தமில்லை. புதியனவற்றைக் கேள்விக்குட்படுத்தாது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

காலம் காலமாக வழக்கில் இருந்து வரும் ஒன்றிற்கு மாறாக நாம் எதைச் செய்ய முற்பட்டாலும் யார் செய்தாலும் அது சமூகத்தின் கண்டனத்திற்கு உட்பட்டிருக்கிறது என்பதற்கு வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. நடந்து செல்லும் பாதையிலிருந்து சற்று மாறினாலும் சிலர் நடுக்கமுறுவர்; சிலர் தயங்கி நிற்பர். இது சமூகத்தின் இயல்பு. இதுதான் புதியன தோன்றும் போதெல்லாம் நடந்தது. இப்போதும் தொடர்கிறது; எப்போதும் தொடரக்கூடியதுதான்.

கல்வி என்பது கண் போன்றது என்று ஒருபுறம் வலியுறுத்திப் பேசும் சமூகம் இன்னொரு புறம் பெண்ணுக்குக் கல்வி எதற்கு என வாதம் செய்யும். சூரியனில் ஒருபாதி என்றென்றும் இருளில் இருக்க முடியுமா? ஆணும் பெண்ணும் சமம் என்பதைக் காட்டத்தானே மாதொரு பாகனானான் சிவன். பெண் கருணையுடையவள் என்பதை உறுதிப்படுத்தத் தானே தன் மார்பில் அவளைத் தாங்கி நின்றான் மாயோன். நாவன்மை படைத்தவள் பெண் என்பதை நிரூபிக்கத்தானே பிரம்மன் சரசுவதியைத் தன் நாவில் வைத்தான் என்றெல்லாம் கதை கூறினார்கள். இத்தொன்மக் கதைகளின் உள்ளார்ந்த அர்த்தமென்ன?

இப்போதைக்கு இவை உண்மையா? அப்படித்தானா? என்ற விவாதத்திற்குள் நுழையத் தேவையில்லை. பகுத்தறிவு கொண்டு மறுத்துரைக்க வேண்டிய அவசியமுமில்லை. அவை விளக்கவந்த அடிக்கருத்து என்ன என்பதைப் பார்ப்போமேயானால் ஆதிசக்தியின் ஆற்றல் படைத்தவள் பெண் என்பது பெறப்படும். அதனால்தான் மகிஷாசுரமர்த்தனி தொன்மமும் உருவாகியிருக்கவேண்டும்.

எல்லையிலா ஆற்றல் படைத்த ஆதித்தாய் இன்று காணாமல் போய்விட்டாள். இன்றில்லை, என்றோ ஆதிகாலத்தில் இனக்குழுக்களில் அனைவரையும் ஒருங்கிணைத்து அவரவர்க்கான பணியைத் தந்ததோடு உணவையும் வேற்றுமை பாராட்டாது பகிர்ந்தளித்தவள் இன்று முற்றுமாகத் தொலைந்து போனாள். இந்த மாற்றம் பெண்களின் வரலாற்றில் (வரலாறு என்ற ஒன்று அவர்களுக்குக் கண்டறியப் படுமானால்) நேர்ந்த மிகப்பெரிய வீழ்ச்சி எனலாம்.

இன்று அவள் விழித்துக் கொண்டாள். தன் பலத்தை அறிந்து கொண்டதால் எழுச்சி பெற்றுவிட்டாள். இன்று அவள் தடைகளைத்

தாண்டிப் போகிறாள். அவள் மரபுகளை உடைத்துக் கொண்டு போவது அவளுக்காக மட்டுமன்று; ஆண்களுக்காகவுந்தான். ஒட்டுமொத்த சமூகத்திற்காகவுந்தான். அதனால்தான் அவள் சுற்றுச்சூழலைப் பற்றிக் கவலை கொள்கிறாள். அணுயுகத்தின் அழிவுகளைக் கண்டு பதறுகிறாள். அவள் தாய்; ஆக்கத்தெரிந்தவள்; அழிக்கத் தெரியாதவள்.

பெண் குழந்தைகளை அவள் அழிக்கும் குரூரச் செயலுக்குக் கூட அவள் காரணமில்லை. அவள் அவ்வாறு செய்யவேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகிறாள். இந்நிலையில் பெண்கள் தங்கள் உணர்வுகளைப் படைப்பில் வெளிப்படுத்தும் போது வீரியத்தோடும் கோபத்தோடும் மொழிபிறக்கிறது. தனக்கான வெளியை - மொழியை உருவாக்கிக் கொள்ள முயலும்போது அவள் உணர்வுகள் பொங்கிப் பாய்ந்து வருவதைப் பெண்கவிஞர்களின் கவிதைகள் உரத்துப் பேசியதைக் கேட்டோம்.

ஆனால் யதார்த்த வாழ்வில் நிகழ்வது என்ன? ஆணாதிக்கச் சமுதாயம் தன் அதிகாரத்தின் பழம் வாசனையில் அவளை மீண்டும் மீண்டும் வெட்கமின்றி அவமானத்திற்குள்ளாக்குகிறது. தொலைபேசி மூலமும் கணினி மூலமும் அவள் வாழ்க்கையைக் குதறி எடுக்கிறது. அவள் எழுத்தில் அவள் சொந்த அனுபவந்தான் இடம்பெறுகிறது எனத் தனிப்பட்ட முறையில் இடையறாது தாக்குதல் செய்கிறது. ஒரு பெண் பாலியல் உறவு பற்றி எழுத நினைத்தால் உடனே அவள் தன் சொந்த அனுபவத்தை வைத்துத்தான் எழுதுகிறாள் என்று நினைக்கும் கீழ்த்தரமான மனோபாவம் பலரிடம் உள்ளது. இந்த நிலை மாறினால்தான் ஆழ்ந்த சிந்தனைகளைத் தைரியமாகச் சொல்ல பலரும் முன் வருவார்கள்.

மேலும் ஒரு படைப்பாளி, பெண்ணாக இருப்பதாலேயே என்ன எழுதவேண்டும் என்பதை ஆண் நிர்ணயிப்பது என்பது எத்தனை வன்முறையான செயல் - ஓர் ஆண் எதை வேண்டுமாயினும் எழுதலாம். அது அவன் பெற்ற உலக அனுபவம். ஆனால் ஒரு பெண் எழுதினால் அது அவள் சொந்த அனுபவம். இன்னும் எத்தனை காலங்களுக்கு இந்த அராஜகப் போக்கைப் பெண்கள் சகித்துக் கொள்வார்கள்? அதனால் அவர்கள் புயலாகவும் சுனாமியாகவும் மாற்றம் கொண்டு ஆணின் அத்தனை இறுமாப்புகளையும் அழிக்க முற்பட்டுவிட்டனர்.

தம் மொழிவாயிலாக மாலதி மைத்ரி கூறுவது போல பெண்ணியம் உருவாகும் போது பெண்விடுதலை சாத்தியமாகும்.

> பெண்ணுடல் மீது எப்போதும் அதிகாரம் செலுத்தவும் கேள்வி கேட்கவும் உரிமையுடையவன் என்ற

மனோபாவத்தைத்தான் ஆண்கள் தங்கள் பலமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான தகுதியை ஆணிடமிருந்து பறிக்கப்படும் போது ஆண், பெண் வாழ்க்கையில் ஒரு பூஜ்யம் என்ற நிலைக்குத் தள்ளப்படும் போது மட்டுமே பெண் சுதந்திரம் சாத்தியம். பெண்கள் தங்கள் உடலை ஆண்களுக்குக் கொடுக்க மறுக்கும் அரசியல் இங்கு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதற்கு தத்துவார்த்த, தர்க்கபூர்வமான சிந்தனை முறைகள் உருவாக வேண்டும். இதைத்தான் நான் பெண்ணியம் எனக்கருதுகிறேன். பெண் தனித்துவத்துடன் தன்னிச்சையுடன் தன்னாட்சியுடன் வாழ்வதுதான் பெண்ணியத்தின் அடிப்படைக் கருத்தாக இருக்க முடியும்.

அணங்கு, பின்அட்டை

இத்தகைய உறுதிப்பாடு இருப்பதால் தான் மிகப்பல மோசமான விமர்சனங்களை எதிர்கொண்டபோதும் தங்குதடையின்றிப் பெண்கவிஞர்கள் தங்கள் இலக்கிய ஓட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சமீப காலமாகத்தான் இந்த நிலை உருவாகியுள்ளது. ஏனென்றால் “முதலில் கற்றுக் கொடுக்கப்பட்ட பல விவரங்களை அவர்கள் துறக்க முன்வரவேண்டும். பல தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும். சீதையும் சதிலீலாவதியும்தான் தங்களின் முன்மாதிரிகள் என்று நம்பியதை மாற்றி, புதிய கலாச்சாரத்தை நம்மைப்போன்ற சிலர் உருவாக்க முனைவது நிச்சயம் நடக்கும். அது உண்மையைப் பேசும் ஒரு கலாச்சாரமாக இருக்கும். அதற்காக நாம் புண்படுத்தலுக்கு ஆளாக்கப்படலாம். பரவாயில்லை. நமக்கும் போராடத் தெரியும். கவலையில்லை.” பெண்கவிஞர்களின் செயல்பாடு இதுதான்.

இறுதியாக ஒன்றை உங்கள் முன் வைக்கவிரும்புகிறேன். பின் நவீனம் நமக்குப் பல்வேறு மாறுதல்களைத் தந்துள்ளது. பின் நவீனத்துவம் எல்லாவற்றையும் புரட்டிப்போடச் சொல்கிறது. கலகம் செய்; உடைத்து எறி என்கிறது. அமைப்பியல், பின் அமைப்பியல் அனைத்தும் இன்று படைப்பாளர்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள ஓர் அம்சம். படைப்பாளர் தம் தேர்வைப் பொறுத்து அவரவர்க்கான படைப்புகள் உருவாகின்றன.

எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பின்தான் குடும்பம் என்ற அமைப்புத் தோன்றியது. அதனால் நன்மைகளும் உண்டு; பாதிப்புகளும்

உண்டு. குடும்பம் என்ற நிறுவனம்தான் ஆணாதிக்க அதிகாரத்தைப் பெண்ணின் மீது பலகாலமாய்ச் சுமத்தியுள்ளது என்பதும் உண்மைதான். பெண்ணின் வழியாக அடங்கிப் போதலும் ஆணின் வழியாக ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமும் தலைமுறை, தலைமுறையாகத் தொடர்ந்து வருகிறது என்பதையும் மறுக்க முடியாதுதான். ஆனால் வெறும் அறிவு மட்டும் வாழ்க்கையில் இடம்பெற்றால் அது வறட்சியான வறண்டுபோன வாழ்வாகத்தானே இருக்கும். அங்கே உணர்வுகளுக்கும் இடம் வேண்டுமல்லவா? அவையும் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றதாக அமைய வேண்டாமா? எந்தக் குடும்பம் பெண்ணின் ஒடுக்குதலுக்கும் ஆக்குதலுக்கும் மூலகாரணமாகியதோ அந்தக் குடும்பம், உணர்வுகளுக்கு வடிகாலாய் ஒரு பாதுகாப்பாய் (சிலருக்காவது!) பெண்ணிற்கு மட்டுமன்றி ஆணுக்கும் ஆதாரமாய் இருப்பதை நாம் கவனத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும். எங்கு பெண் மதிக்கப்படவில்லையோ எங்கு ஒடுக்கப்படுகிறாளோ அங்கு அவள் தன் உரிமையை நிலைநாட்ட உறுதியாய் நின்று தொடர்ந்து போராட வேண்டுமல்லவா? அதற்கான மனவுறுதியைப் பெண்ணுக்கு எப்படி அளிப்பது?

மேலை நாட்டு நாகரிகமும் நமதும் ஒன்றல்ல. அவர்களுடையதை அப்படியே பின்பற்ற வேண்டுமென்ற அவசியமில்லை. அவற்றை இங்கே நடைமுறைப் படுத்துவதும் அதுவே பெண்ணுக்கான விடுதலை என்று முழங்கும் போலியான குரல்களை எச்சரிக்கையோடு மறுபரிசீலனை செய்தால் நமக்கான விடுதலையைப் பெற நமக்கு வெளிச்சம் கிடைக்கலாம்.

பாலியல் சுதந்திரம், திருமண பந்தத்திலிருந்து விடுதலை, ஓரினச் சேர்க்கை, திருமண நிறுவனத்தில் நுழையாமல் இணைந்து வாழ்தல் என்பவையெல்லாம் ஒரு சிலர்க்கு வாழ்வு முறையாகலாம். அவர்களுக்கான தடைகளை நீக்கிக் கொள்ள அவர்கள் செய்யும் முடிவாகவும் இருக்கலாம் அப்படி அவர்கள் வாழ்வதில் எந்தவிதத் தடையும் யாருக்கும் இருக்கப்போவதில்லை. அந்த நிலை நிச்சயம் உருவாகலாம். இன்னும் சொல்லப் போனால் அவர்களுக்கான மதிப்பு, மரியாதை, சுதந்திர உணர்வு அனைத்தையும் சமூகம் புரிந்து கொள்ளும் மாற்றமும் ஏற்படலாம்.

இது விலக்காக இருக்கும் நெறி. இப்போதைக்கு இதனைப் பொதுவான ஒரு வாழ்க்கை நெறியாக ஆக்க காலம் பிடிக்கும். ஆணும் பெண்ணும் சமம் என்பதை, குழந்தைகள் நம் மூலமாகப் பிறக்கின்றனர் ஆனால் அவர்கள் நம் சொத்தல்ல என்பதைப் புரிந்து கொண்டால்

ஆண், பெண்ணைச் சொத்தாகவும் உடமையாகவும் கொண்டு அடிமைப்படுத்தியது போன்றே குழந்தைகளையும் அடிமைப்படுத்தும் நிலை உருவாகாமல் இருக்கத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலாம். மனோ ரீதியாக விடுதலை பெறவும் அப்போது சாத்தியமாகலாம். ஆணிற்கும் புரிய வைக்கவேண்டும். தான் ஒரு சுதந்திரமான மனுஷி என்பதைத் தொடர்ந்து நினைவில் கொண்டு செயல்பட வேண்டும். ஆணும் பெண்ணும் அறிவில் - திறனில் - செயல்பாட்டில் சகலவிதமான உரிமைகளையும் சமமாகப் பெறவேண்டும். ஏனென்றால் குடும்பத்தில் ஆண் கொடுப்பதற்கும் பெண் பெறுவதற்கும் ஏதுமில்லை. அப்படிச் சொல்லிவைத்ததெல்லாம் வெறும் புனைவுகளே. அவரவர் உயிர் வாழ்தலுக்கு சுவாசிப்பது எப்படி இயல்பாகியதோ அதைப் போன்றே சமூகத்தின் ஆரோக்கியமான உயிர்வாழ்தலுக்கு ஆண், பெண் சமத்துவம் இயல்பாக உருவாக வேண்டும். இதை நடைமுறைப்படுத்த நாம் என்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்? முதலில் அவள் மூளையில் ஏற்றிவைத்துப் பதிய வைத்துள்ள பழைய ஆணாதிக்கப் புனைவுகளாகிய குப்பைகளைத் தான் ஒரு சுதந்திரமான மனுஷி என்ற பிரக்ஞையாகிய அக்கினியால் சுட்டுப் பொசுக்க வேண்டும். அதற்கு அவளே அக்கினிக் குஞ்சாக மாறவேண்டும். அக்கினிக்கு மட்டுமே தான் தூய்மையாக இருந்து மற்றவைகளைத் தூய்மையாக்கும் இயல்பான ஆற்றல் உண்டு. அதையே பெண் தனதாகச் சுவீகரித்துக் கொள்ளலாம். அப்போது அவள் பயணத்தைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது. அவள் பயணத்தைத் தொடரும்போது அவளோடு ஆண்களையும் இணைத்துக் கொள்ளலாம். இயற்கையின் குழந்தைகளாகிய மரங்களும் மண்ணில் பிறந்துவிட்ட பெண் குழந்தைகளும் யாருக்கும் இரையாகாமல் மாறும் காலத்தின் விடியலைக் காணலாம்.

குடும்பம் என்ற நிறுவனத்தில் பெண்ணுக்கான விடுதலை கிடைக்காத போது அவள் தாராளமாக வெளியேறலாம். அது அவள் உரிமை; சுதந்திரமும் கூட

அந்த நிலை உருவாக நாம் இன்னும் தொலைதூரம் நடந்து செல்லவேண்டும். அதற்கான சூழல், சமூகப் பொருளாதார அரசியல் மாற்றங்களால் நிகழக்கூடிய சாத்தியக்கூறுகள் எதிர்காலத்தில் ஆற்றலோடு தோன்றலாம். அதுவரை நாம் ஒவ்வொருவரும் பிறர் சுதந்திரத்திலும் விடுதலைச் செயல்பாட்டிலும் யாருடைய ஆதிக்கமும் அதிகாரமும் இல்லாமல் இருக்க முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியிருக்கும். அந்தச் செயல்பாட்டில் நேரும் தடைகள், சங்கடங்கள், அவமானங்கள் அனைத்தையும் எதிர்கொள்வதைத் தவிர வேறுவழியில்லை.

இந்நிலையில் பெண்ணின் கடமை இரட்டிப்பாகிறது. (எப்போதுமே அவளுக்கு இரட்டைச் சுமைதானோ?) ஆணாதிக்கத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொள்வதுடன் தான் அடிமையாய் இருக்கிறோமென்றஉணர்வே இல்லாமல் இருக்கும் ஆணையும் விடுதலை செய்ய வேண்டுமென்ற பொறுப்பும் அவளுடையதாகிறது. அத்தகைய விடுதலைக்கான சூழல் உருவாகும்போது,

"ஒரு வேளை எதிர்காலச் சமூகம் குடும்பங்களைக் குடும்பமெனும் தளைகளை முற்றாகத் தொலைத்துவிடும். ஆண்களும் பெண்களும் இயற்கை இன்பத்தில் உறைவர். எனினும் குடும்பம் இராது. ஆண் இருப்பான்; கணவன் இருக்கமாட்டான் பெண் இருப்பாள்; மனைவி இருக்கமாட்டாள். தாலிஇராது; விவாகமே இராது எனில் விவாகரத்தும் இராது. மனிதர் அறிவார்ந்த வாழ்க்கை நடத்தி இன்புறுவர். இதுதான் நடைப்பெறப்போவது" (கனவு மெய்ப்பட வேண்டும், முன்னுரையில்) என்ற பிரபஞ்சனின் கனவு மெய்யாகலாம். ஆனால் அது தொலைதூரக் கற்பனையாக எனக்குத் தோன்றுகிறது.

நம் பலத்தை முழுமையாக உணரமுடிகிறபோது அது சாத்தியமாகலாம். எனவே அதுவரை நாம் போராடத்தான் வேண்டும். அதற்கு முதலில் நாம் மனவுறுதியோடும் தன்னம்பிக்கையோடும் வாழ்வை எதிர் கொள்ள வேண்டும். அதற்கு முதலில் நமக்குள்ளிருந்து நமக்கு விடுதலை வேண்டும். பெண் ஆணுக்குச் சகல விதத்திலும் நிகரானவள் என்ற சிந்தனையைப் பெற்றுத் தன்வயப்படுத்த வேண்டும். அது அவ்வளவு எளிதான காரியமன்று. அசாதாரணம்தான் ஆயினும் போராட்டமில்லாமல் எந்தவித விடுதலையும் சாத்தியமில்லை. எனவே நாம் தொடர்ந்து போராடவேண்டும். நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை மறந்து அனைத்துத்தரப் பெண்களையும் ஒருங்கிணைத்துப் போராடும் சூழலை உருவாக்க வேண்டும். அது இமாலயச் சாதனைதான். ஆயினும் முயன்றால் முடியாதது ஏதுமில்லை. வானம்கூட வசப்படுமென்றால் பெண்களின் மனங்கள் வசப்படாதா என்ன? அப்போது ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் மதித்து வாழும் வாழ்க்கை மலரும். அது பெண்களுக்கான விடியலாக மட்டுமின்றிச் சமூகத்தின் விடியலாகவே பூபாளம் இசைத்து நிற்கும்.

அப்போதுதான் பெண்ணியவாதிகள் தம் லட்சியத்தை அடைந்ததாகப் பெருமிதம் கொள்ள முடியும். அந்த நாளை எதிர்நோக்கிச் செயல்படுவோம்.

# பின்இணைப்பு

## அமரந்தா

இயற்பெயர் விசாலாட்சி 1983இல் எழுதத் தொடங்கிய இவருடைய மொழிபெயர்ப்பில் ஒரு செவ்வாய்க்கிழமை, பகல்தூக்கம், பொலிவியன்டைரி, நிழல்களின் உரையாடல், சிலுவையில் தொங்கும் சாத்தான் நூல்களாக வெளிவந்துள்ளன.

சம்யுக்தா இவருடைய மற்றொரு பெயர். இவருடைய கவிதைகள் குறுநாவல்கள், சிறுகதைகள் இனிதான் தொகுக்கப்பட வேண்டும்.

## ஆழியார்

இயற்பெயர் மதுபாஷினி. ஈழக் கவிஞரான இவர் ஆஸ்திரேலியாவில் வாழ்கிறார். இவரது கவிதைத் தொகுதி

உரத்துப்பேச . . . .

## இளம்பிறை

இயற்பெயர் கபஞ்சவர்ணம் 88லிருந்து எழுதி வருகிறார்.

இளவேனில் பாடல்கள் (1988) மவுனக் கூடு (1993) ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது அனைத்துக் கவிதைகளும் நிசப்தம் (1998) என்ற பெயரில் தொகுப்பாக வெளிவந்துள்ளது. முதல் மனுஷி (2002) கிராமியப் பாடல்களை மிக நன்றாகப் பாடும் திறமையுடையவர்.

## உமா மகேஸ்வரி

1985லிருந்து கவிதைகள் எழுதுகிறார். பிற நூல்கள்: நட்சத்திரங்களின் நடுவே- கவிதைகள் (1990).

வெறும் பொழுது - கவிதைத் தொகுப்பு, 2002.

ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். யாரும் யாருடனும் இல்லை- நாவல், 2003.

## ஊர்வசி

ஈழத்தைச் சேர்ந்தவர். இவரது கவிதைகள் ஈழம் பெண் கவிஞர்கள் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

**ஔவை**

ஈழக் கவிஞர். இவரின் தொகுப்பு எல்லையைக் கடந்து கடந்த ஆண்டு வெளிவந்தது.

கொழும்பில் வசித்து வருகிறார். போருக்கும் வன்முறைக்கும் எதிராகக் குரல் கொடுப்பவர்.

**க்ருஷாங்கினி**

இயற்பெயர் பிருந்தா. 82லிருந்து எழுத ஆரம்பித்தவர்.

கானல் சதுரம் இவரது கவிதைத் தொகுப்பு (1998). பறத்தல் அதன் சுதந்திரம் என்ற பெயரில் பெண்கள் கவிதைகளைத் தொகுத்தவர்.

இவர் ஓவியங்களைப் பற்றி எழுதிய கட்டுரைகள் இனி தொகுக்கப்பட உள்ளன.

பெண் எழுத்தை ஊடகங்களுக்குக் கொண்டு செல்லுவதிலும் அடையாளப்படுத்துவதிலும் முழு வீச்சுடன் செயல்பட்டு வருகிறார்.

**கனிமொழி கருணாநிதி**

கருவறை வாசனை (1995) இவரது கவிதைத் தொகுப்பு.

பார்வைகள் இவரது கட்டுரைத் தொகுப்பு.

சிறு பத்திரிகைகளில் இவர் கவிதைகள் வெளிவருகின்றன.

**குட்டி ரேவதி**

இயற்பெயர் ரேவதி. 90களில் எழுதத் துவங்கியவர்.

இவரது கவிதை நூல்கள்: பூனையைப் போல் அலையும் வெளிச்சம் (2000), முலைகள் (2002), தனிமையின் ஆயிரம் இறக்கைகள் (2003).

பனிக்குடம் என்ற சிறுபத்திரிகையின் ஆசிரியர்.

சில்வியா கிளாத் கவிதைகளை மொழிபெயர்த்துத் தொகுத்துள்ளார்.

**சங்கரி**

சித்திரலேகா மௌனகுரு இவர் இயற்பெயர். மட்டக்களப்பில் வசிக்கிறார். சிவரமணி கவிதைகள் தொகுப்பின் பதிப்பாசிரியர்.

பெண்ணியவாதியும் ஆய்வாளரும் தொகுப்பாளரும் ஆவார். ஈழப் பெண் எழுத்தாளர்கள் மீதும் அவர்களின் எழுத்துகளை வெளி உலகுக்குக் கொண்டு செல்வதிலும் அதிக அக்கறை காட்டுபவர்.

ஆய்வுக் கட்டுரைகள் விமர்சனங்கள் பல வெளியாகியுள்ளன.

**சல்மா**

இயற்பெயர் இராசாத்தி. 90களில் எழுதத் துவங்கியவர்

ஒரு மாலையும் இன்னொரு மாலையும் - கவிதைத் தொகுப்பு - (2000)

இவரின் மற்றும் இரு நூல்கள் : பச்சை தேவதை (2003)

இரண்டாம் ஜாமங்களின் கதை- நாவல்

இவரது கவிதைகள் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

இலக்கிய விமர்சனங்களையும் எழுதிவருகிறார்.

**சன்மார்க்கா**

ஈழப் பெண் கவிஞர் சொல்லாத சேதிகள் மூலம் தமிழுலகுக்கு அறிமுகமானவர்.

**சிவரமணி**

ஈழக் கவிஞர். யுத்தத்தையும் அதன் விளைவுகளையும் கவிதையாக்கியவர். இவரின் கவிதைகளின் மொழியாளுமை அசாதாரணமானது.

சிவரமணியின் கவிதைகள் (1993) தொகுப்பாக வெளிவந்துள்ளன. பதிப்பாசிரியர் சித்திர லேகா மௌனகுரு.

இளவயதிலேயே (23) தன்னை மாய்த்துக் கொண்டார்.

**சுகிர்தராணி (1973)**

வேலூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணிபுரிகிறார்.

கவிதைத் தொகுப்புகள்: கைப்பற்றி என் கனவு கேள் (2002), இரவு மிருகம் (2004)

**சுபத்ரா**

இயற்பெயர் கிறிஸ்டி. இவரது கவிதைத் தொகுப்பு: எந்தன் தோழா (1990). சுட்டும் விழிச் சுடர் – ஆசிரியர். திருச்சி அகில இந்திய வானொலியில் செய்தி வாசிப்பாளர்.

**செல்வி**

ஈழத்தில் பிறந்தவர் போராளி. பெண்ணியவாதி. நாடகக் கலைஞராக விரும்பினார். யுத்தமும் அதன் நெருக்கடியும் ஏற்படுத்திய சிதைவுகளை மொழியாக்கியவர். இவரது கவிதைகள் நூல்களாக வெளிவந்துள்ளன.

இவர் கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டார்.

**தாமரை**

ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும் – கவிதைத் தொகுதியும்.

சந்திரக் கற்கள் – சிறுகதைத் தொகுப்பும் வெளிவந்துள்ளன.

வெகுஜனப் பத்திரிகையில் எழுதி வருகிறார். திரைப்படங்களுக்கும் பாடல்கள் எழுதுகிறார்.

**தேன்மொழி**

இயற்பெயர் சுதா. 96ல் எழுத ஆரம்பித்தவர். இவரது கவிதைத் தொகுதிகள். இசையில்லாத இலையில்லை (2001), அநாதி காலம் (2003)

**மாலதி மைத்ரி**

இயற்பெயர் மாலதி. 90களில் எழுதத் துவங்கியவர். சங்கராபரணி (2002), நீரின்றி அமையாது உலகு (2003) இரண்டும் இவருடைய கவிதைத் தொகுப்புகள்.

கிரணம் வெளியீடுகளின் பதிப்பாசிரியர்.

பாண்டிச்சேரியில் ஆரோவில்லில் ஆடை வடிவமைப்பாளராகப் பணியாற்றுகிறார்.

**இரா. மீனாட்சி**

70களில் எழுதத் தொடங்கியவர். நெருஞ்சி, சுடுபூக்கள்.

தீபாவளிப்பகல் – இவர்தம் மூன்று கவிதைத் தொகுப்புகள்.

மறுபயணம் தமிழிலும் ஆங்கிலத்திலும் கவிதை நூலாக வெளிவந்துள்ளது.

இரண்டு கவிதைத் தொகுப்புகள் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

பல ஆங்கிலக் கவிதைத் தொகுப்பில் இவரின் கவிதைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இரா. மீனாட்சி கவிதைகள் (2002) (முழுத்தொகுப்பு)

**வத்ஸலா**

48வது வயதில் எழுதத் துவங்கியவர்.

சுயம் - இவரது கவிதைத் தொகுதி.

சிறு பத்திரிகைகளிலும், வெகுஜன இதழ்களிலும் கவிதைகள், சிறுகதைகள் எழுதி வருகிறார்.

**வைகைச் செல்வி**

இயற்பெயர் ஆனி ஜோஸ்பின் செல்வம். 80களில் எழுத ஆரம்பித்தவர். இவரது கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் சிறுபத்திரிகைகளிலும், வெகுஜன இதழ்களிலும் வந்துள்ளன.

**அ. வெண்ணிலா**

வந்தவாசியில் வசிக்கிறார். இவரது கவிதைத் தொகுப்புகள்: என் மனசை உன் தூரிகைத் தொட்டு, நீரில் அலையும் முகம், கனவிலிருந்த கூடு- கடிதத் தொகுப்பு. குழந்தைகள் ஊருக்குப் போய்விட்டன- அச்சில்.

இவரது கவிதைகள் மலையாளத்திலும், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. பூங்குயில் சிற்றிதழின் இணையாசிரியர்.

**லீனா மணிமேகலை**

கவிஞர், ஊடகச் சிந்தனையாளர், குறும்படத் தயாரிப்பாளர்.

பறை, மாத்தம்மா-குறும்படங்கள் சிறப்புக் கவனத்திற்குரியன.

ஒற்றையிலையென (2003) கவிதைத் தொகுப்புக்கும் உரியவர்.

செல்லம்மாள் என்ற ஒரு மணிநேர குறும்படத்தில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

இந்தப்படம் ஜூன் மாதம் 18ஆம் தேதி நியூயார்க்கில் நடைபெற உள்ள அகில உலக திரைப்பட விழாவில் திரையிடத் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

## முதன்மை நூல்கள்


1. ஆழியாள், உரத்துப்பேச, மறுபதிப்பகம், சென்னை, 2000.
2. இளம்பிறை மௌனக்கூடு, செல்லமருது, திருவாரூர், 1993.
3. உமா மகேஸ்வரி, வெறும்பொழுது, தமிழினி, சென்னை, 2002.
4. கனிமொழி கருணாநிதி, கருவறை வாசனை, சாந்தி பிரசுரம், சென்னை, 1995.
5. குட்டிரேவதி, தனிமையில் ஆயிரம் இறக்கைகள், பனிக்குடம், சென்னை, 2003.
6. குட்டிரேவதி, முலைகள், தமிழினி, சென்னை, 2002.
7. கிருஷாங்கினி, கானல் சதுரம், கனவு, திருப்பூர், 1998.
8. கிருஷாங்கினி (தொ.ஆ.), பறத்தல் அதன் சுதந்திரம், காவ்யா, பெங்களூர், 2001.
9. சல்மா, ஒருமாலையும் இன்னொருமாலையும், காலச்சுவடு, நாகர்கோவில், 2000.
10. தேன்மொழி, அநாதிகாலம், குமரன் பதிப்பகம், சென்னை, 2003.
11. மாலதி மைத்ரி, சங்கராபரணி, காலச்சுவடு, நாகர்கோவில், 2001.
12. மாலதி மைத்ரி, நீரின்றி அமையாது உலகு, காலச்சுவடு, நாகர்கோவில், 2003.
13. வத்ஸலா, சுயம், ஸ்நேகா, சென்னை, 2000.
14. வெண்ணிலா, நீரில் அலையும் முகம், தமிழினி, சென்னை, 2001.
15. வைகைச் செல்வி, அம்மி, காவ்யா, கோடம்பாக்கம், 2002.
16. லீனா மணிமேகலை, ஒற்றையிலையென, கனவுப்பட்டறை, சென்னை, 2003.


## துணைமை நூல்கள்


1. முனைவர் அரங்க மல்லிகா, பெண்ணியகுரலதிர்வும் தலித் பெண்ணிய மொழியும் உடல், காவ்யா, சென்னை,, 2002.
2. சா. தேவதாஸ், பெண்ணியச் சிந்தனைகளும் படைப்புகளும், ஆரூத்புக்ஸ், சென்னை, 2002.
3. டாக்டர் க. பஞ்சாங்கம், பெண்ணெனும் படைப்பு, செல்வன் பதிப்பகம், புதுச்சேரி, 1994.

4. டாக்டர். க. பஞ்சாங்கம், *பெண்–மொழி–புனைவு*, காவ்யா, பெங்களூர், 1999.

5. முனைவர் ந. முத்துமோகன், *அமைப்பியல் பின் அமைப்பியல்*, காவ்யா, பெங்களூர், 1998.

6. யமுனா ராஜேந்திரன், *தொகுப்பும் மொழியாக்கமும், எனக்குள்பெய்யும் மழை*, எக்ஸில், சென்னை.

7. றஞ்சி, தேவா, விஜி, நிருபா, தொ.ஆ., *ஊடறு*, சென்னை, 2002.

8. எஸ்.வி. ராஜதுரை, வி. கீதா, *அன்னா அக்மதோவா கவிதைகள்*, வயல், சென்னை, 1989.

9. *பாரதியார் கட்டுரைகள்*, வானதி பதிப்பகம், சென்னை, 1998.

10. சிவசங்கரி, இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு, முதல் தொகுதி, தென்னிந்திய மொழிகள்.

## ஆங்கில நூல்கள்

1. Sara Gamble, (Ed.), *The Routledge Companion to Feminism and Post Feminism*, London, 2004.

2. Gayatri Chakravarthy Spinak, *Feminism and Critical Theory in Contemporary Literary Criticism.*

3. *'Asmita'*, Speaking in Tongues Women's world, Secunderabad, 2002.

4. 'Asmita', *The Tongue Set Free*, Secunderabad, 2002.

5. Women and Language in Literature and Society.

6. Raman Seldon, *A Reader's Guide to Contemporary Literary Theory*, Britain, The Harvest Press Ltd., 1985.

## இதழ்கள்

1. காலச்சுவடு, இதழ், 47, மே-ஜூன், 2003.

2. காலச்சுவடு, இதழ், 56, ஆகஸ்டு, 2004.

3. காலச்சுவடு, இதழ், 61, ஜனவரி, 2005.

4. உயிர்மை, இதழ், 17, ஜனவரி, 2005.

5. பனிக்குடம், இதழ் 1, ஜூலை-ஆகஸ்டு, 2003.

6. பனிக்குடம், இதழ் 1, செப்.-அக்., 2003.

7. பனிக்குடம், இதழ் 3, மார்ச்-ஏப்ரல், 2004.

❄❄❄❄❄

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| **Agreement in Dravidian Languages** | 100.00 |
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| சிரவையாதீனப் பதிப்புகள் | 30.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| சங்ககாலச் காசு இயல் | 30.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் | 35.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கிபி 500 வரை | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கிபி 501–900 வரை | 70.00 |
| மபொசியின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார் | 50.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் திவை. சதாசிவ பண்டாரத்தர் | 45.00 |
| பாரத வெண்பா | 80.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் 100 | 50.00 |
| **Studies in Manimekalai** | 70.00 |
| தமிழெழுத்தின் வரிவடிவம் | 30.00 |
| திராவிடமொழி இலக்கியங்கள் | 180.00 |
| பண்டைத்தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| கார் நாற்பது களவழி நாற்பது இன்னாநாற்பது இனியவை நாற்பது நன்னெறி (ஆங்கில மொழி பெயர்ப்புடன்) | 30.00 |
| நாவல் கலையியல் | 50.00 |
| நாடகவியல் | 70.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் – 3 தொகுதிகள் | 260.00 |
| குமரமலைப் பிள்ளைத் தமிழ் | 75.00 |

---

**546 மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் – பெண் Rs. 40.00**